www.onlineuthayan.com

# உதயன்

பக்கங்கள் : 26

சுடர் 27
கதிர் 223

வள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 22 வெள்ளிக்கிழமை (06/07/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

### இலங்கையில் பஜாஜ் வாகனங்களின் விலைகள் குறைப்பு

கொழும்பு,ஜூலை 6

இலங்கையில் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வாகனங்களின் விலையை பஜாஜ் ஒட்டோ நிறுவனம் குறைத்துள்ளது. தீர்வை அதிகரிப்பு காரணமாகக் குறைவடைந்த விற்பனையை மீள அதிகரிப்பதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முச்சக்கர வாகனங்களின் விலை 10 சதவீதத்தினாலும் இரு சக்கர வாகனங்கள், அவற்றின் தயாரிப்பு வகை அடிப்படையில் 5-14 சதவீதத்தாலும் குறைவடையும் என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. (த)

## அரசுக்குப் பாதுகாப்பளிப்பது ஊடகங்களின் பொறுப்பல்ல

### கூறுகிறார் ஜேர்மன் தூதுவர்

கொழும்பு, ஜூலை 6

அரசைப் பாதுகாக்க வேண்டியது ஊடகங்களின் பொறுப்பாகக் கருதப்பட முடியாது என இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் ஜென்ஸ் புளொட்னர் தெரிவித்துள்ளார்.

அரசின் தேசிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஊடகங்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும், விமர்சனங்களை தவிர்க்க வேண்டுமெனவும் அண்மையில் ஊடக அமைச் 04↘

## வைத்தியர்களின் போராட்டத்துக்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை

யாழ்ப்பாணம், ஜூலை 6

யாழ்.போதனா வைத்தியசாலை அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் இன்று வெள்ளிக்கிழமை நடத்தவிருந்த பணிப் புறக்கணிப்புப் போராட்டத்துக்கு யாழ்.நீதிமன்றம் நேற்று இடைக்காலத்தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

யாழ்.தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன் சிகேரா சமர்ப்பித்த அறிக்கை ஒன்றைப் 04↘

### தொழில்நுட்பப் பயிற்சி பெறவந்துள்ள

# இலங்கை விமானப் படையினரை தமிழகத்தை விட்டு அகற்றுங்கள்

## முதல்வர் ஜெயலலிதா மன்மோகனுக்கு கடிதம்



சென்னை, ஜூலை 6

இலங்கை விமானப் படையினருக்கு தமிழகத்தில் பயிற்சி வழங்குவது அனைத்துத் தமிழர்களையும் அவமானப்படுத்தும் செயல். மத்திய அரசின் தமிழர்களுக்கு எதிரான, தமிழ் இனத்துக்கு எதிரான இந்த நடவடிக்கையை தமிழக அரசு வன்மையாகக் கண்டிக்கிறது.

இந்த நடவடிக்கையை நிறுத்தி இலங்கை விமானப் படையினரை உடனடியாகத் திருப்பி அனுப்ப வேண்டும்.

இவ்வாறு இந்திய மத்திய அரசிடம் அவசர கோரிக்கை விடுத்துள்ளார் தமிழக முதல்வர் ஜெயலலிதா.

இது தொடர்பாக அவர் மத்திய அரசுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை இனக் கலவரத்தில் இடம்பெயர்ந்து இன்னலுற்றுக் கொண்டிருக்கும் இலங்கை வாழ் தமிழர்களுக்கு உரிமை 04↘

### கைதி ஒருவர் தொடர்ந்தும் 'கோமா' நிலையில்

கொழும்பு, ஜூலை 6

மோசமாகத் தாக்கப்பட்ட நிலையில் ராகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் தமிழ் அரசியல் கைதிகளில் ஒருவர் தொடர்ந்தும் கோமா நிலையிலேயே உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. இவர் இரண்டு கால்களிலும் படுகாயங்களுக்கு உள்ளாகியிருப்பதாகவும் தெரியவருகிறது. (த)

### சிறுவர் மீதான வன்புணர்வு அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 6

சிறுவர் மீதான பாலியல் வன்புணர்வு மற்றும் துஷ்பிரயோகச் சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் 5 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாகப் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண கூறியுள்ளார். கடந்த 6 மாதங்களில் 975 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சிறார்கள் வீட்டில் கவனிக்கப்படா 04↘

## கோரிக்கைகளை ஏற்காவிடின் கிழக்குத் தேர்தலில் தனி வழி

### அரசை மிரட்டுகிறது முஸ்லிம் காங்கிரஸ்

கொழும்பு, ஜூலை 6

கிழக்கு மாகாணசபைத் தேர்தலுக்கு முன்னர் அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றைச் செய்துகொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து வரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இந்த ஒப்பந்தத்தை அரசு ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதற்குத் தீர்மானித்துள்ளது.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட வேண்டுமென அக்கட்சியின் மூத்த 04↘

## தமிழருக்கு தீர்வை வழங்குமாறு மஹிந்தவிடம் வலியுறுத்தினேன்

### பிரதமர் மன்மோகன் சிங் தெரிவிப்பு



சென்னை, ஜூலை 6

தமிழர் பிரச்சினைக்கு இலங்கைக்கு உள்ளேயே விரைவில் தகுந்த அரசியல் தீர்வுகாண தேவையான ஏற்பாடுகளை செய்ய வேண்டிய அவசியம் குறித்து இலங்கை ஜனாதிபதியிடம் வலியுறுத்தினேன்.

- இவ்வாறு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள் 04↘

## தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு நிச்சயமாகப் பங்கு கொள்ளும்

### நம்பிக்கை வெளியிடுகிறார் கெஹலிய

கொழும்பு, ஜூலை 6

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் நிச்சயமாக இடம்பெறும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. பிரச்சினை தீர்வதற்கு இதைத் தவிர வேறு மார்க்கம் இல்லை என ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இந்தியத் தலை 04↘

## தமிழ் அரசியல் கைதியின் இறப்பு இராஜதந்திரிகளின் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 6

தமிழ் அரசியல் கைதிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் மற்றும் மோசமாகத் தாக்கப்பட்ட கைதி ஒருவர் உயிரிழந்தமை குறித்து இலங்கையில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு கூட்டமைப்பு நேற்று விளக்கியுள்ளது. இலங்கையரசு மீது அழுத்தங்களை பிரயோகித்து கைதிகளின் விடுதலையை துரிதப்படுத்துமாறும் கூட்டமைப்பு இராஜதந்திரிகளிடம் கோரிக்கை விடுத் 04↘

### அலரி விதை உட்கொண்ட 15 மாணவர்கள்

புத்தளம்,ஜூலை 6

பாடசாலை வளாகத்தில் காணப்பட்ட அலரி விதைகளை உண்ட தரம் ஒன்றைச் சேர்ந்த மாணவர்கள் 15 பேர் புத் 04↘

## ஊடக சுதந்திரம் இலங்கையில் இல்லையா?

### ரோக்கியோவில் பீரிஸ் பாய்ச்சல்

ரோக்கியோ, ஜூலை 6

அரசை எதிர்க்கும் இணையத்தளங்களை மூடியதை மனித உரிமைக் குழுக்களும் வொஷிங்டனும் கண்டித்ததை தொடர்ந்து ஊடக சுதந்திரத்தை தடுப்பதாக கூறப்பட்ட குற்றச்சாட்டுகளை புதன் கிழமை இலங்கை வன்மையாக மறுத் 04↘

## கிழக்குத் தேர்தலுக்காக புரிந்துணர்வு ஒப்பந்தம்

### கூட்டமைப்பின் கட்சிகளிடையே கைச்சாத்தாகும்

யாழ்ப்பாணம், ஜூலை 6

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டால் அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடும். இது தொடர்பில் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற 5 கட்சிகளிடையேயும் புரிந்துணர்வு உடன்படிக்கை விரைவில் ஏற்படுத்தப்படவுள்ளதாக தமிழ்த் தேசிய 04↘

## பாலியல் குற்றம் புரிவோரில் அதிகமானோர் பிக்குகளே

### சபையில் ஐ.தே.க. காட்டம்

கொழும்பு, ஜூலை 6

நாட்டில் இடம்பெற்ற பாலியல் வல்லுறவு குற்றச் செயல்களில் காவி உடை தரித்தவர்கள் அதிகமாக ஈடுபடுகின்றனர் என்று ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ நேற்று நாடாளுமன்றில் கூறினார். நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்ற பௌத்த பிக்கு பல்கலைக் கழக திருத்த 04↘

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாரடைப்புக் காரணமாகவே தமிழ்க் கைதி உயிரிழந்தார்

## தாக்குதல் மூலம் அல்ல என்கிறார் அமைச்சர் கஜதீர

கொழும்பு, ஜூலை 6

உயிரிழந்த தமிழ்க் கைதி நிமலரூபன் மாரடைப்புக் காரணமாகவே உயிரிழந்தார் என்றும் சிறைக்காவலர்களின் தாக்குதல் மூலம் அவர் உயிரிழந்தார் எனக் கூறப்படுவது பொய்யான தகவல் என்றும் சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் கூறினார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு-

தமிழ்க் கைதியொருவர் ராகமை வைத்தியசாலையில் உயிரிழந்தமை தொடர்பில் பொய்யான தகவலை நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் இந்த சபையில் கூறினார். சிறைக்காவலர்களின் தாக்குதல் மூலமே நிமலரூபன் உயிரிழந்தார் என்று கூறுவது பொய்யான தகவலாகும்.



அந்தக் கைதி மாரடைப்பு நோயால்தான் மரணமடைந்தார். சிறைக்காவலர்களின் தாக்குதல்களால் அல்ல.

2009 ஆம் ஆண்டு வவுனியா சிறைக்குக் கொண்டு வரப்பட்ட இந்தக் கைதி கடந்த மாதம் மஹர சிறைக்கு மாற்றப்பட்டார். இவருக்கு மாரடைப்பு நோய் ஏற்பட்டதால் அவர் ராகமை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அந்த நோயின் காரணமாகவே அவர் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, வவுனியா சிறையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. சிறைக்கைதிகள் வவுனியா சிறையில் மூன்று சிறைக்காவலர்களைச் சிறைப்பிடித்து வைத்தனர். இது பாரதூரமான விடயம்.

பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் மேற்கொண்ட மனிதாபிமான நடவடிக்கை மூலம் மூவரும் மீட்கப்பட்டனர். அந்த நடவடிக்கையின்போது எந்தக் கைதிக்கும் சிறிய காயங் கூட ஏற்படவில்லை.

மனிதாபிமான நடவடிக்கையின்போது அங்கு கத்திகள், தொலைபேசிகள் போன்றவை மீட்கப்பட்டன. அத்தோடு சிறைக்காவலர்களின் ஆடைகளையும் அவர்கள் வைத்திருந்தனர். அவர்கள் வேறேதும் சதித்திட்டங்களுக்குத் திட்டமிட்டிருந்தார்களோ என்று சந்தேகம் ஏற்பட்டுள்ளது. உயிரிழந்துள்ள தமிழக் கைதியின் பிரேதப் பரிசோதனை முடிவடைந்த பின்னரே உண்மை நிலைமை என்னவெனத் தெரியவரும் - என்றார். (த-சி)

# ஊடக மாபியாக்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை

## அமைச்சர் கெஹெலிய எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 6

ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் அரசுக்கோ, எனக்கோ மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் ஊடக சுதந்திரம் என்ற பதாகையை தூக்கிப் பிடித்துக் கொண்டு திரியும் ஊடக மாபியாக்களை அனுமதிக்கமுடியாது. கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என கண்டிப்புடன் கூறினார் ஊடக மற்றும் மக்கள் தொடர்பாடல் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல.

நேற்று கொழும்பில் நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அரசு ஊடக சுதந்திரத்தில் கைவைத்துள்ளது. இதனால் சில இணையத்தளங்கள் இயக்க முடியாதுள்ளது. வேறு சில இணையத்தளங்கள் மூடப்பட்டுள்ளன. இந்த நிலையில் ஊடக சுதந்திரம் கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளதே என ஊடகவியலாளர்கள் அமைச்சரிடம் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் தெரிவித்ததாவது:-

நீங்கள் கூறுவதை முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது. ஊடகத்துறை அமைச்சர் என்ற வகையில் ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்படவேண்டும்என்பதில் உறுதியாகவே இருக்கின்றேன்.

இணையத்தளச் செய்திகளினால் பல பாரதூரமான விரும்பத்தகாத பின் விளைவுகள் ஏற்பட்டுள்ளன. தனிப்பட்ட முறையில் அவதூறு விளைவிப்பதிலும், சேறு பூசுவதிலும் அவை ஈடுபட்டுள்ளன. பொது மக்களிடமிருந்து பெருமளவிலான, முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இவை தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு எனக்குண்டு. ஆனால் இந்த இணையத்தளங்கள் யாரால், எங்கிருந்து செயற்படுகின்றன. அதன் உரிமையாளர் யார்? என்பதும் தெரியவில்லை. முகவரியற்ற நபர்களினால் மேற்கொள்ளப்படும் செயல்களை அனுமதிக்கமுடியாது - என்றார். (த-2)

## தாக்கியதால்தான் கைதி மரணமானார் என்பதற்கு ஆதாரம் எதுவும் இல்லை

*கொழும்பு,ஜூலை 6*

*மரணமடைந்த சிறைக் கைதி, சிறைச்சாலை அதிகாரிகளினால் தாக்கப்பட்டதால் தான் உயிர் இழந்தார் என்பதற்கான ஆதாரங்களோ,சாட்சிகளோ கிடையாது என்கிறார் ஊடகம் மற்றும் தகவல் துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல.*

*வவுனியாச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதிகளுள் ஒருவரான நிமலரூபன் சிறைச்சாலை அதிகாரிகளால் கடுமையாகத் தாக்கப்பட்டதால் தான் உயிரிழந்துள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. பல அமைப்புக்களும் அரசியல்கட்சிகளும் வெளிப்படையாகவே இதைக் கூறியுள்ளன.*

*ஊடகங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் உங்களுடைய கருத்து என்ன என்று ஊடகவியலாளர்கள் கேட்ட போபோது இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு எந்த விதமான ஆதாரமும் இல்லை என்று ஒரே வரியில் கூறிவிட்டார் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல. (த-2)*

# நீதியான விசாரணை நடத்தி குற்றவாளிகளைத் தண்டியுங்கள்

## கைதியின் மரணம் குறித்து அரசிடம் கோருகிறார் சுவாமிநாதன் எம்.பி.

கொழும்பு, ஜூலை 6

தமிழ்க் கைதியான நிமலரூபனின் மரணம் தொடர்பாக நீதியான விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்க அரசு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.சுவாமிநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வவுனியா சிறைச்சாலையில் அண்மையில் இடம்பெற்ற அசம்பாவிதத்தின் போது சிறை அதிகாரிகளின் தாக்குதலில் காயமடைந்து மஹர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்த தமிழ் கைதியான நிமலரூபனின் மரணம் சம்பந்தமாக நீதியான விசாரணையை உடனடியாக மேற்கொண்டு குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும்.

இந்தச் சம்பவத்தை அரசு மூடிமறைக்க முற்பட்டால் உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் பெரிய நெருக்கடிகளைச் சந்திக்க நேரிடும்.

தமிழர்கள் மீது பிரச்சினைகளையும், வன்முறைகளையும் திணிக்க அரசு முற்படக் கூடாது.

விசாரணைகள் எதுவுமின்றி சிறைச்சாலைகளிலும், தடுப்பு முகாம்களிலும் நீண்டகாலமாக அடைத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகளை உடனடியாக விடுவிப்பதற்கோ அல்லது புனர்வாழ்வளிப்பதற்கோ புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

யுத்தம் முடிவடைந்து மூன்று வருடங்கள் கழிந்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் பயங்கரவாத முத்திரையை இவர்கள் மீது மீண்டும் குத்தாது மனிதநேயத்தின் அடிப்படையில் இவர்களது விடுதலைக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் வவுனியா சிறைச்சாலையில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் போன்ற அசம்பாவிதங்கள் மேலும் இடம்பெறாமல் தடுக்க முடியும்.

பல வருடங்களாக உறவுகளைப் பிரிந்து வாழும் இவர்கள் பல்வேறுபட்ட மன உளைச்சல்களுக்கு ஆளாகி உள்ளனர். சிறையில் வாடும் இவர்களை சமுகமயப்படுத்துவது கட்டாயமாகும். சிறையிலுள்ள தமிழ்க் கைதிகளை விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அரசு கூறிவந்தாலும் அதனைச் செயன்முறையில் காணக்கூடியதாக இல்லை.

இவ்வாறு தொடர்ந்தும் இவர்களின் விடுதலை தாமதப்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் மன அழுத்தம் காரணமாக மேலும் பலதரப்பட்ட அசம்பாவிதங்கள் இடம்பெற சந்தர்ப்பம் காணப்படுகிறது. இவ்வாறான அசம்பாவிதங்களால் பாதிக்கப்படுபவர்கள் அப்பாவித் தமிழ் இளைஞர்களே.

தமிழ் சிறைக் கைதிகள் மீது மேற்கொள்ளப்படும் ஜனநாயகமற்ற செயற்பாடுகளையும் அசம்பாவிதங்களையும் நிறுத்தி இவர்களது விடுதலைக்காக துரித நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும் - என்றார். (த)

# நோயாளர் நலன் பேணுமாறு நேற்று உண்ணாவிரதம்



யாழ்ப்பாணம், ஜூலை 6

யாழ். போதனா வைத்தியசாலையின் நோயாளர் நலன்களைப் பாதுகாக்குமாறு கோரி வைத்தியசாலைப் பணிப்பாளர் அலுவலகத்தின் முன்னாள் நோயாளர் உரிமைக்கான மக்கள் இயக்கத்தின் இணைச் செயலாளர் வி.கந்தவேள், எம்.உதயசிறி ஆகியோர் நேற்று உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர் இன்று.

யாழ். வைத்தியர்களின் பணிப்புறக்கணிப்பு நடைபெறவிருந்த நிலையில் நேற்று இந்த உண்ணாவிரதம் இடம்பெற்றது.

வைத்தியர்கள் பணிப்புறக்கணிப்புச் செய்தால் நோயாளர்கள் பாதிக்கப்படுவர். அதனை ஏற்க முடியாது. வைத்தியர்கள் அவ்வாறு செயற்படக் கூடாது என்பதற்காகவே உண்ணாவிரதப் போராட்டத்தில்ஈடுபட்டதாகவும் வைத்தியர்கள் இனிமேலும் புறக்கணிப்பில் ஈடுபட்டால் அவர்கள் ஈடுபடும் நாள்களின் இரண்டு மடங்காகத் தாம் உண்ணாவிரதம் இருப்போம் எனவும் கந்தவேள் தெரிவித்தார்.

உண்ணாவிரதம் இருப்பது தொடர்பாக சுகாதார அமைச்சின் செயலாளர், தன்னை வந்து சந்திக்குமாறு வைத்தியசாலைப் பணிப்பாளரூடாகத் தனக்கு அறிவித்துள்ளார் என்றும் வைத்தியசாலையிலிருந்து வைத்தியர்களை இடமாற்றம் செய்வதாக இருந்தால் பதில் வைத்தியர்களை நியமித்துவிட்டு இடமாற்றம் செய்யவேண்டும் என்றும் கந்தவேள் மேலும் கூறினார். (த-4)

# பாடசாலைகளையும் இராணுவமயமாக்க முனைகிறது மஹிந்த அரசு

## ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு,ஜூலை 6

மஹிந்த ராஜபக்ஷ அரசு பல்கலைக்கழகங்களையும் பாடசாலைகளையும் இராணுவமயப்படுத்த முனைகிறது. அதிபர்களுக்கும் கல்வி அதிகாரிகளுக்கும் இராணுவ சீருடை அணிவித்து கல்விச் சமூகத்தை மிரட்டிப்பார்க்கின்றது என குருணாகல மாவட்ட ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் அகிலவிராத் காரியவசம் குற்றஞ் சாட்டியுள்ளார்.

நேற்று எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஏற்கனவே பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவான புதிய மாணவர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இப்பொழுது பாடசாலை அதிபர்களுக்கும், வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் இராணுவத்தின் கேணல் தரத்திலான பயிற்சிகளை வழங்கி கேணல் அந்தஸ்து வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளதாம்.

இந்தப் பயிற்சிக்கான நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கும்படி பாடசாலை அதிபர்களுக்கும், வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாம்.

பல்கலைக்கழகங்களிலும், பாடசாலைகளிலும் ஏற்படும் பிரச்சினைகளை ஜனநாயக முறைப்படி தீர்ப்பதற்குப் பதிலாக அவற்றை இராணுவ அடக்குமுறைகள் மூலம் அடக்கி ஒடுக்குவதற்காகவே அரசு இந்த புதிய முறையை மேற்கொண்டுள்ளது. நாட்டில் நாளுக்கு நாள் சட்டம் ஒழுங்கு சீர்கேடு அதிகரித்தவண்ணமே இருக்கின்றன.

பொதுமக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழ் தள்ளப்பட்டுள்ளனர். விலைவாசி உயர்வினால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.பால் உணவு வகைகள் உள்ளிட்டு பாடசாலை உபகரணங்களையும், பெறமுடியாத நிலை. பஸ்கட்டணம், மின்சாரக் கட்டணம் என்பன அதிகரித்துள்ளன.

இவற்றுக்கெல்லாம் தீர்வு காண முன்வராத அரசு பாடசாலை அதிபர்களுக்கும் வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கும் இராணுவப்பயிற்சி வழங்கத் திட்டமிட்டுள்ளது. காலப்போக்கில் அதிபர்களும், ஆசிரியர்களும், இராணுவச் சீருடையில் வந்து பணியாற்ற வேண்டும் என்று கட்டளையிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை கல்விச் சமுகத்தை இராணுவமயப்படுத்தும் இந்தத் திட்டத்தை ஐக்கியதேசியக் கட்சி வன்மையாக எதிர்க்கின்றது- என்றார். (த-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காக்கை தீவில் திண்மக் கழிவுகளால் அயல் கிராம மக்கள் பெரும் பாதிப்பு

## அரச அதிபருக்கு இன்று முறைப்பாடு

வலி.தென்மேற்கு, ஜூலை 6

*காக்கை தீவுப் பகுதியில் கட்டுப்பாடின்றிக் கொட்டப்படும் திண்மக் கழிவுகளால் சுற்றுச் சூழலுக்கும் பொது மக்களுக்கும் வயல் நிலங்களுக்கும் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து யாழ். அரசாங்க அதிபரின் கவனத்துக்குக் கொண்டுவரப்படவுள்ளது.*

*இந்த நிலையில் பிரதேச சபை உறுப்பினர்கள் இன்று வெள்ளிக்கிழமை அரச அதிபரை நேரில் சந்திக்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

காக்கைதீவுப் பகுதியில் கல்லுண்டாய் வீதியில் வலி. தென்மேற்கு பிரதேச சபைக்குச் சொந்தமான காணியில் யாழ். மாநகர சபையால் கொட்டப்படும் திண்மக் கழிவுகளால் வாகனப் போக்குவரத்துக்கும் இடையூறு ஏற்படுகிறது. அது மட்டுமன்றி வீதியால் செல்லும் மக்களுக்கும் அயல் கிராமத்தில் வசிக்கும் மக்களுக்கும் பாதிப்பு ஏற்படுகிறது.

கட்டுப்பாடின்றி கொட்டப்படும் பலவிதமான திண்மக் கழிவுகளிலிருந்து வீசும் துர்நாற்றம், திண்மக் கழிவுகளை எரியூட்டும் போது ஏற்படும் புகை மண்டலம் போன்றவற்றால் சுகாதாரத்துக்குப் பங்கமேற்படுகின்றது.

அத்துடன் நெல் விளையும் வயல் நிலங்களையும் கால்நடைகளின் மேய்ச்சல் தரைகளையும் பொலித்தீன் பைகள் ஆக்கிரமித்துள்ளன. இதனால் கால் நடைகளின் உணவு மாசடைவதுடன் காலபோக நெற்செய்கைக்காக வயல் நிலங்களையும் பண்படுத்த முடியாமல் உள்ளது.

மக்களுக்கும் சுற்றச் சூழலுக்கும் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து பல தடவை யாழ். மாநகர சபையிடம் அறிவித்திருந்த போதிலும் இதுவரை மாற்று நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இந்த நிலை குறித்து யாழ்.அரச அதிபருக்கு சுட்டிக் காட்ட முன்வந்துள்ள பிரதேச சபை உறுப்பினர்கள் இன்று வெள்ளிக்கிழமை அரச அதிபரை சந்திக்கவுள்ளார்கள். (ம-155)

### கழிவுகள் தேக்கம்; இறைச்சி வெட்டத்தடை

நான்கு நாள்களாக கொல்களக் கழிவுகள் அகற்றப் படாததால் இறைச்சி வெட்டுவது பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் தடை செய்யப்பட்டது. இதனால் நேற்று இறைச்சிக் கடை திறக்கப்படவில்லை. இதனால் தனக்கு ஏற்பட்ட இழப்புக்கு நட்டஈடு கோரி குத்தகையாளர் பிரதேச சபைக்கு முறையிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் சாவகச்சேரி பிரதேச சபையின் கொடிகாமம் பொதுச் சந்தை இறைச்சிக்கடையில் இடம் பெற்றது. இதுதொடர்பாக இறைச்சிக்கடை குத்தகையாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது:-

கொல்களத்தில் வெட்டப்படும் கால்நடைகளின் கழிவுகள் தினமும் பிரதேச சபையினரால் அகற்றப் படல் வேண்டும். ஆனால் இந்தக் கொல்களத்தில் வெட்டப்படும் கழிவுகள் தினமும் அகற்றப்படுவதில்லை.

இது தொடர்பாக பல தடைவைகள் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் தொடர்பு கொண்டும் பயன் கிடைக்கவில்லை.

கடந்த நான்கு நாள்களாக வெட்டப்பட்ட கால் நடைகளின் கழிவுகள் அகற்றப்படாமல் அந்தந்த இடங்களில் குவியல் குவியல்களாக இருந்தன.

இந்தநிலையில் நேற்று கொல்களத்தில் கால் நடையை வெட்டுவதற்கு முன்னர் அங்கு வந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர் இதற்குத் தடை விதித்தார்.

மறு அறிவித்தல் வரை கால்நடை வெட்ட வேண்டாமென உத்தரவிட்டுச் சென்று விட்டார். இதனால் நேற்று இறைச்சிக் கடை திறக்க முடியவில்லை. இதனால் எனக்கு ஏற்பட்ட இழப்புக்கு நட்டஈடு வழங்குமாறு பிரதேச சபைக்கு கடிதம் கொடுத்துள்ளேன்- என்றார்.

கடிதம் கொடுத்த பின்னர் பிரதேச சபை ஊழியர்களால் அங்கு காணப்பட்ட கழிவுகள் அகற்றப்பட்டு துப்புரவு செய்யப்பட்ட போதிலும் கொல்கள சுற்றாடலில் காணப்படும் பற்றைகளை வெட்டி துப்புரவு செய்த பின்னரே கொல்களத்தில் கால்நடைகள் வெட்டப்பட வேண்டும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

### கல்லுண்டாய் சுத்திகரிப்பு ஆலை ரூ.450 மில். செலவில்

யாழ்ப்பாணம்,ஜூலை 6

450 மில்லியன் ரூபா செலவில் கல்லூரண்டாயில் சுத்திகரிப்பு ஆலை அமைக்கப்படவுள்ளது.

இதற்கான அபிவிருத்திக் கூட்டம் நவாலியில் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் தலைமையில் இடம் பெறும்.

யாழ். - கிளிநொச்சி குடிநீர் விநியோகத் திட்டப் பணிப்பாளர் எந்திரி தி.பாரதிதாசன் இதற்கான விளக்கவுரையை கழக மட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கு வழங்கவுள்ளார்.

நவாலியில் உள்ள ஜே/134, ஜே/135, ஜே/136 ஆகிய பிரதேச மக்களும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-41)

### நயினாதீவுக்கான அபிவிருத்தி

## 'பாஜ்' வசதி செய்து கொடுப்பதற்கு முன்வந்தார் கடற்படை அதிகாரி

யாழ்ப்பாணம்,ஜூலை 6

பொருள்களை ஏற்றி இறக்குவதற்கு பாஜ் வசதி அளிப்பதற்கு வடபிராந்திய பிரதிக் கடற்படை அதிகாரி பி.எச்.டி.சில்வா முன்வந்துள்ளார்.

நயினாதீவு பெருங்குள வீதி அபிவிருத்திக்கு குறிகாட்டுவானில் இருந்து நயினாதீவுக்கு கல், மண், சிமெந்து மற்றும் பொருள்களை ஏற்றி இறக்க வேண்டியிருந்தது.

எனினும் பொருத்தமான 'பாஜ்' வசதி இல்லாததால் வீதி அபிவிருத்தி மந்தகதியில் இருந்தது. தற்போது வடபிராந்திய கடற்படை அதிகாரி 'பாஜ்' வசதி வழங்க முன்வந்துள்ளார்.

இவ்வாறு வேலணை பிரதேச சபை தலைவர் சி.சிவராசா தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

புறநெகும அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் 2012 இல் நயினாதீவில் பெருங்குள வீதி அபிவிருத்தி முன்னெடுக்கப்பட்டது.

எனினும் யாழ்ப்பாணத்தில் இருந்து குறிகாட்டுவான் ஊடாக கடல் வழியாக நயினாதீவுக்கு வீதி உட்கட்டுமானத்துக்கான பொருள்களை ஏற்றி இறக்க வசதியின்றி இருந்தது.

தற்போது இந்த விடயம் தொடர்பாக பிரதேச சபை தலைவர் கடற்படை அதிகாரியின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

இதனையடுத்து வடபிராந்திய பிரதிக் கடற்படை அதிகாரி குறிகாட்டுவானில் இருந்து நயினாதீவுக்கான உட்கட்டுமானப் பொருள்கள் ஏற்றி இறக்குவதற்கு அனுமதியை வழங்கவுள்ளார்.

இதனையடுத்து இவ்வாரத்தில் இருந்து இந்தச் சேவை ஆரம்பிக்கப்படும் என பிரதேச சபை தலைவர் மேலும் தெரிவித்தார். (ம-41)

## பருத்தித்துறை நகரப் பகுதியில் விடுதி அமைக்க மக்கள் எதிர்ப்பு

வடமராட்சி, ஜூலை 6

பருத்தித்துறை நகரப் பகுதியில் விடுதி ஒன்று மீண்டும் ஆரம்பிக்கப்படுவதை உடன் தடுத்து நிறுத்துமாறு பருத்தித்துறை கிழக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக குறித்த பகுதி மக்களிடம் கையெழுத்து வேட்டை ஒன்றையும் ஆரம்பித்துள்ளது.

சில காலத்துக்கு முன்னர் தும்பளைப் பகுதியில் இயங்கி வந்த மதுபான விற்பனையுடன் கூடிய றெஸ்ரோரண்ட் அந்தப் பகுதி மக்களின் எதிர்ப்பால் மூடப்பட்டது.

தற்போது இதேபோன்ற றெஸ்ரோரண்ட் ஒன்று கடற்கரையுடன் சேர்ந்துள்ள முனைப் பகுதியில் ஆரம்பிக்க உயர் அதிகாரிகளால் அனுமதி வழங்கப்பட்டு அதற்கான ஆரம்ப வேலைகள் நடைபெற்று வருகின்றன என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

குடிமனைகளுடன் அண்டிய பகுதியில் றெஸ்ரோரண்ட் ஆரம்பிக்கப்படுவதால், அந்தப் பகுதியில் பல சீர்கேடுகளுக்கு மக்கள் இலக்காக வேண்டி வரும். ஆதலால் இங்கு றெஸ்ரோறண்ட் ஒன்று ஆரம்பிக்கப்படுவதை உடன் நிறுத்த வேண்டும் என மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

றெஸ்ரோரண்ட் ஆரம்பிக்கப்படுவதை நிறுத்துமாறு கோரி பருத்தித்துறை பிரதேச செயலர், பருத்தித்துறை மாவட்டநீதிபதி, கல்வித்திணைக்கள அதிகாரி ஆகியோர்களிடம் மனு ஒன்றைக் கையளிப்பதற்காக பருத்தித்துறை கிழக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் மக்களிடம் கையெழுத்துக்களைப் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-8)

### கிராம அலுவலர் பிரிவுகளில் பட்டதாரிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை 6

பட்டதாரி பயிலுநர்கள் அனைவரும் பிரதேச செயலக பிரிவுக்குள் உள்வாங்கப்பட்டு ஒவ்வொரு கிராம அலுவலருக்கும் மூன்று பேர் என்ற அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளனர்.

கிராமிய மட்டத்தில் உள்ள மக்களின் அடிப்படைப் பிரச்சினை, வயது முதிர்ந்தோர் விவரம், வேலையற்றோர் விவரம், மற்றும் கல்வி, சுகாதாரம், வீதி, ஆலய விவரங்களை தொகுத்து கிராம அலுவலர் ஊடாக வழங்குமாறு பிரதேச செயலர்கள் உத்தரவிட்டுள்ளனர்.

பட்டதாரி பயிலுநர்கள் அனைவருக்கும் உரிய தரத்தில் அவர்களுக்கான இடம் ஒதுக்கி பயிலுநர் பயிற்சியில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும். அதுவரையில் கிராம அலுவலர் ஊடாக முழுமையான பயிற்சியைப் பெறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-50)

### மழை நீர் தேக்கக் குளம்

யாழ்ப்பாணம்,ஜூலை 6

காரைநகர் பாலவோடையில் மழைநீரைத் தேக்கி வைப்பதற்கென குளம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இந்தக் குளம் அமைப்பதற்கு என வெற்றுக் காணி ஒன்றை காரைநகர் பிரதேச சபையிடம் வழங்குவதற்கு சமூக நலன் விரும்பி ஒருவர் முன்வந்து உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பிரதேசத்தில் உள்ள உவர் தன்மையுடைய கிணற்றுநீரை நன்னீராக மாற்றும் பயனாக இந்தக் குளம் அமைக்கப்படவுள்ளது.

மிகவும் ஆழம் கூடியதாய் இந்தக் குளம் அமைக்கப்பட்டு அதில் மழை நீரைத் தேக்கி வைப்பதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேசமயம் இந்தப் பிரதேசத்தில் உள்ள அனேகமான முழுக் கிணறுகளும் கடும் உவர்த் தன்மை கொண்டுள்ளதால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம-17)

## கைதடி அரச முதியோர் இல்லத்தில் பிரத்தியேகமாக இரண்டு விடுதிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை 6

கைதடி அரச முதியோர் இல்லத்தில் பிரத்தியேகமாக இரண்டு சிறப்பு விடுதிகள் அமைக்கப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்டன.

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் இதற்கென ஒதுக்கப்பட்ட ஐந்து மில்லியன் ரூபா நிதி மூலம் இந்த சிறப்பு விடுதிகள் அமைக்கப்பட்டன.

ஆண் மற்றும் பெண் வயோதிபர்களுக்கென இந்த தனித்தனி இரண்டு விடுதிகள் அமைக்கப்பட்டன. முதியோர் இல்லத்தில் தங்கியிருக்கும் முதியோர்களில் கடும் நோய் வாய்ப் பட்டிருக்கும் சுமார் 20 வரையிலான முதியோர்கள் இந்த சிறப்பு விடுதியில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த சிறப்பு விடுதியில் தங்கியிருக்கும் முதியோர்களுக்கு விடுதிப் பணியாளர்களால் சிறந்த முறையிலான பராமரிப்பு வழங்கப்பட்டு வருகின்றது.

மிகவும் நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்ட இந்த சிறப்பு இரண்டு விடுதிகளும் சிறந்த முறையில் செயற்பட்டு வருகின்றன.

இதேவேளை, இல்லத்தில் முதியோர்களின் வசதி கருதி தியான மண்டபம் ஒன்றை அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் இதற்கென ஒதுக்கப்பட்ட ஐந்து மில்லியன் ரூபா நிதி மூலம் இந்த சிறப்பு விடுதிகள் அமைக்கப்பட்டன.**

தேசிய முதியோர் செயலகத்தின் நிதி உதவியுடன் இந்த தியான மண்டபம் அமைக்கப்படவுள்ளது.

முதியோர் இல்லத்தில் தங்கியிருக்கும் முதியோர்கள் இறை வழிபாடுகளை மேற்கொள்வதற்காக [illegible] மண்டபம் [illegible] அமைக்கப்படவுள்ளது. (ம-17)

## அனுமதிப்பத்திரமின்றி இயங்கிய வர்த்தக நிலையங்கள் மீது வழக்கு

தென்மராட்சி, ஜூலை 6

வியாபார நிலையங்களை நடத்துவதற்கான உத்தரவுப் பத்திரமின்றி இயங்கிய வர்த்தக நிலையங்கள் மீது பொலிஸாரும் சுகாதாரப் பகுதியினரும் இணைந்து வழக்குகள் தாக்கல் செய்யவுள்ளனர்.

கடந்த வாரம் இடம் பெற்ற திடீர் பரிசோதனையின் போது பல வர்த்தக நிலையங்கள் வியாபார உத்தரவுப் பத்திரமின்றி காணப்பட்டதையடுத்து அந்த வர்த்தகர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக வர்த்தக நிலையங்களுடன் தொடர்பு கொண்டபோது, அந்தந்த உள்ளூராட்சி சபைகளின், உத்தியோகத்தர்களால் வழங்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் மீள வழங்கப்பட்டு பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் சிபார்சு செய்யப்பட்ட பின்னர் உள்ளூராட்சி சபையில் உரிய கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. உள்ளூராட்சி சபைகளில் பணம் செலுத்தி நான்கு மாதங்களுக்கு மேலாகியும் உத்தரவுப் பத்திரம் வழங்கப்படவில்லை. பணம் செலுத்தியதற்குரிய பற்றுச்சீட்டு வைத்துள்ள போதிலும் வியாபார உத்தரவுப் பத்திரம் காட்சிப்படுத்தப்படாமையினால் தம்மீது வழக்குத் தொடரப்படவுள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

**உள்ளூராட்சி சபைகளில் பணம் செலுத்தி நான்கு மாதங்களுக்கு மேலாகியும் உத்தரவுப் பத்திரம் வழங்கப்படவில்லை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலரி விதை...

தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவமொன்று நேற்று வியாழக்கிழமை இடம் பெற்றுள்ளது.

இவ்வாறு அலரி விதைகளை உட்கொண்ட மாணவர்கள், வாந்தி, வயிற்றோட்டம் மற்றும் மயக்கம் போன்ற நோய்களால் பீடிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புத்தளம், ஆணமடுவ, மஹாகும்புக்கடவல கனிஸ்ட வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர்களே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களாவர். (த)

## இலங்கை விமான...

கள் கிடைக்கவும், அங்குள்ள சிங்களவர்களுக்கு இணையாக அவர்கள் வாழவும் அ.தி.மு.க.அங்கம் வகிக்கும் மத்திய அரசு இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும் என்ற குரல் உலக அளவில் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கின்ற இந்தத் தருணத்தில், இலங்கையின் விமானப் படையினர் தமிழ் நாட்டில் உள்ள தாம்பரம் விமானப்படை நிலையத்தில் ஒன்பது மாத காலத் தொழில்நுட்பப் பயிற்சி பெற வந்திருக்கிறார்கள் என்ற செய்தி தமிழர்களின் நெஞ்சில் வேலைப் பாய்ச்சுவது போல் அமைந்துள்ளது. மத்திய அரசின் தமிழர்களுக்கு எதிரான, தமிழ் இனத்திற்கு எதிரான இந்த நடவடிக்கைக்கு எனது கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இலங்கையில் முகாம்களில் வாடிக்கொண்டிருக்கும் தமிழர்கள் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பிச் சென்று, சிங்களவர்களுக்குச் சமமான உரிமைகளை பெறும் வரை, பிற நாடுகளுடன் இணைந்து இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட வேண்டும் என்று தமிழக சட்டமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மீது, வாய் மூடி மௌனியாக உள்ள மத்திய அரசு, இலங்கை விமானப் படையினருக்கு தமிழகத்தில் பயிற்சி அளிப்பது தமிழர்களை அவமானப்படுத்தும் செயல் ஆகும்.

இலங்கை இனப் போரில், பன்னாட்டு போர் விதிமுறைகளை மீறி செயல்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற சர்வதேச அளவில் குரல்கள் ஒலித்துக் கொண்டிருக்கின்ற இந்தத் தருணத்தில், இலங்கையைச் சேர்ந்த விமானப் படையினருக்கு, இந்தியாவில், அதிலும் தமிழகத்தில் தொழில்நுட்பப் பயிற்சி அளிப்பது பொருத்தமற்றது மட்டும் அல்ல, தமிழர்களுக்கு எதிரான செயலும் ஆகும் என்பதை மத்திய அரசுக்கு திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். உடனடியாக இந்த நடவடிக்கையைத் திரும்பப் பெற்றுக் கொண்டு விமானப் படை வீரர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்ப ஆவன செய்ய வேண்டும் என்று தமிழக மக்களின் சார்பில் மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கின்றேன்- என்றுள்ளது. (த)

## பாலியல் குற்றம் ...

சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தற்போது நாடாளுமன்றில் கொண்டுவரப்பட்டிருக்கும் பௌத்த பிக்கு பல்கலைக்கழக சட்டமூலம் அவசர அவசரமாகக் கொண்டுவரப்பட்டுள்ளது. இதில் பல குறைபாடுகள் உள்ளன. இச்சட்டமூலத்தை உயர்கல்வி அமைச்சும் பௌத்த சாசன அமைச்சும் ஒன்றிணைந்து கொண்டுவந்திருக்க வேண்டும். ஆனால், இது அப்படி நடக்கவில்லை.

இச்சட்டமூலம் தொடர்பில் மகாநாயக்கர்களின் ஆலோசனைகள் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இங்கு அவ்வாறு இடம்பெறவில்லை. அது ஒரு குறைபாடாகவுள்ளது.

இச்சட்டமூலத்தை இவ்வாறு அவசர அவசரமாக நாடாளுமன்றுக்குக் கொண்டுவர முடியாது. இச்சட்டத்தை நாம் எதிர்க்கவில்லை. ஆனால், இது முறைப்படி கொண்டுவரப்படவேண்டும். குழு நிலையில் இதை விவாதித்து பௌத்த பிக்குகளின் ஆலோசனைகளை உள்ளடக்கி இச்சட்டமூலத்தைக் கொண்டுவந்தால் அதற்கு நாம் எமது பூரண ஆதரவை வழங்குவோம்.

ஏனென்றால், இச்சட்டமூலத்தில் நல்ல விடயங்களைத் தவிர கூடாத விடயங்கள்தான் அதிகம் உள்ளன. அரசமைப்புக்கு முரணாக இச்சட்டமூலம் இருப்பதால் இதை சர்வஜன வாக்கெடுப்பு மூலம்தான் நிறைவேற்றவேண்டும்.

விகாரைகளையும், புத்தர் சிலைகளையும் அமைப்பதால் எதுவித பிரயோசனமும் இல்லை. மற்ற மதங்களையும் நாம் மதிக்கவேண்டும். இல்லாவிட்டால் பௌத்த மதத்தை ஏனையவர்கள் மனிதாபிமானமற்ற மதமாய்ப் பார்ப்பர்.- என்றார்.

## தெரிவுக்குழுவில்...

வர்களும், அதி முக்கிய பிரமுகர்களும் அடிக்கடி வந்து போகின்றனர். ஜனாதிபதியையும் சந்திக்கின்றனர் - அதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் அவர்கள் சந்திக்கின்றனர். இறுதியாக வந்த சென்ற இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனனையும் சந்தித்துக் காட்டமாகப் பேசியதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன. இது பற்றி அரசின் கருத்து என்ன என்று நேற்றைய அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் ஊடகவியலாளர்கள் அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்கள்.

இதன்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

சகல அரசியல் கட்சிகளும் உள்ளடங்கும் நாடாளுமன்ற அதிகாரம் கொண்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் மூலம் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே அரசின் நிலைப்பாடு.

இதன் யதார்த்தத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் ஏற்றுக்கொண்டு, இந்த தெரிவுக் குழுவில் இடம்பெறுவர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு என்றார். (த-2)

## ஊடக சுதந்திர...

துள்ளது. இலங்கையின் புதினப் பத்திரிகைகளைப் பாருங்கள். இலங்கையில் பத்திரிகைச் சுதந்திரம் இல்லை என உங்களால் கூற முடியுமா என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் டோக்கியோவில் ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோது கேள்வியெழுப்பினார்.

வார இறுதியில் வெளிவரும் பத்திரிகைகளில் அரசை மோசமாக விமர்சிக்கும் கட்டுரைகளை நிறைய காண முடியும். ஆனால் இவற்றுக்கு ஏதும் நடப்பதில்லை எனவும் அவர் தெரிவித்தார். நீண்டகாலமாக நடைபெற்ற யுத்தம் 2009 இல் நிறைவடைந்த பின் அவசரகால சட்டத்தை நீக்கி யுள்ள இலங்கை அரசு, நம்பிக்கை நிறைந்த புதிய அத்தியாயத்தைத் தொடங்கியுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். கடந்த வெள்ளிக்கிழமை 7 ஊடகவியலாளர்கள் உட்பட 9 பேர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டதை அடுத்து, சில அரச எதிர்ப்பு இணையத்தளங்கள் மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சிறுவர் ...

மல் விடப்படும்போது, பேஸ்புக் போன்ற சமூக இணையத்தளங்கள் ஊடாக, அல்லது செல்லிடத் தொலைபேசி ஊடாகக் குற்றம்புரிபவர்களின் தாக்குதல்கள் அபாயத்துக்கு உள்ளாகுவதாக அவர் கூறினார்.

இத்தகைய குற்றம்புரிபவர்களின் நடத்தையை ஆபாசப் படங்கள் தூண்டுவதாகவும் இந்தப் பிரச்சினையை எதிர்கொள்வதற்குக் கடுமையான சட்டங்கள் தேவை எனவும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார். அதேவேளை கடந்த வருடம் 1775 பாலியல் வன்புணர்வு சம்பவங்கள் அறிக்கையிடப்பட்டதாகவும் 1169 சம்பவங்கள் சிறார்கள் தொடர்பானவை எனவும் அவர் கூறினார். இந்தச் சம்பவங்கள் தொடர்பான 90 சதவீதமான சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் என அவர் கூறினார். (த)

## கிழக்குத் தேர்தலுக்காக...

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான சுரேஷ் க.பிரேமசந்திரன் 'உதயனுக்குத்' தெரிவித்தார். கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பான இறுதி முடிவுகளை எடுப்பதற்காக நேற்று கூட்டமைப்பின் 6 பேர் கொண்ட குழு கொழும்பிலுள்ள கூட்டமைப்பின் அலுவலகத்தில் பேச்சு நடத்தியது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், மாவை.சேனாதிராஜா, சுரேஷ் பிரேமசந்திரன், செல்வம் அடைக்கலநாதன் மற்றும் வீ.ஆனந்தசங்கரி, த.சித்தார்த்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இது தொடர்பாக சுரேஷ் பிரேமசந்திரன் மேலும் தெரிவித்ததாவது:

இந்தக் கலந்துரையாடலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கிழக்கு மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டால் அதில் போட்டியிடுவது என்று தீர்மானிக்கப்பட்டது. எனினும் எந்தச் சின்னத்தில் போட்டியிடுவது போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்ட போதிலும் முடிவுகள் எதுவும் எட்டப்படவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற 5 கட்சிகள் இடையிலே இணக்கப்பாட்டை எட்டுவதற்காக புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் எமது செயற்பாடுகள் முன்னெடுத்துச் செல்லப்படும். இன்றும் மேற்படி குழு சந்தித்துக் கலந்துரையாடும் - என்றார். (த-5)

## அரசுக்குப் பாதுகாப்பளிப்பது...

சின்செயலாளர் ஆங்கில ஊடகமொன்றில் கோரியிருந்ததை அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், ஏனெனில் ஊடகங்கள் அரசைச் சரியான பாதையில் இட்டுச் செல்லும் கடமையை முதன்மையாக மேற்கொள்ள வேண்டும் என்பதே தமது நிலைப்பாடு எனவும் புளொட்னர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கில் இராணுவத்தினரின் பிரசன்னம் வெகுவாகக் குறைக்கப்பட்டு வருவதாக அரசு அறிவித்துள்ளமை மகிழ்ச்சி அளிக்கிறது. பாதுகாப்பு நோக்கத்துக்காக இராணுவத்தினரை அதிகளவில் நிலைநிறுத்துவது என்பது மிகவும் நிதானமாக எடுக்க வேண்டிய தீர்மானம்.

இராணுவத் தளபதியை விடவும் அரசியல்வாதிகள் இந்தத் தீர்மானம் குறித்துக் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியது அவசியமானது. ஏனெனில், அதிகளவு படையினரை நிலைநிறுத்துவதனால் சில நேரங்களில் எதிர் விளைவுகள் ஏற்படக் கூடிய அபாயம் காணப்படுகின்றது. குறிப்பாக நல்லிணக்கப் பணிகளுக்கு இராணுவத்தின் பிரசன்னம் தடையாக அமையக் கூடும்.

அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுக்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. இரண்டு தரப்பினரதும் தேவைகள் பூர்த்தி செய்யப் [illegible] நடத்தப்பட வேண்டியது அத்தியாவசியமானது.

நல்லிணக்க ஆணைக் குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகள் மிகவும் சிறந்த முறையில் முன்வைக்கப்பட்டுள்ளன. சில நாடுகள் இந்த அறிக்கையை விமர்சனம் செய்த போதிலும் ஜேர்மனி ஒருபோதும் இந்த அறிக்கையை விமர்சனம் செய்யவில்லை.

ஆணைக்குழுவின் அறிக்கையில் பல ஆக்கபூர்வமான பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன. அவற்றை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமானது-என்றார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைத்தியர்களின் ...

பரிசீலித்த யாழ்.நீதிமன்ற நீதிவான் மா.கணேசராஜா இந்த இடைக்காலத்தடை உத்தரவைப் பிறப்பித்தார். பணிப்புறக்கணிப்பு நடத்தப்பட்டால் நோயாளர்கள் அசௌகரியங்களை எதிர்கொள்வார்கள் எனவும் இதனால் அநாவசியமான உயிரிழப்புக்கள் ஏற்படும் எனவும் சமன்சிகேரா தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனைப் பரிசீலித்த நீதிவான் பணிப்புறக்கணிப்புக்கு இடைக்காலத்தடை உத்தரவுபிறப்பித்தார்.

வைத்தியசாலையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் முறைகேடுகள், புற்றுநோய் வைத்திய நிபுணர் என்.ஜெயக்குமாரன் வீடு மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்தக் கோரியும், வெளிநோயாளர் பிரிவு வைத்தியப் பொறுப்பதிகாரி இடமாற்றம் செய்யப்பட்டதை அடுத்து ஏற்பட்டுள்ள மனக்கசப்பு நிலை மற்றும் வைத்தியசாலையில் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட குழு, விசாரணை அறிக்கையை வெளியிடாததைக் கண்டித்தும் இன்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதாக மருத்துவர் சங்கத்தினர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-4)

## தமிழருக்கு...

ளார். தி.மு.க. தலைவர் கருணாநிதி எழுதிய கடிதத்துக்கு பிரதமர் மன்மோகன்அனுப்பிய பதில் கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

ஜூன் 21 ஆம் திகதி ரியோடி ஜெனிரோ மாநாட்டில் இலங்கை ஜனாதிபதியைச் சந்தித்தேன். அப்போது இந்தப் பிரச்சினை தொடர்பாகவும், இலங்கைத் தமிழர்கள் மறுவாழ்வு அமைத்து கொடுப்பதற்காக இலங்கை அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் அவரிடம் பேசினேன்.

தமிழர் பிரச்சினைக்கு இலங்கைக்கு உள்ளேயே விரைவில் தகுந்த அரசியல் தீர்வுகாண தேவையான ஏற்பாடுகளை செய்ய வேண்டிய அவசியம் குறித்து இலங்கை ஜனாதிபதியிடம் வலியுறுத்தினேன். அதுதான் இலங்கை தமிழர்கள் கௌரவமான வாழ்க்கை வாழவும், சொந்த வீட்டில் வசிப்பது போன்ற உணர்வை பெறவும் போதுமான நடவடிக்கையாக அமையும் என்றும் தெரிவித்தேன். - இவ்வாறு அந்த கடிதத்தில் பிரதமர் மன்மோகன் சிங் கூறியுள்ளார்.

## தமிழ் அரசியல் ...

துள்ளது. ஐ.நா. அமைப்புக்கள், மனித உரிமை அமைப்புக்கள், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இலங்கையிலுள்ள தூதரக அதிகாரிகள் ஆகியோருக்கு தமிழ் அரசியல் கைதிகளின் நிலை தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டுள்ளதாக கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தாவது:-

வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் நேற்று மாலை கொழும்பிலுள்ள தனியார் 'ஹோட்டலில்' இடம்பெற்ற சந்திப்பில் தமிழ்க் கைதிகளின் நிலை தொடர்பாக அவர்களுக்குத் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டது.

பொலிஸாரும், சிறைக்காவலர்களும் மூர்க்கத்தனமாக தாக்கியதிலேயே கைதி மரணமடைந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த நிலையில் இவரது உடலை அவரது சொந்த ஊரில் தகனம் செய்வதற்கு பொலிஸார் நீதிமன்றின் ஊடாக தடையுத்தரவினைப் பெற்றுள்ளனர். இது ஒரு அடிப்படை உரிமை மீறல் என்பதை சர்வதேச பிரதிநிதிகளுக்கு எடுத்துக் கூறினோம்.

அத்துடன் தமிழ் அரசியல் கைதிகளின் விரைவான விடுதலைக்கு உதவ வேண்டும் என்றும் அவர்களிடம் கோரிக்கை விடுத்தோம். தமிழ் கைதிகளின் மீதான சித்திரவதைகள், மனித உரிமை மீறல்கள் மேற்கொள்ளப்படாது இருப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டிருந்தோம். அவர்கள் அரசுக்கு அழுத்தங்களை பிரயோகித்து அதனூடாக நடவடிக்கையை விரைவில் எடுப்பார்கள் என்று நம்புகின்றோம் - என்றார். (த-5)

## கோரிக்கைகளை...

உறுப்பினர்கள் பலர் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீமிடம் வலியுறுத்தியிருந்தனர். இதனையடுத்து அவர் அரச முக்கியஸ்தர்களுடன் பேச்சு நடத்தியிருந்தார். இதன் அடிப்படையில் முஸ்லிம் மக்களின் முக்கியமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு அரசு உறுதிப்பாட்டை வெளிப்படுத்துவதென்றும், அதற்கு அடிப்படையாக பரஸ்பர புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றைச் செய்துகொள்வதென்றும் இணக்கம் காணப்பட்டது.

இதற்கமைய, அரசுடன் செய்துகொள்ளவேண்டிய ஒப்பந்தத்தைத் தயாரிப்பதற்கான பணிகளில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நேற்று முழுவீச்சில் ஈடுபட்டது. பெரும்பாலும் இன்று இந்த ஒப்பந்தத்தின் நகல் அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்படும்.

நல்லிணக்க ஆணைக்குழு வின் அறிக்கைக்கமைய முஸ்லிம் மக்கள் தொடர்பில் கட்சியில் மேற்கொள்ளப்பட்டுள்ள சிபார்சுகளையும் நடைமுறைப்படுத்தல், 13 ஆவது திருத்தத்தின் அமுலாக்கம், குறிப்பாக மாகாணங்களுக்கான காணி, பொலிஸ் அதிகாரங்களின் தேவை, கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் முதலமைச்சரின் வகிபாகம் என்பன இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக முஸ்லிம் காங்கிரஸின் உயர்மட்ட வட்டாரங்கள் நேற்றிரவு 'உதயனி'டம் தெரிவித்தன.

''இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம், வெறுமனே ஒரு சாதாரண விடயமாக இருக்காது. இவற்றை ஏற்றுக்கொள்வதாக அரசு எங்களுக்கு எழுத்துமூலம் உத்தரவாதம் தரவேண்டும். இந்தக் கோரிக்கைகளுக்கு அரசு உடன்படாவிட்டால் கிழக்கில் தனித்துப் போட்டியிடுவதைத் தவிர வேறு வழியில்லை.'' - என்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்மட்டப் பிரமுகர் ஒருவர் எம்மிடம் சுட்டிக்காட்டினார்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கைதி நிமலரூபனின் மரணம்; நம்பகமான விசாரணை வேண்டும்

சிறைகளில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் எது நடக்கக்கூடாது என்று அவர்களில் அக்கறையுள்ள உள்ளங்கள் அங்கலாய்த்துக் கொண்டிருந்தனவோ அது எதிர்பாராத முறையில் நடந்து முடிந்துள்ளது மட்டுமல்ல அனைவரையும் அதிர்ச்சியிலும் கவலையிலும் ஆழ்த்தியிருக்கின்றது.

ஆம்.வவுனியா சிறையிலிருந்து கொழும்பு மஹர சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ள 32 கைதிகளில் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த கணேஸ் நிமலரூபன் என்ற 28 வயதுக் கைதி மரணமடைந்துள்ளார். சிறைக்காவலர்களாலும் அதிகாரிகளாலும் கண்மூடித்தனமாகத் தாக்கப்பட்டதனாலேயே இந்தக் கைதி மரணிக்க நேரிட்டது என்று மனித உரிமை ஆர்வலர்களும் அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் குற்றஞ் சாட்டுகின்றார்கள். இவ்வாறு தாக்குதலுக்குள்ளான மேலும்10 கைதிகள் மஹர மற்றும் ராகம மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

வவுனியா சிறையில் கடந்த மாதம் 29 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவம் ஒன்றின்போது சிறை அதிகாரிகள் மூவரை தமிழ்க் கைதிகள் தடுத்துவைத்துக் கொண்டு தமது கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு வற்புறுத்தியுள்ளனர். இதையடுத்து அங்கு அழைக்கப்பட்ட பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப் படையினரும் தடுத்து வைக்கப்பட்டிருந்த அதிகாரிகளை மீட்டுள்ளனர். அதன்போது கடும் தாக்குதல்களுக்குள்ளான கைதிகள் அனைவரும் அனுராதபுரம் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். அங்கேயும் அவர்கள் கடுமையான தாக்குதல்களுக்குள்ளானதாகவும் காயமடைந்த கைதிகள் மஹர மற்றும் கண்டி போகம்பரை சிறைகளுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. இவ்வாறு அனுமதிக்கப்பட்டிருந்த கைதிகளில் ஒருவரான நிமலரூபனின் நிலைமை மோசமாக இருந்தமையால் ராகம மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை பயனளிக்காமையால் அங்கு அவர் மரணித்தார்.

ஆனால் கடந்த புதன்கிழமை சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர மேற்படி செய்திகளுக்கு முற்றிலும் மாறான செய்தியை நாடாளுமன்றத்தில் வெளியிட்டிருக்கிறார். வவுனியா சிறையில் தாக்குதலுக்குள்ளான கைதி உயிரிழந்துள்ளார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் தவறான தகவல் வெளியிட்டுள்ளார் என்றும் வவுனியா சிறையில் இருந்த கைதியான நிமலரூபன் இருதய நோயாளி என்றும் அதனாலேயே அவர் மரணிக்க நேரிட்டது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளதுடன் வேறு சில தகவல்களையும் அவர் வெளியிட்டுள்ளார். வவுனியா சிறைச்சாலையில் கடந்த மாதம் 2 ஆம் திகதி முன்னாள் புலி உறுப்பினர்களின் இரு குழுக்களுக்கிடையில் மோதல் இடம்பெற்றதாகவும் காயமடைந்த 7 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாகவும் வழக்கு விசாரணைக்காக அனுராதபுரம் சிறையில் இருந்து ஒரு குழுவை வவுனியாவுக்கு மாற்றிய போதே மோதல் நடந்ததாகவும் தெரிவித்திருந்தார்.

அதிகாரிகள் மூவரைப் பணயக்கைதிகளாக கைதிகள் பிடித்து வைத்திருந்த போது விசேட அதிரடிப் படையினர் மனிதாபிமான நடவடிக்கையொன்றை மேற்கொண்டு அதிகாரிகளை மீட்டதாகவும் ஒரு துப்பாக்கி ரவையைக் கூட அவர்கள் பயன்படுத்த வில்லையென்றும் தெரிவித்ததுடன் ஆனால் கைதிகள் வாள், பொல்லு, இரும்புக் கம்பிகளால் பொலிஸார் மீது தாக்குதல் நடத் தினார்கள் என்றும் கூறியிருந்தார்.

பத்திரிகைச் செய்திகளில் தெரிவிக்கப்பட்டிருப்பது போல் கைதிகளின் கை,கால்கள் உடைக்கப்பட்டமைக்கும், காயங்களுடன் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டமைக்குமான காரணங்களை அமைச்சர் தெளிவுபடுத்தியதாகத் தெரியவில்லை. அதுமட்டுமல்ல கைதிகளின் தாக்குதலினால் அதிகாரிகள் எவரும் காயமடைந்து மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டார்களா என்பதும் கூட தெரியவில்லை. அமைச்சரின் கூற்றுப்படி பொலிஸார் மனிதாபிமான நடவடிக்கையொன்றிலேயே ஈடுபட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த அதிகாரிகளை மீட்டுள்ளார்கள். அரசின் மனிதாபிமான நடவடிக்கைகள் எப்படியிருக்கும் என்பதை தமிழ் மக்களுக்குச் சொல்லித் தெரியவைக்க வேண்டிய அவசியமில்லை.

இதேவேளை அரசியல் கைதிகளை விடுதலை செய்விப்பதற்கான அமைப்பில் இடம்பெற்றுள்ள கட்சிகளைச் சார்ந்தவர்களும் பிரமுகர்களும் தமிழ் அரசியல் கைதிகள் மீது சிறை அதிகாரிகளே மிருகத்தனமாகத் தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள் என்றும் நிமலரூபனின் மரணத்துக்கு அரசாங்கமே முழுப்பொறுப்பும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், சிறை அதிகாரிகள், பொலிஸாரின் மனிதாபிமானமற்ற தாக்குதலினாலேயே நிமலரூபன் என்ற கைதி மரணமடைந்துள்ளார் என்று கடுமையாகக் கண்டனம் தெரிவித்ததுடன் இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

பல வருட காலமாக தடுப்புக் காவலில் இருந்து வரும் இந்தக் கைதிகளை அரசு மனிதாபிமானத்துடன் அவதானிக்க வேண்டும். தங்களை விடுதலை செய்யும்படி கோரி அவர்கள் கடந்த காலங்களில் உண்ணாவிரதப் போராட்டம் முதலியவற்றிலும் கூட ஈடுபட்டு அரசின் கவனத்தைத் திருப்புவதற்கு முற்பட்டிருந்தார்கள்.

புலிகள் அமைப்புடன் நடத்தப்பட்ட போரை மனிதாபிமான போர் என்று பறைசாற்றிக் கொண்ட அரசு, காவலில் உள்ள இந்தக் கைதிகள் விடயத்திலும் அந்த மனிதாபிமானத்தைக் காட்டினால் ஒன்றும் குறைந்து போகப் போவதில்லை.

உண்மையில் சிறையில் என்ன நடந்தது. கைதிகள் ஏன் அதிகாரிகளை தடுத்துவைக்க முயன்றார்கள். அதன்பின் அதிகாரிகள் எவ்வாறு நடந்து கொண்டார்கள். கைதிகள் பலர் எவ்வாறு காயங்களுக்குள்ளானார்கள். அமைச்சர் கூறுவதுபோல கைதிகளுக்கு இரும்புக் கம்பிகள், பொல்லுகள் போன்றவை எவ்வாறு கிடைத்தன, இறுதியில் நிமலரூபன் என்ற கைதி எந்தச் சூழ்நிலையில் மரணத்தைத் தழுவினார், என்பவை தெளிவுபடுத்தப்பட வேண்டுமானால் அரசு அவசரமாகவும் அவசியமாகவும் பாரபட்சமற்ற நம்பகமான விசாரணை ஒன்றுக்கு உத்தரவிட வேண்டும். அதன் மூலம் சிறைகளில் இந்த மாதிரி சம்பவங்கள் மீளவும் நடக்காமல் தடுக்க வேண்டும். வெறும் உள்ளக விசாரணைகள் ஒரு போதும் உண்மைகளை வெளிக்கொணரப் போவதில்லை.

# சமூகத்துக்கும் பல்கலைக்கும் இடையில் பெரும் இடைவெளி

## மாற்றப்படவேண்டும் என்று கலைப் பீடாதிபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 6

எமது சமூகத்துக்கும் பல்கலைக் கழகத்துக்கும் இடையிலான இடைவெளி அதிகரித்துவிட்டது. எமது மாணவர்கள் அந்த இடைவெளியைக் குறைத்து சமூகத்தையும் பல்கலைக் கழகத்தையும் நெருக்கமான நிலைக்குக் கொண்டு வர வேண்டும்.

எமது கலை, கலாசாரப் பண்பாடுகளையும் முன்னேற்ற வேண்டும். இவற்றுக்குத் தானும் முன்னின்று உழைப்பேன் என யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் வி:பி.சிவநாதன் தெரிவித்தார்.

கலைப் பீடாதிபதியாகப் பதவியேற்றமை தொடர்பில் அவரிடம் கருத்துக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது பல்கலைக் கழகத்தையும், பல்கலைக் கழக கல்வித் தரத்தையும் மேலும் முன்னேற்ற வேண்டும் என்பது நோக்கம், கலைப் பீடத்தை என்னால் இயன்றளவு இன்னும் உயர் நிலைக்குக் கொண்டு வருவேன்.

எமது சமூகத்துக்கும் பல்கலைக் கழகத்துக்கும் இடையே இடைவெளி அதிகரித்து விட்டது. அது நல்ல விடயமல்ல. அந்த இடைவெளியைக் குறைத்து இரண்டுக்கும் இடையிலே நெருக்கமான பிணைப்பை ஏற்படுத்த எமது மாணவர்கள் முன்வர வேண்டும்.

தேவையற்ற கலாசார சீர்கேடுகள் அதிகரித்துள்ளன. அதனை எதிர்காலத்தில் தடுத்து நிறுத்த வேண்டும். எமது கலை கலாசாரப் பண்பாடுகளை நாம் அனைவரும் பேணிப் பாதுகாக்க வேண்டும்.

கலைப்பீடம், மானிடவியல், சமூகவியல், கவின் கலை என மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது. இவற்றுக்கு உட்பட்ட பல சங்கங்கள் உள்ளன. அவை உயிர்ப்பிக்கப்பட்டு அவற்றினூடாக பல செயல்திட்டங்களை சமூக மட்டத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும்.

மாணவர்களை பின்தங்கிய பாடசாலைகளுக்கு, சமூக மட்டத்துக்கு கொண்டு சென்று கள ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டும். அதற்கான வசதி வாய்ப்புக்கள் உள்ளன. ஆனால் வழிப்படுத்த வேண்டிய தேவை உள்ளது.- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-4)

## பனை விதை சேகரித்துக் கொடுத்தால் பாடசாலை உபகரணங்களைப் பெறலாம்

பனை வளத்தின் முக்கியத்துவத்தை பாடசாலை மாணவர்களிடையே ஊக்குவிக்கும் நிகழ்வாக தரமான பனை விதைகளை சேகரிக்கும் திட்டம் ஒன்றை பனை அபிவிருத்திச் சபை முன்னெடுத்துள் ளது என்று பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:-

பாடசாலைமாணவர்களிடையே பனை தொடர்பான விழிப்புணர்வுகளையும் கருத்தரங்குகளையும் நடத்தி பனை விதைகளை சேகரிக்கவுள்ளோம். மாணவர்களிடம் சேகரித்த பனை விதைகளை நாற்று மேடைகள் அமைத்து பின்னர் தகுதியான இடங்களில் நடப்படும்.

இதன் அடிப்படையில் மாணவர்கள் சேகரிக்கும் ஒவ்வொரு பனை விதைக்கும் 2 ரூபா வீதம் கொடுப்பனவுகள் பாடசாலை உபகரணங்களாக வழங்கப்படும்.

ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் ஒரு நாளில் ஆயிரம் விதைகள் கொள்வனவு செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒவ்வொரு மாவட்ட கல்வித் திணைக்களத்தின் ஊடாக பாடசாலைகளுக்கு தெரியப்படுத்தி ஆர்வமான பாடசாலைகளிலிருந்து பனை விதைகள் கொள்வனவு செய்யப்படல் வேண்டும். இதற்காகக் கல்வித் திணைக்களம் பனை அபிவிருத்தி சபையுடன் இணைந்து செயற்படும் என்று நம்புகிறோம்.- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-13-16)

## யாழ்.–கிளிநொச்சி குடிதண்ணீர் திட்டத்தின் கீழ் 33 தாங்கிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 6

யாழ்.-கிளிநொச்சி குடிதண்ணீர் திட்டத்தின் கீழ் புங்குடுதீவில் இருந்து கிளிநொச்சி வரை பெரிய நீர்த்தாங்கிகள் 33 அமைக்கப்படவுள்ளன. பெரிய நீர்த்தாங்கி அமைக்கப்படவுள்ள பிரதேசங்களுக்கான நில அளவை வரைபடங்களையும் இடத்தையும் ஆசிய அபிவிருத்தி வங்கிக் குழு பார்வையிடவுள்ளது.

இதற்கான நடவடிக்கையை யாழ். - கிளிநொச்சி குடிதண்ணீர் விநியோக திட்டப் பணிப்பாளர் எந்திரி தி.பாரதிதாசன் மேற் கொண்டுள்ளார்.

இதேவேளை, 450 மில்லியன் ரூபா செலவில் கல்லுண்டாயில் கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலை பொருத்தப்பட்டு அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இதற்கான காணிகளை சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஏற்கனவே நீண்ட கால குத்தகையில் வழங்கியுள்ளார்.

இந்தக் காணியில் சுத்திகரிப்பு ஆலை அமைக்கப்பட்டு இதன் வெளியீடுகள் விவசாயத்துக்கும் மற்றும் தேவைகளுக்கும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆசிய அபிவிருத்தி வங்கிக் குழுவின் தொழில் நுட்பக் குழு அதிகாரி தெரிவித்தார். (ம-50)

## பரிசோதனைக் குழாய் குழந்தைகள் உலகில் திடகாத்திரமாக வாழ்கின்றன

உலகம் முழுவதிலும் 50 லட்சங்களுக்கும் மேற்பட்ட பரிசோதனைக் குழாய்க் குழந்தைகள் திடகாத்திரமாக வாழ்வதாக கண்டறியப்பட்டுள்ளது.

அமெரிக்காவிலுள்ள, குழந்தைகளைப் பெறுவது தொடர்பாக பயன்படுத்தப்படும் தொழில் நுட்பத்தை கண்காணிக்கும் அமைப்பால் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய் வொன்றில் இது வெளிப்பட்டுள்ளது.

1978 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் லெஸ்லி பிறவுண் என்ற பெண்மணியின் வயிற்றில் லூயிஸ் பிரவுண் என்ற பரிசோதனைக் குழாய்க் குழந்தை உருவானதையடுத்து உலக முழுமையிலும் பல்லாயிரக் கணக்கானோர் இந்த பரிசோத னைக் குழாய்க் குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதில் முனைப்புக் காட்டியிருந்தனர். புதிய தொழில் நுட்பத்திலுள்ள முன்னேற்றகரமான நிலை, பல்லாயிரக் கணக்கான தாய் தந்தையருக்கு குழந்தைச் செல்வங்களை அரவணைத்து இன்புறும் வாய்ப்பை வழங்கியுள்ளதாக இந்த அமைப்பின் தலைவர் அடம்ஸ் தெரிவித்துள்ளார். (ம-22)

## முதியோர் ஆக்கம் தாங்கிய சஞ்சிகை வெளியிடத் திட்டம்

வலி வடக்கு ஜூலை 6

இலங்கை முதியோர்களுக்காக தேசிய செயலகத்தால் முதியோர்களின் ஆக்கங்களைத் தாங்கிய 2012 ஆம் ஆண்டுக்கான சஞ்சிகை ஒன்று வெளியிடப்படவுள்ளது.

இதற்கான ஆக்கங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் கிராம அலுவலர் மட்டத்தில் இயங்கும் முதியோர் சங்ககங்கள் மற்றும் முதியோர்களிடம் இருந்துபெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை முதியோர் தேசிய செயலகம் மேற்கொண்டு வருகின்றது.

இது சம்பந்தமாக பிரதேச செயலகங்கள் உதவி அரச அதிபர் பிரிவுகளில் கடமையாற்றும் சமூக சேவை அலுவர்கள் கிராம அலுவர்களின் உதவியை முதியோர்களுக்கான தேசிய செயலகம் கோரியுள்ளதுடன் ஆக்கங்களைப் பெற்று அனுப்புமாறும் தெரிவித்துள்ளது.

(ம-86)

## வீட்டுத் தோட்டத்துக்கு ஊக்குவிப்பு உதவிகள்

வலி வடக்கு ஜூலை 6

வீட்டுத் தோட்டச் செய்கை மற்றும் மரம் வளர்த்தல் போன்ற நடவடிக்கைகளை பொது மக்களிடையே ஊக்குவிக்கும் முகமாக பிரதேச செயலர் பிரிவுகள் உதவி அரச அதிபர் பிரிவுகள் ரீதியாக ஊக்குவிப்பு நடவடிக்கைகளை வன பரிபாலனத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

இதன் ஒரு கட்டமாக பிரதேச செயலர் பிரிவுகள் மற்றும் உதவி அரச அதிபர் பிரிவுகளில் தலா அறுபது பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு மரக் கன்றுகள் மற்றும் வீட்டுத் தோட்டச் செய்கைக்கான உதவிகளும் வழங்கப்படவுள்ளன.

இது சம்பந்தமான அறிவித்தல்கள் வன பரிபாலனத் திணைக்களத்தால் பிரதேச செயலகங்கள் உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள் ளன.

(ம-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டட வேலைகளுக்கும் தண்ணீரை பணம் கொடுத்து வாங்கும் நிலை

## பூநகரி மக்களின் தொடரும் அவலம்

**பூநகரியின் பள்ளிக்குடா, செட்டியார் தரவை, பல்லாய், சேவையர் தோட்டம் ஆகிய பகுதிகள் வரட்சியால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.**

கிளிநொச்சி, ஜூலை 6

பூநகரியின் சில பகுதிகளில் நிரந்தர வீடுகளை அமைக்கும் மக்கள் கட்டட வேலைகளுக்குப் பணம் கொடுத்து நீரைப்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பூநகரியின் பள்ளிக்குடா, செட்டியார் தரவை, பல்லாய், சேவையர் தோட்டம் ஆகிய பகுதிகள் வரட்சியால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இங்குள்ள நீர் நிலைகள் வற்றியமையால் மக்கள் நீரைப் பெறுவதில் என்றும் இல்லாதவாறு சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

இந்தப் பகுதியிலுள்ள மக்கள் பணம் கொடுத்தே தமது தேவைக்குரிய நீரைப் பெறுவதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை இங்கு வழங்கப்பட்ட நிரந்தர வீடுகளை அமைப்பதற்குத் தேவையான நீரைப் பெறுவதற்கும் பெரும் சிரமமாக உள்ளது.

பவுசர்கள் மூலமாகக் கொண்டு வரும் நீரைச் சேமித்து வைப்பதற்குக் கொள்கலன் வசதிகள் இல்லாததால் சிலர் தமது வீட்டுக் கிணறுகளில் சேமிப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் பணம் கொடுத்து வாங்கும் இந்த நீர் வீணாக விரயமாவதையும் அவதானிக்க முடிகின்றது.

மேலும் வீடுகளை அமைப்பதற்கென வழங்கப்பட்ட நிதியில் நீருக்கான செலவீனம் உள்ளடக்கப்படாமையால் வீடுகளைப் பூர்த்தி செய்வதில் மக்கள் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர். (க-426)

# தார் வீதிக்கு கோரிக்கை

அக்கராயன் பிரதேச மருத்துவமனைக்கு முன்பாக உள்ள வீதியைத் தார் ஊற்றிப் புனரமைக்குமாறு மருத்துவமனையில் சிகிச்சை பெறும் நோயாளர்களும் கிராம மக்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வீதியால் வேகமாகச் செல்லும் ஊர்திகளால் எழும் புழுதி காரணமாக மருத்துவமனை தூசிப் படலத்தால் மூடப்பட்டு நோயாளர்களை உருவாக்கும் இடமாக மாறியுள்ளது. இதனைத் தடுப்பதாயின் தார் இடப்பட்டு இந்த வீதி உடனடியாகப் புனரமைக்கப்பட வேண்டுமென இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதே வேளை திருமுறிகண்டியில் இருந்து அக்கராயன் வரையான 10 கி.மீ. நீளமான வீதியின் புனரமைப்புப் பணிகள் மந்த கதியில் இடம்பெற்றுவருகின்றன என்றும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

(க-18)

# குளத்தைப் புனரமைத்தால் 250 ஏக்கரில் நெற்செய்கை

துணுக்காய், ஜூலை 6

துணுக்காய்ப் பிரதேசத்திலுள்ள ஆரோக்கியபுரம் குளத்தைப் புனரமைப்பதன் மூலம் 250 ஏக்கர் நிலப் பரப்பில் நெற்செய்கையை மேற்கொள்ள முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இந்தக் குளம் சேதமடைந்த நிலையில் காணப்படுவதால் விவசாய முயற்சிகளை முழு அளவில் மேற்கொள்ள முடியாதுள்ளது. இதனால் மீளக்குடியமர்ந்த மக்கள் தமது வாழ்வாதாரத்தை முழு அளவில் கொண்டு செல்ல முடியாத நிலையில் உள்ளனர்.

இதேவேளை ஆரோக்கியபுரம், அமதிபுரம் ஆகிய இடங்களிலுள்ள வீதிகள் கற்கள் பரவப்பட்ட நிலையில் காட்சியளிக்கின்றன. இதனால் இங்குள்ள மக்கள் அதிக சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். (க-18)

# விதிகளை மீறிய சாரதிகளுக்கு 24 ஆயிரம் ரூபா தண்டம்

கிளிநொச்சிப் பகுதியில் வீதிப் போக்குவரத்து விதிகளை மீறியமை மற்றும் போக்குவரத்திற்கு இடையூறு விளைவித்தமை போன்ற குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புபட்டவர்கள் கைது செய்யப்பட்டு 24 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

பரந்தன் ஏ-9 வீதியில் ஆபத்தான விதத்தில் டிப்பர் வாகனத்தைச் செலுத்திச் சென்ற போது கடந்த 23 ஆம் திகதி கைது செய்யப்பட்டவருக்கு 6 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் மேலும் கிளிநொச்சிப் பகுதியில் பதிவுக்கு உட்படுத்தப்படாத வாகனத்தைச் செலுத்திச் சென்ற ஒருவருக்கு ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றின் முன்னால் ஒலியெழுப்பிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவருக்கு 3 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை டிப்போ சந்திப் பகுதியில் மதுபோதையில் பயணிகளுக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் இடையூறு விளைவித்தவருக்கு 2 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் மதுபோதையில் சாரதி அனுமதிப் பத்திரமின்றி ஓட்டோவைச் செலுத்திச் சென்றவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

ஏ-9 வீதியில் வரி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்திச் சென்ற ஒருவருக்கு ஆயிரம் ரூபாவும், இதே போன்று கிளிநொச்சி டிப்போச் சந்திப் பகுதியில் வாகனம் செலுத்தியவருக்கு ஆயிரம் ரூபாவும் தண்டமாக விதிக்கப்பட்டுள்ளது.

(க-6)

# கற்றல் உபகரணக் கண்காட்சி

துணுக்காய், ஜூலை 6

துணுக்காய், தேறாங்கண்டல் அ.த.க பாடசாலையில் கற்றல் உபகரணங்களின் கண்காட்சி இன்று மு.ப 10மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் துணுக்காய் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி மாலினி வெனிற்றன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.

துணுக்காய்க் கல்வி வலயத்தின் மாணவர் அபிவிருத்திக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.சுந்தரமூர்த்தி, கோட்டக்கல்வி அதிகாரி எஸ்.செல்வரத்தினம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

(க-415)

# மரநிழலின் கீழ் கல்வி

அக்கராயன், ஜூலை 6

கிளிநொச்சி கல்வி வலயத்திலுள்ள சில பாடசாலை மாணவர்கள் தற்போதும் மரநிழலின் கீழிருந்து கல்வி கற்று வருவதாகத் தெரியவருகின்றது.

இறுதியாக இடம்பெற்ற கல்வி அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் கரைச்சிக் கோட்டத்தில் மட்டும் ஆயிரத்து 482 மாணவர்கள் மரநிழலின் கீழிருந்து கல்வி கற்று வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தற்போது பாடசாலைகளில் கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்ற போதிலும் மாணவர்களின் இந்த நிலையில் பெரிய மாற்றம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

எதிர்வரும் மாரிகாலத்துக்கு முன்னர் இந்த நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்பதே இங்குள்ள பெற்றோர்களின் பெரு விருப்பமாகும். (க-18)

## இன்னும் எவ்வளவு காலம்...?



*தங்குவதற்கு இடமின்றி ஆசிரியர்கள் அலைந்து திரியும் நிலையில் நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாமல் அழிவுகளைச் சுமந்து நிற்கும் வன்னேரிக்குளம் மகாவித்தியாலயத்தின் ஆசிரியர் விடுதி. (க-18)*

# மாதர் சங்கத்தின் ஏற்பாட்டில் தையல் பயிற்சி நெறி

அக்கராயன், ஜூலை 6

கிளிநொச்சி வன்னேரிக் குளத்தில் மாதர் சங்கத்தின் ஏற்பாட்டில் தையல் பயிற்சி நெறியொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட 35 பெண்கள் இந்தப் பயிற்சி நெறியில் பங்கு கொண்டு வருகின்றனர்.

கனடா மறுவாழ்வு அமைப்பால் இந்தப் பயிற்சி நெறிக்கென 2 லட்சத்து 76 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. பிரதேச சபை உறுப்பினர் டெனிஸ்ரன் பயிற்சி நிலையத்தை அண்மையில் நாடா வெட்டி ஆரம்பித்து வைத்தார். இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், கரைச்சிப் பிரதேச சபைத் தலைவர் நா.வை.குகராசா, பிரதேசசபை உறுப்பினர்களான அ.தயாபரன், ஒஸ்மன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஏற்கனவே 40 பெண்களுக்குத் தையல் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க-18)

# நிரந்தரமான மருத்துவர் இல்லை அடம்பனில் நோயாளர் பாதிப்பு

வலி.வடக்கு, ஜூலை 6

மன்னார் அடம்பன் வைத்தியசாலையில் நிரந்தரமான மருத்துவர் இல்லாததால் நோயாளிகள் அவலங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த வைத்தியசாலை பல மைல் சுற்றாடலில் உள்ள மக்களின் மருத்துவத் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றது. ஆனால் நிரந்தர வைத்தியர் இன்மையால் இதன் செயற்பாடுகள் உரிய வகையில் அமைந்திருக்கவில்லையென இங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் பலமைல் தூரத்திலிருந்து வரும் நோயாளிகள் பதில் மருத்துவர் இல்லாத வேளைகளில் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதை அவதானிக்க முடிகின்றது. அடம்பன் வைத்தியசாலையில் விடுதி வசதிகளும் உள்ளன. நிரந்தர வைத்தியர் ஒருவர் நியமிக்கப்படுவாராகில் ஓரளவு சிறந்த வைத்திய வசதியை மக்களுக்கு வழங்கக் கூடியதாக இருக்கும்.

மேலும் நீண்ட தூரத்திலுள்ள இடங்களிலிருந்து வரும் நோயாளர்கள் உடனே திரும்பிச் செல்ல முடியாத நிலையில் அடுத்த நாளே மன்னார் வைத்தியசாலைக்குச் செல்லும் அவலம் நிகழ்கின்றது.

எனவே இந்தப் பகுதி மக்களின் அவல நிலையைக் கருத்தில் கொண்டு அடம்பன் வைத்தியசாலைக்கு நிரந்தர மருத்துவரை நியமிக்குமாறு பாதிக்கப்பட்ட மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-86)

# சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுப்பது பெற்றோரின் கடமை

## உதவி அரசாங்க அதிபர் கருத்து

அக்கராயன், ஜூலை 6

சிறுவர்களைத் தீய செயல்களிலிருந்து தடுத்து மீட்டெடுப்பது பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்களின் பொறுப்பாகும்.

இவ்வாறு கிளிநொச்சி செயலக உதவி அரச அதிபர் திருமதி ப.ஜெயராணி தெரிவித்தார்.

அக்கராயன் கெங்காதரன் குடியிருப்பில் சிறுவர் அதிகார சபையின் ஏற்பாட்டில் [illegible] சிறுவர் மகிழ்வூட்டல் இல்லத்தைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்து நலன்புரி நிலைய நெருக்கடியான வாழ்வை அனுபவித்து மீண்டு வருகிறோம்.

இந்த நிலையில் சிறுவர்களின் வளர்ச்சி, அபிவிருத்தி தொடர்பாகச் சிந்திக்க வேண்டியுள்ளது. சிறுவர்களின் கல்வி, விளையாட்டு ஆகிய விடயங்களில் அக்கறை செலுத்தவேண்டும். எமது மாவட்டத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரித்துள்ளது. சிறுவர்கள் துன்புறுத்தப்படுகிறார்கள். பச்சிளங்குழந்தைகள் கூடத் துன்புறுத்தலுக்குள்ளாகின்றனர். இந்த நிலையில் பெற்றோர்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். சமூகத்தில் சிறார்களைப் பாதுகாக்கும் பொறுப்பு அனைவருக்கும் உள்ளது.

சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதில் கிராமங்களிலுள்ள மாதர் சங்கங்கள் பெரும் பங்காற்ற வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாயாற்றில் சட்டவிரோதக் கடற்றொழிலில் ஈடுபட்ட

# சிங்கள மீனவர்கள் உடன் வெளியேறுக

### அமைச்சர் ராஜித அதிரடி உத்தரவு



முல்லைத்தீவு,ஜூலை 6

**முல்லைத்தீவு நாயாற்றுப் பகுதியில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சிங்கள மீனவர்களை உடனடியாக அங்கிருந்து வெளியேறுமாறு கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன உத்தரவிட்டுள்ளார்.**

**முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தில் அமைச்சர் தலைமையில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற கூட்டத்திலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.**

நாயாற்றுப் பகுதியில் 153 படகுகள் மூலம் சிங்கள மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுவந்தனர். இவற்றில் 58 மீனவர்கள் 1983ஆம் ஆண்டுக்கு முன்னரே இந்தப் பகுதியில் மீன் பிடிப்பதற்கான அனுமதியைப் பெற்றிருந்தனர். தற்போது அவர்களைத் தவிர மேலும் பல சிங்கள மீனவர்கள் படகுகள் சகிதம் அடாத்தாக இந்தப் பகுதியில் கடற்றொழிலில் ஈடுபட்டு வந்தனர்.

சிலாபத்திலிருந்து வந்து நாயாற்றில் தற்காலிகமாகத் தங்கியுள்ள இந்தச் சிங்கள மீனவர்கள் வெளிச்சம் போட்டு மீன்பிடித்தல், சுருக்கு வலை பயன்படுத்தல் போன்ற தடை செய்யப்பட்ட மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்ததால் உள்ளூர் தமிழ் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தனர். பல தமிழ் மீனவர்கள் சிங்கள மீனவர்களின் அடாத்தான கடற்றொழில் நடவடிக்கைகளால் தொழிலுக்குச் செல்வதைக் கூட இடைநிறுத்தியிருந்தனர்.

இந்த நிலையில் நேற்று முல்லைத்தீவு மாவட்டத்துக்கு கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன வருகை தந்திருந்தார். இதன்போது நாயாற்றுப் பகுதி தமிழ் மீனவர்கள், அனுமதி பெறாமல் சட்டவிரோத மீன் பிடியில் ஈடுபடும் சிங்கள மீனவர்களின் செயற்பாடுகள் குறித்து அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். இதன்போதே அமைச்சர் அனுமதியற்று நாயாற்றுப் பகுதியில் மீன்பிடியில் ஈடுபடும் சிங்கள மீனவர்களை வெளியேற்றுமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை அமைச்சர் கலந்து கொண்ட இந்தக் கூட்டத்தில் வைத்து, பாசிக் நிறுவனத்தால் 21 மில்லியன் பெறுமதியான வலை உபகரணங்களும், எப்.ஏ.ஓ நிறுவனத்தால் 20 மில்லியன் பெறுமதியான மீன்பிடி உபகரணங்களும், கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தால் 3.6 மில்லியன் பெறுமதியான உபகரணங்களும் மீனவர்களுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-16-13)

## கிளிநொச்சியில் செவ்வாயன்று தமிழ் இலக்கியக் கருத்தரங்கு

கிளிநொச்சி, ஜூலை 06

கிளிநொச்சி முன்னாள் அரச அதிபர் பொன்னம்பலம் நினைவு அறக்கட்டளை மற்றும் கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் தமிழ் இலக்கியக் கருத்தரங்கொன்று கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணியளவில் கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரி மண்டபத்தில் வே. இறைபிள்ளை தலைமையில் ஆரம்பமாகவுள்ள இந்த இலக்கியக் கருத்தரங்கில் பொன்னம்பலம் நினைவுப் பேருரையைக் கிளிநொச்சி அரசஅதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் நிகழ்த்துவார்.

அதன் பின்னர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் 'இலக்கியங்களில் தமிழ்ச் சுவை' என்னும் பொருளில் தமிழ் அறிஞர்களின் உரைகள் இடம்பெறவுள்ளன.

'திருக்குறளில் தமிழ்ச் சுவை' என்ற விடயம் பற்றி திருமதி பிறேமா மதுரநாயகமும், 'சிலப்பதிகாரத்தில் தமிழ்ச் சுவை' என்னும் பொருளில் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸும், 'நளவெண்பாவில் தமிழ்ச் சுவை' என்னும் பொருளில் பேராசிரியர் வேல் நம்பியும், 'கம்பராமாயணத்தில் தமிழ்ச்சுவை' பற்றி ச.லலீசனும், 'பாரதி மற்றும் பாரதிதாசன் பாடல்களில் தமிழ்ச்சுவை' என்ற பொருளில் கு.ரஜீவனும் உரையாற்றுவர். கருத்தரங்கில் நூல் வெளியீடும் இடம்பெறவுள்ளது.

நூல் மதிப்பீட்டுரையை அ.கேதீஸ்வரனும், நன்றியுரையை திருமதி இ. அருணாசலமும் நிகழ்த்தவுள்ளனர். (ந-க)

## 'ஏ.ரி.எம்.' இல்லை; மக்கள் சிரமம்

ஒட்டுசுட்டானில் இயங்கி வருகின்ற இலங்கை வங்கிக் கிளையில் ஏ.ரி.எம். வசதி இல்லாததால் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மீளக்குடியமர்ந்த மக்களுக்கான தேவைகளை இலகுபடுத்தும் முகமாக இவ்வங்கியானது இயங்கி வருகின்றது. ஆனால் ஏ.ரி.எம். போன்ற வசதிகள் இந்த வங்கியில் இன்மையால் மக்கள் வங்கியூடாகவே தம்முடைய கொடுக்கல் வாங்கல் சேவைகளைப் பெற்றுக் கொள்வதால் நேர விரயம் ஏற்படுவதாகவும், எனவே இந்த வங்கியில் ஏ.ரி.எம். இயந்திரத்தை பொருத்துமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ந-க-500)

## முல்லைத்தீவு கல்வி வலயத்தில் சீராக்கப்படாத கோவைகள்; பாதிப்படையும் ஆசிரியர்கள்

வவுனியா,ஜூலை 6

முல்லைத்தீவு கல்வி வலயத்திற்குட்பட்ட ஆசிரியர்களின் சுய விவரக் கோவைகள் சீராக்கப்படாமையால் ஆசிரியர்கள் தமது பதவியுயர்வுகள், சம்பள ஏற்றங்களை பெற முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

**ஆசிரியர்களின் பதவிகள் நிரந்தரமாக்கப்படாததோடு அவர்களின் பதவியுயர்வு, சம்பள ஏற்றம் என்பவற்றையும் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.**

போர் காரணமாக முல்லைத்தீவு வலயத்தைச் சேர்ந்த ஏராளமான ஆசிரியர்களின் சுயவிவரக் கோவைகள் முற்றாக அழிவடைந்தன. இன்னும் பலரின் சுயவிவரக் கோவைகள் காணாமல் போய்விட்டன.

இதனை அடுத்து சம்பந்தப்பட்ட ஆசிரியர்களினால் தமது சுயவிவரக் கோவைகளுக்கு வேண்டிய அனைத்துச் சான்றிதழ்களும் வலயக் கல்வி அலுவலகத்தில் மீள ஒப்படைக்கப்பட்டன. வலயக் கல்வி அலுவலகம் தனது சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்து இரண்டு வருடங்கள் கடந்த நிலையிலும் பல்வேறு காரணங்களைக் காட்டிக் கோவைகளைச் சீர்செய்யும் பணி இழுத்தடிக்கப்படுகிறது.

இதனால் ஆசிரியர்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர். கோவைகள் செம்மைப்படுத்தப் படாமையினால் பல ஆசிரியர்களின் பதவிகள் நிரந்தரமாக்கப்படாததோடு அவர்களின் பதவியுயர்வு, சம்பள ஏற்றம் என்பவற்றையும் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

முல்லைத்தீவு வலயத்தைச் சேர்ந்த பல ஆசிரியர்களுக்கு 2004 ஆம் ஆண்டு முதல் இதுவரை எவ்வித பதவியுயர்வுகளோ, சம்பள உயர்வுகளோ, சம்பள நிலுவைகளோ வழங்கப்படவில்லை.

இது தொடர்பாக பல தடவைகள் எழுத்து மூலமாகவும் நேரடியாகவும் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் முறைப்பாடு செய்தபோதும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனவும் ஆசிரியர்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

எனவே போரின் வடுக்களால் சொல்லொணாத் துயரங்களையும், பொருளாதார ரீதியாக பாதிப்புக்களையும் சுமந்து நிற்கும் ஆசிரியர்களின் நிலையை கவனத்தில் கொண்டு அவர்களின் சுயவிவரக் கோவைகளை செம்மையாக்கும் பணிகளை பூர்த்தி செய்ய வலய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆசிரியர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ந-க-400)

## படையினர் தாக்கியதாலேயே எழுதுமட்டுவாழ் வாசி சாவு

### உறவினர்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 6

எழுதுமட்டுவாழில் தகராறு ஒன்றின் போது உயிரிழந்ததாகக் கூறப்படும் கந்தையா ஜெயராஜா என்பவர், குறித்த சம்பவத்தின் போது 20 பேர் வரையிலான இராணுவத்தினர் தாக்கியதாலேயே இறந்துள்ளார் என்று அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

எழுதுமட்டுவாழ் தெற்கு விழுவளைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இரு சாராருக்கு இடையே ஏற்பட்ட முரண்பாட்டு நிலையை அடுத்து இராணுவத்தினர் அதில் தலையிட்டுள்ளனர். அதன்போதே இராணுவத்தினர் ஜெயராஜாவை (வயது-45) கடுமையாகத் தாக்கினர் என்று ஜெயராஜாவின் உறவினர்கள் பலரும் தெரிவித்தனர்.

அவரது சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது. பின்னர் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சடலம் கொண்டு செல்லப்பட்டு உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் நேற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. முனை மழுங்கிய ஆயுதத்தால் தலையில் தாக்கப்பட்டதால் மூளையில் இரத்தக் கசிவு ஏற்பட்டே குறித்த நபர் மரணமானார் என்று உடற்கூற்றுப் பரிசோதனையின் போது தெரியவந்துள்ளது.

கொடிகாமம் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை நடத்தினர். எனினும் யாராவது கைது செய்யப்பட்டார்களா என்று தொடர்பு கொண்டு கேட்டபோது அது பற்றித் தாம் எதுவும் கூற முடியாது எனத் தெரிவித்தனர். (ந-4-5)

## மனிக்பாமில் தொடர் கொள்ளை

வவுனியா, ஜூலை 6

செட்டிக்குளம் மனிக்பாம் நலன்புரி நிலையத்தில் திருடர்கள் தொடர்ச்சியாக கைவரிசை காட்டி வருவதால், முகாம் மக்கள் அச்சத்துடனேயே இராப் பொழுதைக் கழிக்கவேண்டியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

நலன்புரி நிலையத்தில் இராணுவம் மற்றும் பொலிஸாரின் கடும் பாதுகாப்புக்கும் மத்தியிலும் நாளுக்கு நாள் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இந்தச் சம்பவங்களில் ஈடுபடும் திருடர்களை மக்கள் கையும் மெய்யுமாகப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்த போதும் கூட, திருடர்கள் 'செல்வாக்கை' பயன்படுத்தி வெளியில் வந்து பழையபடி திருட்டில் இறங்கிவிடுகின்றனர்.

திருடர்களில் கைவரிசையின்போது முகாம் மக்களுடைய அன்றாடப் பாவனைப் பொருள்கள் கூட தப்புவதில்லை. ஆடைகள் மற்றும் உணவுப்பண்டங்கள் என்பனவும் சூறையாடப்படுகின்றன. அதுமட்டுமல்லாது தற்போது இரும்பு பொருள்களுக்கு கிராக்கி காணப்படுவதால் நீர்த்தாங்கிகளும் களவாடப் படுகின்றன. சில சமயங்களில் இரவு வேளையில் வீடுகளுக்குள் நுழையும் கொள்ளைக் கும்பல் வீடுகளில் உள்ளவர்களை கத்தி முனையில் மிரட்டி, பெறுமதியான பொருள்களையும் பணத்தையும் அபகரித்துச் செல்கின்றனர். இதன்போது தம்மை எதிர்ப்போரை கத்தியால் குத்தி காயப்படுத்தவும் கொள்ளையர்கள் தயங்குவதில்லை.

24 மணி நேரமும் படையினர் மற்றும் பொலிஸாரின் கண்காணிப்பில் உள்ள இந்த நலன்புரி நிலையத்தில் தொடரும் கொள்ளைச் சம்பவங்கள் மக்கள் மத்தியில் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளன. (ந-400)

## நாரந்தனையில் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 6

நாரந்தனை தெற்கில் வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட நிலையில் சடலம் ஒன்று ஊர்காவற்றுறை பொலிஸாரால் நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் மீட்கப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தில் செல்வராஜ் தனுராஜ் (வயது -27) என்பவரே கொலையுண்ட நிலையில் மீட்கப்பட்டவராவார். மதுபோதையில் ஏற்பட்ட தகராறே இவ்வாறு கொலையில் முடிந்திருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை நீதிவான் ஆர்.எல்.எம். மகேந்திரராஜாவும் யாழ். போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி எஸ்.சிவரூபனும் சம்பவம் தொடர்பில் நேரில் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். பின்னர் சடலம் பிரேத பரிசோதனைக்களுக்காக ஊர்காவற்றுறை பொலிஸாரால் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் எவரும் இதுவரையில் கைது செய்யப்படாததோடு ஊர்காவற்றுறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-16-5)

## மரண அறிவித்தல்



### சின்னம்மா சரவணமுத்து

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னம்மா சரவணமுத்து நேற்று (05.07.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டு சரவணமுத்துவின் அன்பு மனைவியும், விக்கினேஸ்வரன், பரமேஸ்வரன், கெங்கேஸ்வரன், விக்கினேஸ்வரி, கெங்கேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும், தவமதி, சீதாலக்சுமி, வேதவல்லி, ஸ்ரீபதி, ஸ்ரீஸ்காந்தா ஆகியோரின் அன்பு மாமியும், அனுஷன், தேனுஷியா, பிரியங்கா, மைத்திரேயி, ஆரூரன், ஜாமினி, குருப்பிரஷாத், மிருணன், மிதிலன், மிதுலா, திருவாரூரன், வாகீசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.07.2012) வெள்ளிக்கிழமை பி.ப. 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

(20110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது மக்களுக்கான அறிவித்தல்

## பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியினால் உரிமமளிக்கப்பட்ட நிறுவனங்கள்

(30.06.2012 இல் உள்ளவாறு, அகரவரிசைப்படி)

### உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்

1. அக்சிஸ் பாங்க் லிமிடெட்
2. அட்டன் நசனல் பாங்க் பிஎல்சி
3. அமானா பாங்க் லிமிடெட்
4. இந்தியன் ஓவசீஸ் பாங்க்
5. இந்தியன் பாங்க்
6. இலங்கை வங்கி
7. எம்சிபி பாங்க் லிமிடெட்
8. ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட்
9. கபீப் பாங்க் லிமிடெட்
10. கொமர்சல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
11. சம்பத் பாங்க் பிஎல்சி
12. சிற்றி பாங்க் என்ஏ
13. செலான் பாங்க் பிஎல்சி
14. டீஎவ்சீசீ வர்தன பாங்க் பிஎல்சி
15. டொயிச் பாங்க் ஏஜி
16. த கொங்கொங் அண்ட் சங்காய் பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட்
17. நெசனல் டிவலொப்மன்ட் பாங்க் பிஎல்சி
18. நேசன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி
19. பப்ளிக் பாங்க் பெர்காட்
20. பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி
21. மக்கள் வங்கி
22. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி
23. ஸ்ரான்டட் சார்ட்டட் பாங்க்
24. ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா

### உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்

1. அரச ஈட்டு முதலீட்டு வங்கி
2. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
3. எம்பீஎஸ்எல் சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
4. சணச டிவலொப்மன்ட் பாங்க் லிமிடெட்
5. சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
6. டிஎவ்சீசீ பாங்க்
7. தேசிய சேமிப்பு வங்கி
8. பிரதேசிய சங்வர்த்தன பாங்க்
9. லங்காபுத்திர டிவலொப்மன்ட் பாங்க் லிமிடெட்

### உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்

1. அபான்ஸ் பினான்ஸ் பிஎல்சி
2. அலயன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
3. அசோசியேட்டட் மோட்டார் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
4. ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சி
5. ஈ.ரி.ஐ பினான்ஸ் லிமிடெட்
6. எல்பீ பினான்ஸ் பிஎல்சி
7. ஏசியன் பினான்ஸ் லிமிடெட்
8. ஏஎம்டபிள்யூ கபிட்டல் லீசிங் பிஎல்சி
9. ஏசியா அசெற் பினான்ஸ் பிஎல்சி
10. ஓரியன்ட் பினான்ஸ் லிமிடெட்
11. ஐடியல் பினான்ஸ் லிமிடெட்
12. கன்றிச் பினான்ஸ் லிமிடெட்
13. கப்பிட்டல் எலையின்ஸ் பினான்ஸ் பிஎல்சி
14. கொமர்சல் கிறடிட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
15. கொமர்சல் லீசிங் அன்ட் பினான்ஸ் லிமிடெட்
16. சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி
17. சிலோவ் பினான்ஸ் பிஎல்சி
18. சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சி
19. சிட்டி பினான்ஸ் கோப்பிரேசன் லிமிடெட்
20. சிற்றிசன்ஸ் டிவலொப்மன்ட் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி
21. சென்றல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
22. சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
23. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி
24. சொவ்றலொயிக் பினான்ஸ் பிஎல்சி
25. ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பிஎல்சி
26. த பினான்ஸ் கம்பனி பிஎல்சி
27. த ஸ்ரான்டட் கிறடிற் லங்கா லிமிடெட்
28. திவச பினான்ஸ் லிமிடெட்
29. நந்தா இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
30. நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி
31. பார்ட்லீட் பினான்ஸ் பிஎல்சி
32. பிம்புத் பினான்ஸ் பிஎல்சி
33. பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிடெட்
34. பீப்பிள்ஸ் பினான்ஸ் பிஎல்சி
35. பீப்பிள்ஸ் மர்ச்சன்ட் பினான்ஸ் பிஎல்சி
36. மல்ரி பினான்ஸ் பிஎல்சி
37. மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
38. மர்ச்சன்ட் கிறடிற் ஒப் சிறிலங்கா லிமிடெட்
39. மெல்ஸ்டா ரீகல் பினான்ஸ் லிமிடெட்
40. யூ பீ பினான்ஸ் கம்பனி லிமிடெட்
41. ரிகேஎஸ் பினான்ஸ் லிமிடெட்
42. லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் பிஎல்சி
43. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி
44. ஸ்வர்ணமகால் பினான்ஷியல் ஸர்விஸஸ் பிஎல்சி

## நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய விடயங்கள்

- மேற்கூறப்பட்ட நிறுவனங்கள் அவற்றின் வர்த்தக நடவடிக்கைகளை மதிநுட்பமாக நடாத்துவதை ஊக்குவிப்பதன் மூலம் பொதுமக்களின் வைப்புக்களைப் பாதுகாப்பதற்காக மத்திய வங்கிக்கு அவற்றை ஒழுங்குபடுத்தி மேற்பார்வை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும், வைப்புக்களுக்கு உத்தரவாதம் அளிக்கவோ அல்லது இதில் ஏதாவதொரு நிறுவனம் ஒருபோதும் முறிவடையாது என்று உறுதிப்படுத்தவோ சட்டரீதியான அதிகாரம் மத்திய வங்கியிடம் கிடையாது. மத்திய வங்கி, அதனால் மேற்பார்வை செய்யப்படும் ஒரு வங்கி அல்லது ஒரு நிதிக் கம்பனி முறிவடையுமிடத்து வைப்பாளர் ஒருவருக்கு அவரின் மொத்த வைப்புக்களின் தொகையில் உயர்ந்த பட்சம் ரூபா 200,000 கொண்ட தொகையினை 2012 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் மீள்கொடுப்பனவு செய்யப்படுவதற்கு உத்தரவாதம் அளிப்பதற்காக வைப்புக் காப்புறுதி திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.
- மேலுள்ள ஏதாவதொரு நிறுவனமொன்றில் பணத்தை வைப்பிலிடும்போது தயவுசெய்து உங்கள் வைப்புக்களின் பாதுகாப்பு தொடர்பாக அதிக கவனம் செலுத்தல் வேண்டும்.

**இலங்கை மத்திய வங்கி**

வங்கிகள் - தொ.பேசி.: 2477100, 2477105, 2477120, 2477129 தொ.நகல்: 2477711, மின்னஞ்சல்: banksup@cbsl.lk

நிதிக் கம்பனிகள் - தொ.பேசி.: 2477500, 2477504 தொ.நகல்: 2477738, மின்னஞ்சல்: secdsnbfi@cbsl.lk

## வர்த்தகர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 6

வர்த்தகர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 10ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்கு மானிப்பாய் வீதியிலுள்ள வணிகர் கழகக் கட்டடத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். மாநகரசபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா அறிவித்துள்ளார்.

ஆரியகுளம் சந்தியிலிருந்து கஸ்தூரியார் வீதி வரையான ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள கடைகளின் உரிமையாளர்கள் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (16)

## விழிப்புணர்வு கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஜூலை6

சுகாதாரத் திணைக்களம் நடத்தும் போசாக்கு விழிப்புணர்வுக் கண்காட்சி இன்று முற்பகல் 8.30 மணிக்கு கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள கரவெட்டி திருஇருதய கல்லூரியில்நடைபெறவுள்ளது.

சுகாதார வைத்திய அதிகாரி சி.சுதோக்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கண்காட்சியில் பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் கலந்துகொள்வார். (16-8)

## மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,ஜூலை6

யாழ். பரி. யோவான் கல்லூரியில் 'ஒன்றுகூடும் இலங்கை' அமைப்பினர் குருநாகல் றோயல் சர்வதேசப் பாடசாலையோடு இணைந்து நடத்தும் மருத்துவ முகாம் குடத்தனை தெற்கு அமெரிக்கன் இலங்கைத் திருச்சபையில் நாளை நடைபெறவுள்ளது. (16)

## மூத்த பிரஜைகளுக்கான கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை6

பருத்தித்துறை வடமராட்சி வடக்கு மூத்த பிரஜைகள் கூட்டம் இன்று முற்பகல் 9.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில்நடைபெறவுள்ளது.

வல்வெட்டித்துறை பிரதேச அரசினர் வைத்திய சாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் கே.மயிலேறும்பெருமாள் இதில் கலந்துகொண்டு 'முதியோர் உடல்நலம்' எனும் தலைப்பில் கருத்துரை வழங்குவார். (16-8)

**தேவை**

புடவை நிலையத்திற்கு விற்பனையில் அனுபவமுள்ளவர்கள் (பெண்கள் மட்டும்) தேவை. சுன்னாகம் அதனை அண்டிய பகுதியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு- 077 5659976 (20071) (17.3)

**ஆசிரியர்கள் தேவை**

Computer Center ஒன்றுக்கு
Ms. Office
DTP
Web Designing
மூன்றும் கற்பிக்கக் கூடிய ஆசிரியர்கள் தேவை.
[illegible] 10.07.2012 இற்கு முன்னர் [illegible]
தபால் பெட்டி இல. 4374
சேர்/ம உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (F/1240) (15.6.8)

## ஸ்ரீ நாக வரத நாராயணர் தேவஸ்தானம் அளவெட்டி - நாகேஸ்வரம் மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

கிரியா கால நிகழ்ச்சிகள்

- .06.07.2012 - வெள்ளி- எண்ணெய்க்காப்பு காலை 7மணி-இரவு 7மணி வரை.
- .07.07.2012 - சனி - திரவிய ஹோமம், பூர்வசந்தனம்.
- .08.07.2012 - ஞாயிறு-முற்பகல் 10.57 இற்குள் மஹா கும்பாபிஷேகம்

பொறுப்புரிமை பரிபாலன சபை

## 12 ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணுலகில் 16 ★ 11 ★ 1936



விண்ணுலகில் 20 ★ 06 ★ 2000

அமரர்

**கந்தையா சண்முகரெட்ணம்**

(யா/தொழிற் திணைக்கள இளைப்பாறிய பிரதம லிகிதர்)

பன்னிரெண்டு ஆண்டு சென்றதப்பா - நீங்கள்
எம்மை விட்டுச் சென்று - ஆனாலும்
நீங்காது எம் பாசம் - மாறாது
எம் துயரம் அப்பா.

உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டுமென கடவுளை வேண்டி நிற்கும்.

குடும்பத்தினர்
மனைவி - பிள்ளைகள் மருமக்கள் - பேரப்பிள்ளைகள்.

29,விபுலானந்தர் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். (c/1243)(14-3)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சரஸ்வதி கந்தையா



நவக்கிரியைப்பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சரஸ்வதி கந்தையா நேற்று (05.07.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நிலக்கண்டு- கதிராசி தம்பதியரின் அன்பு மகளும் கந்தையாவின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.07.2012) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சோமரந்தோட்டம்,
உடுவில் கிழக்கு, சுன்னாகம். (20109)(14.3)

தகவல்:
செல்லக்கண்டு
(சகோதரன்)

## திருமதி சரஸ்வதி இரத்தினசபாபதி



மாதகலைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி இரத்தினசபாபதி கடந்த (30.06.2012) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா-பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-முத்து தம்பதியரின் மருமகளும், இரத்தினசபாபதியின் (ஓய்வு பெற்ற கூட்டுறவு பரிசோதகர்) அன்புமனைவியும், புஸ்பராசம் (மாதகல்), காலஞ்சென்றவர்களான சிவரட்ணம், நவமணி, இராசலட்சுமி, ஆகியோரின் அன்புச் சகோதரியும், பரமேஸ்வரன் (ஜேர்மனி), விஜயேஸ்வரி (கனடா), ரூபரட்னேஸ்வரி (நெதர்லாந்து), காலஞ்சென்ற நகுலேஸ்வரன் மற்றும் ஜெகதீஸ்வரன் (அபிவிருத்தி உதவியாளர் பிரதேச செயலகம் வேலணை), கேதீஸ்வரி(மாதகல்), ஆகியோரின் பாசமிகுதாயாரும் சுஜாதா (ஜேர்மனி) சாந்தகுமார் (கனடா), சிவயோகநாதன் (நெதர்லாந்து), பௌத்திரா (முகாமைத்துவ உதவியாளர் பிரதேச சபை மானிப்பாய்), ஆகியோரின் மாமியாரும் சனந்தியா, மிதுலா, சர்மிலன், கனிசியா, மதுசியா, ஆகியோரின் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (08.07.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதகல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விபுலானந்தர் வீதி,
மாதகல். (20107)(14.3)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரியாலைப் பகுதியிலிருந்து மாடுகள் இரவில் கடத்தல்

யாழ்ப்பாணம்,ஜூலை 6

அரியாலை கிழக்குப் பகுதியில் உள்ள மாடுகள் இரவு வேளைகளில் தரை வழியாகவும், கடல் வழியாகவும் கடத்தப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அரியாலை கிழக்கு, அரியாலை முனங்கு, பூம்புகார் பகுதிகளில் உள்ள வளர்ப்பு மாடுகள் மற்றும் கட்டாக்காலி மாடுகளே இவ்வாறு களவாடப்பட்டுக் கடத்தப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

இரவு நேரங்களில் கடல் வழியாக நாவற்குழி, கோவிலாக்கண்டிப் பகுதிகளுக்கும் தரைவழியாக மணியந்தோட்டம் கண்டிவீதி வழியாகப் பிற இடங்களுக்கும் இந்த மாடுகள் கொண்டு செல்லப்படுகின்றன என்று கூறப்படுகிறது.

இந்தப் பகுதி மக்கள் விவசாயத்தையும், மந்தை வளர்ப்பையும் பிரதான தொழிலாகக் கொண்டவர்கள். இவ்வாறு கால் நடைகள் கடத்தப்படுவது தமது விவசாய நடவடிக்கைக்கும் வருமானத்துக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதாக அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ம-135)

## வடமராட்சி கிழக்கில் வீடுகள் சுவிஸ் அமைப்பு முன்வந்தது

வடமராட்சி, ஜூலை 6


வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு 500 வீடுகளைக் கட்டிக் கொடுக்க சுவிஸ் அபிவிருத்தி முகவர் அமைப்பு முன்வந்துள்ளது.

இந்தத் திட்டத்துக்கான ஆரம்ப நடவடிக்கைகளை குறித்த அமைப்பு மேற்கொண்டுள்ளது.

சுவிஸ் அபிவிருத்தி முகவர் அமைப்பு கடந்த வருடம் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் உள்ள மறவன்புலோவில் 300 வீடுகளை நிர்மாணித்து வழங்கியிருந்தது.

தற்போது இதே பிரதேச செயலர் பிரிவில் கைதடி, நாவற்குழி, தனங்களப்பு ஆகியபகுதிகளில் 145 வீடுகள் இந்த அமைப்பால் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

இந்த வீடுகள் அந்தப் பகுதிகளில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-8)



சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் வடக்கின் வசந்தம் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு அரைகுறை நிலையில் இருக்கும் முற்றவெளி புல்லுக்குளம். (ம-17)

## கொப்பறாவாகும் தேங்காய்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை 6

சாவகச்சேரி பொதுச் சந்தையில் தேங்காயின் விலை சடுதியாக வீழ்ச்சியடைந்துள்ளது. இதன் காரணமாக சந்தையில் தேங்காய்கள் பெரும் எண்ணிக்கையில் தேக்கமடைந்து காணப்படுகின்றன.

தேங்காய் வியாபாரிகள் விற்பனையில் இலாபம் கிடைக்காத காரணத்தால் கொப்பறாவை விற்பனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். பொது மக்கள் எண்ணெய்க்காக கொப்பறாவை கொள்வனவு செய்து வருகின்றனர். இந்த நிலையில் பெரும் எண்ணிக்கையான தேங்காய்கள் கொப்பறாவாக்கப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

# அபிவிருத்திக்குத் தடையாக உள்ள கண்ணிவெடி அபாய பிரதேசங்கள்

### வலி.தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 6

யாழ். மாவட்டத்தில் கண்ணிவெடி அபாய பிரதேசங்கள், அபிவிருத்திக்கும் மீள்குடியேற்றத்துக்கும் தடையாகவுள்ளன.

கண்ணிவெடி அகற்றப்பட வேண்டிய இனங் காணப்பட்ட 4 லட்சத்து 350 ஆயிரம் சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் உள்ள கண்ணிவெடிகளைத் துரிதமாக அகற்றி உதவ கண்ணி வெடி அகற்றலுடன் தொடர்பு பட்ட சகல தரப்பினரும் ஒன்றிணைய வேண்டும்.

'துரித அபிவிருத்திக்கு அரசின் பங்களிப்பு' எனும் தலைப்பில் வட்டுக்கோட்டை பிரதேச மக்களுடனான கருத்தமர்வின்போதே வலி.தென்மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் தர்மலிங்கம் நடனேந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

தலைவர் க.வேல் முருகன் தலைமையில் இடம்பெற்ற கருத்தமர்வில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எமது பிரதேசம் அபிவிருத்தி அடையவும், முப்பது வருட போரின் பின் மக்கள் மீளக்குடியமரவும் கண்ணி 'வெடிகளைத் துரிதமாக அகற்றி உதவ முன்வர வேண்டும்.

வலி. வடக்குப் பிரதேசம் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்படுகிறது. மீள்குடியமர்வுக்கு உட்படுத்தப்பட்ட பகுதிகளில் துரித அபிவிருத்தி இடம்பெறுகின்றது.

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை அந்தப் பகுதி மக்களுக்கு பெரும் சேவையாற்றுகிறது.

வடக்கில் அபிவிருத்திக்கு கண்ணி வெடிகளும் தடையாகவுள்ளன. இவ்வாறான கண்ணிவெடிகள் துரித கதியில் அகற்றப்பட்டால் மட்டுமே மீள்குடியமர்வுகள் பாதுகாப்பானதாக அமையும்.

இதுவரையில் 120 ஆயிரம் தனிநபர் எதிர்ப்பு கண்ணிவெடிகள் அகற்றி அபிவிருத்திக்கு வசதி ஏற்படுத்தப்பட்டள்ளது. வடமாகாண சபை தேர்தலுக்கும் கண்ணி வெடியும் ஒரு காரணமாக தெரியப்படுத்தப்பட்டுள்ளது.- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-41)

## மாநகர சபை ஊழியருக்கு விசேட பஸ் சேவை

வடமராட்சி, ஜூலை 6

வடமராட்சிப் பிரதேசத்திலிருந்து யாழ். மாநகர சபைக்குச் சென்றுவரும் அலுவலர்களின் வசதி கருதி பருத்தித்துறையிலிருந்து யாழ். மாநகர சபைவரை விசேட பஸ் சேவை ஒன்றை யாழ். மாநகர சபை ஆரம்பிக்கவுள்ளது.

யாழ். மாநகரசபையில் பணியாற்றும் வடமராட்சி, வலிகாமம் கிழக்கு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த அலுவலர்கள் விடுத்த கோரிக்கைகளை ஏற்று இதற்கான நடவடிக்கை யாழ். மாநகர சபை எடுத்துள்ளது. இந்திய அரசால் வழங்கப்பட்ட பஸ் ஒன்று திங்கட்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமைவரை அலுவலக தினங்களில் சேவையில் ஈடுபடும்.

தினமும் காலை 7 மணிக்கு பருத்தித்துறையிலிருந்து மந்திகை, நெல்லியடி, கரணவாய், குஞ்சர் கடை, உடுப்பிட்டி, தொண்டைமானாறு, அச்சுவேலி ஆகிய இடங்கள் ஊடாக யாழ். மாநகரசபையைச் சென்றடையும் இந்த பஸ் மாலை 4.15 மணிக்கு யாழ். மாநகர சபையிலிருந்து புறப்பட்டு இதே பாதை ஊடாக பருத்தித்துறையைச் சென்றடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-8)

## திட்டமிடப்படாத பணிகளால் நெருக்கடி நிலையில் பயணிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை 6

வீதி அகலிப்புப் பணிகளின்போது திட்டமிடப்படாத வகையில் பாதைகள் மாற்றஞ்செய்யப்படுவதால் வாகன நெரிசல்கள் ஏற்படுவதுடன் பொதுமக்களும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

யாழ்.மாவட்டத்தின் 4 பிரதான வீதிகள் அகலமாக்கி 'காப்பெற்' போடப்படும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த வகையில் யாழ். நகருக்குள் பிரவேசிக்கும் முக்கிய மார்க்கங்களில் இந்தப் பிரதான வீதிகள் இருப்பதனால் வீதி அகலிப்பின் போது பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

குறிப்பாக கே.கே.எஸ். வீதி அகலிப்புப் பணிகள் யாழ்.நகரப் பகுதியில் இடம்பெற்று வருகின்றன. இதற்காகக் கே.கே.எஸ். வீதியில், வண்ணை சிவன் கோயில் சந்தியிலிருந்து மின்சார நிலைய சந்தி வரையான பகுதி கடந்த மாதம் 25 ஆம் திகதியிலிருந்து மூடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இந்தப் பாதையினூடாக யாழ்.நகருக்குள் பிரவேசித்த தனியார் பஸ்கள், இ.போ.ச. பஸ்கள் மற்றும் ஏனைய வாகனங்கள் என்பன வண்ணார் பண்ணை சிவன் கோயிலின் முன்பாகச் செல்லும் கன்னாதிட்டி வீதியூடாகப் பயணம் செய்து பின்னர் கஸ்தூரியார் வீதியூடாக வின்சர் தியேட்டர் சந்தியை அடைகின்றன.

இதில் கன்னாதிட்டி வீதி, கஸ்தூரியார் வீதி என்பன இரு வழிப் போக்குவரத்துக்குரிய வீதிகளாக இருப்பதனால் தனியார் பஸ்கள் மற்றும் ஏனைய வாகனங்கள் என்பன இருபுறமும் இதனூடாகப் பயணிக்கின்றன.

அத்துடன் இந்த இரு வீதிகளிலும் உள்ள கடைகளின் முன்பாகவும் வாகனங்கள் நிறுத்தப்பட்டிருப்பதால் போக்குவரத்து நெரிசல்கள் ஏற்படுகின்றன.

சம்பந்தப்பட்ட தரப்பினர் இந்த விடயம் தொடர்பில் நடவடிக்கை மேற்கொண்டு போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதுடன் விபத்துக்களையும் தடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-5)

# யாழ். கரையோரப் பகுதிகளிலும் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு

கொழும்புத்துறை, ஜூலை 6

கொழும்புத்துறை, எழிலூர், வளன்புரம் பகுதிகளில் குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

எழிலூர் பகுதியில் யாழ். மாநகர சபையால் பொருத்தப்பட்டுள்ள ஒரேயொரு பொது நீர்த் தாங்கியின் மூலமே பெருமளவு மக்கள் நீரைப்பெற்றுக் கொள்ள முண்டியடிப்பதைக் காண முடிகிறது.

அதேவேளை, வளன்புரம் பகுதியில் சில இடங்களில் பொது நீர்த்தாங்கி அமைக்கப்பட்டுள்ள போதிலும் குறைந்த விசையில் நீர் வருவதால் குறிப்பிட்ட நேரத்தில் அனைவரும் நீரைப் பெற முடியாதுள்ளது.

இதனால் வெகு தூரங்களில் உள்ள ஆலயக் கிணறுகளை நாடிச் சென்று குடிதண்ணீரை எடுத்துவர வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குடிதண்ணீர் தட்டுப்பாட்டை நீக்க உரியவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, தற்போது நிலவும் கடும் வரட்சியான கால நிலையால் யாழ். நகரின் குளங்கள், கிணறுகளில் நீர் வற்றிக் காணப்படுகின்றது.

யாழ். புல்லுக்குளத்தில் இதுவரை காலமும் யாழ். நகரக் கழிவு நீர் வந்து சேர்ந்தமையால் முன்னைய கோடை காலங்களில் நீர் வற்றாது காணப்பட்டது.

தற்போது கழிவு நீர் கடலுக்கு வழிந்தோட வசதியாக புதிய நிலத்தடிக் குழாய்கள் பொருத்தப்பட்டதை அடுத்து இந்த முறை புல்லுக்குளத்தில் நீர் வற்றி கீழ்த்தரை தென்படுகிறது.

அதேவேளை, மறவன்குளம், ஈச்சமோட்டைக் குளம், பாற்குளம், வண்ணாங்குளம், இலந்தைக்குளம், கன்னாதிட்டிக் குளம், கற்குளம், அரியாலை பேச்சியம்மன் குளம், மருதடிக் குளம் என்பனவும் நீரின்றிக் காணப்படுகின்றன.

குளங்களின் நீர்மட்டம் அற்றுப் போனதையடுத்து அந்தப் பகுதிகளில் உள்ள கிணறுகளின் நீர்மட்டமும் விரைவாக குறைவடைந்து வருகின்றது. இதனால் பல இடங்களிலும் மக்கள் நீரைப் பெற்றுக்கொள்வதில் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர். (ம-135-17)

## 12 வருடங்களின் பின்னர் பூசைகள்

பன்னிரண்டு வருடங்களின் பின்னர் எழுதுமட்டுவாழ் தெற்கு சிவன் கோயிலில் பூசைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. போர் வேளையில் மிகவும் சேதமடைந்த நிலையில் காணப்பட்ட ஆலய கட்டடங்கள் புனரமைக்கப்பட்டுள்ளதால் எதிர்வரும் ஒன்பதாம் திகதி பிராயச்சித்த அபிஷேகம் நடைபெற்று பூசைகள் இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக மீனவர்களை விடுவிக்க உடன் நடவடிக்கை எடுங்கள்

## மன்மோகனுக்கு 'ஜெ' கடிதம்

சென்னை, ஜூலை 6

இலங்கை கடற்படையினரால் கைது செய்து சிறையில் உள்ள தமிழக மீனவர்களை இலங்கை விடுவிக்க இந்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா கேட்டுக் கொண்டுள்ளார். இது குறித்து அவர் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அவர் எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது:-

தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் அச்சுறுத்துவதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று கடந்த மாதம் 28 ஆம் திகதி நான் கடிதம் எழுதியிருந்தேன்.

இந்த நிலையில் 2 ஆம் திகதி மீண்டும் இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர்களைக் கைது செய்துள்ள சம்பவங்கள் நடந்துள்ளதைக் கவலையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இராமேஸ்வரத்தில் உள்ள முகுந்தராயன் சத்திரத்தின் மீன்பிடி முகாமைச் சேர்ந்த வல்லம் என்பவர் உட்பட 3 மீனவர்கள் கல்பிட்டித்தீவு அருகே கடந்த மாதம் 29 ஆம் திகதி இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் புகையிலை பொருள்களைக் கடத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். மீனவர்கள், படகைச் செலுத்தி வந்தவர்கள் மேற்கொண்டு விசாரணைக்காக நீர்கொழும்பு அழைத்துச் செல்லப்பட்டனர்.



அதைத் தொடர்ந்து இராமேஸ்வரம் மீன்பிடித் தளத்தை சேர்ந்த 5 பேர் மீன்பிடித்து விட்டு திரும்பும்போது கச்சதீவு அருகே இலங்கைக் கடற்படையினர் அவர்களையும் கைது செய்து இலங்கைச் சிறையில் அடைத்துள்ளனர். ஏற்கனவே 5 இராமேஸ்வரம் மீனவர்கள் 29.11.2011 முதல் இலங்கைச் சிறையில் உள்ளதை நீங்கள் அறிவீர்கள். இப்போது 13 மீனவர்கள் கைது செய்யப்பட்டதுடன் 3 படகுகளையும் பறிமுதல் செய்துள்ளனர்.

இலங்கைக் கடற்படையினரின் இந்த நடவடிக்கை தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தையும், உரிமைகளையும் பறிப்பதாக உள்ளது. எனவே, இந்தப் பிரச்சினையை இலங்கை அரசின் கவனத்துக்கு எடுத்துச் செல்வதுடன், இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுச் சிறையில் உள்ள இராமேஸ்வரம் மீனவர்களை விடுவிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் -என்று அதிலுள்ளது. (வ)

### நக்சல்களுக்கு எதிரான தாக்குதலில்
## பொதுமக்களும் இறந்திருந்தால் அதற்காக வருந்துகிறேன்
### சிதம்பரம் தெரிவிப்பு



டில்லி, ஜூலை.6

சத்தீஸ்கரில் நக்சலைட்டுகளுக்கு எதிரான நடவடிக் கையில் பொது மக்கள் கொல்லப் பட்டிருந்தால் அதற்காக வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன் என்று உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்தார்.

இதனிடையே கடந்த வாரம் நடைபெற்ற பொலிஸாரின் அனுமதிக் கொலையுடன் தொடர்புபட்டோர் குறித்து தகவல்களைச் சேகரித்து வருகின்றேன் என்றும் அந்தத் தகவல்களை பிரதமரிடம் சமர்ப்பிப்பேன் என்றும் மத்திய பழங்குடியின விவகாரங்களுக்கான அமைச்சர் கிஷோர் சந்திரராவ் தெரிவித்தார்.


கடந்த வாரம் பாதுகாப்புப்படையினர் நடத்திய அனுமதிக் கொலையில் பொதுமக்களும் கொல்லப்பட்டார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டது. இதையடுத்து இருவரும் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்துள்ளனர். (வ)

## காஷ்மீரில் தீவிரவாதிகள் மூவர் சுட்டுக்கொலை

ஸ்ரீநகர், ஜூலை6

வடக்கு காஷ்மீரின் குப்வாரா மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினருடன் நிகழ்ந்த மோதலில் 3 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் என்று பாதுகாப்புத் துறை செய்தித் தொடர்பாளர் லெப்டினண்ட் கலோனல் ஜே.எஸ். பிரார் தெரிவித்தார்.

பங்கஸ் பள்ளத்தாக்கில் நேற்று அதிகாலை இந்த சண்டை நடந்ததாகவும் தொடர்ந்து சண்டை நடைபெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (வ)



புதுடில்லியில் இந்தியாவின் வெளியுறவுத்துறை செயலாளர் ரஞ்சன் மத்தாய் மற்றும் பாகிஸ்தானின் வெளியுறவுத்துறை செயலாளர்ஜலீல் அப்பாஸ் ஜிலானி ஆகியோர் சந்தித்துப் பேசினர்.

## மின்னல் தாக்கியதால் விமானம் தரையிறக்கம்
### பயணிகளுக்கு ஆபத்தில்லை

மும்பை, ஜூலை 6

மின்னல் தாக்கியதால் மும்பை விமானம் புறப்பட்ட சில நிமிடங்களில் மீண்டும் அவசர அவசரமாகத் தரையிறங்கியது. இதில் பயணித்த 99 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர். மும்பை விமான நிலையத்தில் இருந்து கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணியளவில் போயிங்-737 விமானம், 99 பயணிகள்,6 விமானிகளுடன் புறப்பட்டது.

40 மைல் உயரத்தில் (12 ஆயிரம் அடி உயரத்தில்) பறந்த போது, 15 ஆவது நிமிடத்தில் விமானத்தை மின்னல் தாக்கியது. இதில் விமானத்தின், ரேடியோ மற்றும் தொலைத்தொடர்பு சாதனங்கள் செயலிழந்தன.

நடுவானில் பறந்தபோது இந்தச் சம்பவம் நடந்ததால் விமானிகள் அதிர்ச்சியடைந்தனர்.

உடனடியாக மும்பை விமான நிலையக் கட்டுப்பாட்டு அறைக்குத் தகவல் தெரிவித்தனர். இதையடுத்து மீண்டும் விமானம் தரையிறங்க ஏற்பாடு செய்யப்பட்டது. இதனால் வானில் பறந்து கொண்டிருந்த விமானம் மீண்டும் மும்பை விமான நிலையத்தில் அவசர அவசரமாக தரையிறங்கியது. அதிலிருந்த 99 பயணிகள் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர். இந்தச் சம்பவத்தால் ஏனைய விமானங்கள் புறப்படுவதில் 40 நிமிடங்கள் தாமதம் ஏற்பட்டன. (வ)

## பாண்டிய மன்னர்களின் பணம் சுவிஸ் வங்கியில் முதலீடு
### ஆய்வு செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவு

சென்னை, ஜூலை 6

மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த பாண்டிய மன்னர்களுக்குச் சொந்தமான பணம் சுவிஸ் நாட்டு வங்கியில் முதலீடு செய்யப்பட்டுள்ளதா என்பது பற்றி ஆய்வு செய்து நீதிமன்றத்தில் தெரிவிக்குமாறு மத்திய அரசுக்குச் சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

பாண்டிய மன்னர்களின் வாரிசுகளுக்குச் சொந்தமானது திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சிவகிரி எஜமான். எஜமானார் தாரி ஒழிப்புச் சட்டத்தின் கீழ் இந்த எஜமானுக்குச் சொந்தமான பல சொத்துகள் அரசால் கையகப்படுத்தப்பட்டன. இதனை எதிர்த்துச் சிவகிரி எஜமானான செந்தட்டிக் காளை பாண்டிய சின்னத்தம்பியார் வழக்குத் தொடர்ந்ததை அடுத்து, ஏராளமான சொத்துகளுக்கு அவர் உரிமையாளர் ஆனார். பின்னர் அந்தச் சொத்துகளில் பல அவரது வாரிசான வரகுணராம பாண்டிய சின்னத் தம்பியாருக்குச் சொந்தமாகின.

அதன் பின்னர் வரகுணராம பாண்டிய தம்பியாரின் சட்டபூர்வமான வாரிசு நான்தான் என்று கூறி எஸ்.கே. ஜெகநாதன் என்பவர் பல வழக்குகளைத் தொடர்ந்துள்ளார். எனினும் நான்தான் உண்மையான வாரிசு என்று கூறி திருநெல்வேலி மாவட்டம் பெருமாள்புரத்தைச் சேர்ந்த பத்மினி ராணி அந்த வழக்குகளில் பிரதிவாதியாகச் சேர்ந்துள்ளார். இவை நிலுவையில் உள்ளன.

இதற்கிடையே சிவகிரி எஜமானுக்குச் சொந்தமான ஏராளமான சொத்துகள் பல பிரதேசங்களில் பரவிக் கிடக்கின்றது என்றும், திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரின் கட்டுப்பாட்டில் பல சொத்துகள் உள்ளன என்றும், சிவகிரி எஜமானுக்குச் சொந்தமான எல்லா சொத்துகளையும் அடையாளம் கண்டு, அதனை வரகுணராம பாண்டிய சின்ன தம்பியாரின் சட்டபூர்வ வாரிசான தன்னிடம் ஒப்படைக்க நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என்று கோரி பத்மினி ராணி ஒரு மனுவை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். இந்த மனு கடந்த15 ஆம் திகதி விசாரணைக்கு வந்தது. அப்போது, சிவகிரி எஜமான் சொத்துகள் தொடர்பாக விசாரணை நடத்தி அறிக்கை தாக்கல் செய்யுமாறு தமிழக அரசுக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர். (வ)

## 50 ஆண்டுகளாக நடைமுறையில் இருக்கும் முதலாவது ஜனாதிபதியின் வங்கிக்கணக்கு

இந்தியாவின் முதலாவது ஜனாதிபதியான ராஜேந்திர பிரசாத்தின் சேமிப்பு வங்கிக் கணக்கு கடந்த 50 ஆண்டுகளாக இன்று வரை நடைமுறையில் உள்ளதாக பஞ்சாப் சர்வதேச வங்கி தெரிவித்துள்ளது.


இந்தியாவின் முதல் ஜனாதிபதியான டாக்டர் ராஜேந்திரபிரசாத் பீகார் மாநிலத்தைச் சேர்ந்தவர். இவர், கடந்த 1884 ஆம் ஆண்டு டிசெம்பர் 3ஆம் திகதி ஷிவான் மாவட்டம் ஜெராதி கிராமத்தில் பிறந்தார்.

காங்கிரஸ் ஆட்சியில் மத்திய அமைச்சர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளை வகித்த ராஜேந்திர பிரசாத், கடந்த 1952ஆம் ஆண்டு இந்தியாவின் முதல் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

இரு முறை ஜனாதிபதியாக இருந்த ராஜேந்திரபிரசாத், 1963 ஆம் ஆண்டு பெப்ரவரி 28ஆம் திகதி மரண மடைந்தார். எனினும் இறப்பதற்கு சில மாதங்களுக்கு முன்பு 1962ஆம் ஆண்டு ஒக்ரோபர் 24 ஆம் திகதியன்று பீகார் மாநில தலைநகர் பாட்னா, கண்காட்சி வீதியில் உள்ள பஞ்சாப் சர்வதேச வங்கியில், தனது பெயரில் சேமிப்புக் கணக்கை ஆரம்பித்தார்.

அவரது சேமிப்புக் கணக்கு இன்று வரை செயற்பாட்டில் தான் உள்ளது என்று வங்கி நிர்வாகம் பெருமையுடன் தெரிவித்துள்ளது.

இது குறித்து வங்கியின் சிரேஷ்ட மேலாளர் எஸ்.எல். குப்தா கூறுகையில், இந்தியாவின் முதல் ஜனாதிபதி, தனது சேமிப்பு வங்கிக் கணக்கை எங்கள் வங்கியில் வைத்துள்ளது பெருமையாக உள்ளது. தற்போது அவரது சேமிப்பு வங்கிக் கணக்கு



0380000100030687 -என்ற எண்ணுடன் அவரது புகைப்படமும் ஒட்டப்பட்டுள்ளது.

இதனை ஆறு மாதங்களுக்கு ஒரு முறை மீளச்சரி பார்த்து இவரது கணக்கில் வட்டித்தொகையைச் செலுத்தி வருகிறோம். இதுவரை அவரது கணக்கில் உள்ள தொகையை சொந்தம் கொண்டாட யாரும் வரவில்லை- என்றார். (வ)

### பத்மநாபசுவாமி ஆலய 'ஏ' அறை திறப்பு

திருவனந்தபுரத்தில் உள்ள பத்மநாப சுவாமி கோயிலில் பொக்கிஷங்களை மதிப்பிடும் பணிக்காக 6 ரகசிய அறைகளில் நேற்றுக் காலை ஏ அறை திறக்கப்பட்டது. தொடர்ந்து பொக்கிஷங்களை மதிப்பிடும் பணி நடைபெற்று வருகின்றது.

பத்மநாப சுவாமி கோயிலில் 6 ரகசிய அறைகள் உள்ளன. இந்த ரகசிய அறைகளில் பல லட்சம் கோடி மதிப்புள்ள பொக்கிஷங்கள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. ஏ முதல் எப் வரை உள்ள இந்த ரகசிய அறைகளில் பி அறை தவிர ஏனைய 5 அறைகளும் திறக்கப்பட்டன. ஏ அறையில் மட்டும் பல லட்சம் கோடி மதிப்புள்ள தங்கம், வைரம், வைடூரியம் உள்பட பொக்கிஷங்கள் இருப்பது தெரியவந்தது.

## 'ரெசோ' மாநாடு சென்னைக்கு மாற்றம்

'ரெசோ' மாநாடு ஓரிரு வாரங்கள் ஒத்தி வைக்கப் படுவதாக தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவித்தார். விழுப்புரத்தில் நடைபெறவிருந்த இந்த மாநாடு சென்னையில் நடை பெறும் என்றும் அவர் அறிவித்தார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் கருணாநிதி இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:

விழுப்புரத்தில் ஒகஸ்ட் 5 ஆம் திகதி நடைபெறுவதாக இருந்த மாநாடு, அதன் பின்னர் ஓரிரு வாரங்கள் கழித்து சென்னையில் நடைபெறும்.

வெளிநாடுகள், வெளி மாநிலங்களில் இருந்து வரும் தலைவர்கள் விமானத்தில் சென்னைக்கு வந்து அதன் பின்னர் விழுப்புரம் சென்று திரும்புவதில் சிக்கல் உள்ளதாகக் கூறினர். அதனால் சென்னையில் மாநாட்டை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இதேவேளை 'ரெசோ' மாநாட்டைக் கைவிட வேண்டும் என்று சிவ்சங்கர் மேனனிடம் இருந்து வலியுறுத்தல் வரவில்லை. அப்படி யென்றால் என்னை அவர் சந்தித்திருப்பார் அல்லவா -என்றார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கென்யா மீதும் பொருளாதாரத் தடை?

ஈரானிலிருந்து கச்சா எண்ணெயை இறக்குமதி செய்யும் தனது திட்டத்தை கென்யா முன்னெடுத்துச் செல்லுமானால், அந்த நாடு பொருளாதாரத் தடைகளை எதிர்கொள்ள நேரிடும் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது.

ஈரான் அரசின் வருமானத்தில் பங்களிப்பதைக் கென்யா குறைத்துக் கொள்வதும், அதன் மத்திய வங்கியுடனான தொடர்புகளை கென்யா மட்டுப்படுத்திக் கொள்வதும் மிகவும் முக்கியமானது என்று கென்யத் தலைநகர் நைரோபியிலுள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

கடந்த மாதம்தான் ஈரானிலிருந்து சுமார் நான்கு மில்லியன் பீப்பாய்கள் அளவுக்கு கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யும் முகமாக ஒரு உடன்பாடு கையெழுத்தானதாகக் கென்யா கூறுகிறது.

எண்ணெய் இறக்குமதியில் சாதகமான கடன் வசதிகள் ஈரானிடமிருந்து கிடைத்தது, அந்த உடன்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள ஒரு காரணமாக இருந்தது என்றும் கென்யா தெரிவித்துள்ளது.

ஈரானின் அணுத்திட்ட செயல்பாடுகள் குறித்துக் கவலைகள் கொண்டுள்ள அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றியமும் அதன் மீதான தடைகளை மேலும் இறுக்கி வருகின்றன.

# பணிந்தது பாகிஸ்தான்

## அமெரிக்காவின் மிரட்டலைத் தொடர்ந்து நேட்டோவுக்கான பாதை திறப்பு

இஸ்லாமாபாத், ஜூலை 6

ஆப்கனில் உள்ள நேட்டோ இராணுவத்தினருக்குத் தேவையான எரிபொருள் மற்றும் உணவுப் பொருள்களை எடுத்துச் செல்லும் வாகனங்களைத் தாக்கப் போவதாகப் பாகிஸ்தானில் செயல்படும் தெஹ்ரிக் - இ - தலிபான் அமைப்பு எச்சரித்துள்ளது.



கடந்த செவ்வாய்க் கிழமை மாலை நடைபெற்ற பாதுகாப்புக் குழு அடங்கிய அமைச்சரவைக் குழு கூடி நேட்டோ படை வாகனங்களை அனுமதிப்பது என்ற முடிவை எடுத்தது. இதன் மூலம் இந்தப் பிரச்சினையில் 7 மாதங்களாக நிலவி வந்த முட்டுக்கட்டை நீங்கியது.

கடந்த ஆண்டு நவம்பர் 24ஆம் திகதி பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் தீவிரவாதிகள் மீது நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதலில் 24 பாகிஸ்தான் ராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

இதையடுத்து, பாகிஸ்தானில் செயல்பட்டு வந்த அமெரிக்காவின் விமானத் தளத்தை உடனடியாக விலக்கிக் கொள்ளுமாறு பாகிஸ்தான் உத்தரவிட்டது. அத்துடன் பாகிஸ்தான் வழியாக ஆப்கனுக்கு நேட்டோ வாகனங்கள் செல்வதற்கு நவம்பர் 26 ஆம் திகதி தொடக்கம் தடை விதிக்கப்பட்டது.

பாகிஸ்தான் ராணுவத்தினர் கொல்லப்பட்டதற்கு அமெரிக்கா பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டபோதிலும் இவ்வளவு காலமாக இந்த விடயத்தில் பாகிஸ்தான் மௌனமாக இருந்தது.

தங்களது பொறுமைக்கும் எல்லையுண்டு என்று அமெரிக்கத் தரப்பில் உறுதியாகத் தெரிவித்த பின்னர், கடந்த செவ்வாய்க்கிழமை கூடிய கூட்டத்தில் நேட்டோ படை வாகனங்களை அனுமதிப்பதென்று முடிவு செய்யப்பட்டது.

பிரதமராகப் பொறுப்பேற்ற பின்னர் முதல் முறையாக இந்தக் கூட்டத்துக்கு ராஜா பர்வேஸ் அஷ்ரப் தலைமை தாங்கினார். நீண்ட விவாதத்துக்குப் பின்னர் நேட்டோ வாகனங்களை அனுமதிப்பது என்று முடிவு செய்யப்பட்டது. வாகனங்களுக்குக் கட்டணம் எதுவும் வசூலிப்பதில்லை என்றும் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

நேட்டோ படை வாகனங்களுக்கு அனுமதி மறுப்பதன் மூலம் அமெரிக்காவுடனான உறவு மட்டும் பாதிக்கப்படவில்லை. மாறாக நேட்டோவில் அங்கம் வகிக்கும் 49 நாடுகளுடனான உறவும் பாதிக்கப்படும் சூழல் உருவானது. இதைத் தவிர்க்கவே வாகனங்களை அனுமதிப்பது என்று முடிவு செய்யப் பட்டது.

> பாகிஸ்தான் ராணுவத்தினர் கொல்லப்பட்டதற்கு அமெரிக்கா பகிரங்கமாக மன்னிப்பு கேட்ட போதிலும் இவ்வளவு காலமாக இந்த விஷயத்தில் பாகிஸ்தான் மௌனமாக இருந்தது.

அபாயகரமான ஆபத்து விளைவிக்கக்கூடிய பொருள்களை எடுத்துச் செல்லக் கூடாது என்றும் ஆப்கனில் அமைதியை நிலைநாட்டத் தேவையான பாதுகாப்புக் கருவிகளை மட்டுமே எடுத்துச் செல்ல வேண்டும் என்றும் கூட்டத்துக்குப் பின்னர் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையில் நேட்டோ வாகனங்களை நிச்சயம் தாக்குவோம் என்று தெஹ்ரிக்-இ-தலிபான் அமைப்பின் தலைவர் இஷானுல்லா இஷான் எச்சரித்துள்ளார்.

பாகிஸ்தான் சாலை வழியாக ஆப்கன் செல்லும் வாகனங்களைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்துவது என்றும் முடிவு செய்துள்ளதாகக் குறிப்பிட்டார். தலிபான்களின் தாக்குதல் எவ்விதம் இருக்கும் என்பதை இனித் தான் அவர்கள் உணர்வர்.

ஆப்கனில் உள்ளவர்களும் இஸ்லாமிய சகோதரர்கள்தான். அவர்களைக் கொல்வதற்கு நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். அந்தச் செயலில் ஈடுபடுவோரை நிச்சயம் பழிதீர்ப்போம் என்று அவர் கூறினார்.

இதனிடையே பாகிஸ்தானின் இந்த முடிவை வரவேற்பதாக, நேட்டோ படையின் தலைவர் ஜெனரல் கோன் அலன் வரவேற்றுள்ளார். பாகிஸ்தானின் இந்த முடிவை வரவேற்பதாக அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளின்ரன் கருத்து தெரிவித்துள்ளார்.

## மழைப்பயணம்....



பங்களாதேஷில் ஏற்பட்டிருக்கும் வெள்ள அபாயத்தில் இருந்து தப்புவதற்காகப் படகுகளில் இடம்பெயர்கின்றனர் மக்கள்.

## மத நிந்தனை செய்தவர் எரித்துக் கொலை

பாகிஸ்தானில் மத நிந்தனை செய்தார் என்கிற குற்றச்சாட்டின் பேரில், காவல் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒருவரை, கோபமடைந்த கூட்டம் ஒன்று பிடித்துச் சென்று எரித்துக் கொலை செய்துள்ளது.

பஞ்சாப் மாகாணம் பஹாவல்பூருக்கு அருகிலிருந்த ஒரு காவல் நிலையத்தில் அந்த நபர் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். புனித குரானின் ஒரு பிரதியை அவர் வெளிப்படையாக எரித்தார் என்று அவர் மீது குற்றச்சாட்டு வைக்கப்பட்டது.

அந்த நபரைப் பிடித்துச் சென்றக் கூட்டத்தினர் அவரை எரியூட்டிய போது, அவர் அலறியதை நூற்றுக்கணக்கான மக்கள் வேடிக்கை பார்த்ததாகச் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் கூறினார்கள். மனநிலை சரியில்லாதவர் என்று கூறப்படும் அந்த நபரை தாங்கள் அடையாளம் காண முயன்று வருவதாகவும் காவல்துறையினர் தெரிவிக்கின்றனர்.

எனினும் இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் யாரும் இதுவரை கைது செய்யப் படவில்லை.

## வீட்டு உரிமையாளருக்கு வேட்டு வைத்த வாடகைக்காரர்

ஜேர்மனியில், வீட்டை விட்டு வெளியேறச் சொன்ன வீட்டு உரிமையாளர் உள்ளிட்ட நான்கு பேரை, பிணைக் கைதியாகப் பிடித்து வைத்திருந்த குடியிருப்பாளர், அவர்களைச் சுட்டுக் கொன்று விட்டு தானும் தற்கொலை செய்து கொண்டார். ஜேர்மனியின் தென்மேற்குப் பகுதியில் உள்ள நகரம் கார்ல்ஸ்ருகி. இங்குள்ள குடியிருப்பில் வசித்து வந்த ஒருவர், தனது வீட்டு உரிமையாளருக்கு, நீண்ட நாள்களாக வாடகை கொடுக்காமல் இருந்துள்ளார். இதையடுத்து அந்த வீட்டு உரிமையாளர், அமீனா மற்றும் பூட்டைத் திறக்கும் தொழிலாளர், மற்றும் ஒரு பெண் ஆகியோர், சம்பந்தப்பட்டவரின் வீட்டுக்குச் சென்று, வீட்டை விட்டு வெளியேறச் சொல்லியுள்ளனர். இதையடுத்து, இவர்கள் நான்கு பேரையும் அந்தக் குடியிருப்பாளர், பிணைக் கைதிகளாகப் பிடித்து வைத்துக் கொண்டார். நேற்று முன்தினம் காலை அந்த வீட்டில் துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்டது. இதைக் கேள்விப்பட்ட பொலிஸார், பிணைக் கைதிகளை விடுவிக்க முயன்றனர். இந்த முயற்சி பலன் அளிக்காததால், அதிரடிப் படையினர், சம்பந்தப்பட்ட வீட்டின் கதவை உடைத்து உள்ளே சென்றனர். அங்கு குடியிருப்பாளர் உள்ளிட்ட ஐந்து பேரும் சுடப்பட்ட நிலையில் இறந்து கிடந்தனர். இது தொடர்பாகப் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். குடியிருப்பாளர் வேட்டைக்காகப் பயன்படுத்தும் ஆயுதங்களைக் கொண்டு இந்தத் தாக்குதலை நடத்தியதாகப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

## நெல்சன் மண்டேலாவின் மகள் ஆர்ஜென்ரீனாவுக்கான தூதராகின்றார்



ஜோகன்னஸ்பார்க், ஜூலை 6

தென் ஆபிரிக்கத் தலைவர் நெல்சன் மண்டேலாவின் மகள் ஜெனானி, ஆர்ஜென்ரீனாவுக்கான தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தென் ஆபிரிக்கத் தலைவரான நெல்சன் மண்டேலாவின் மூத்த மகள் ஜெனானி. மண்டேலா சிறையில் இருந்த போது, 16 வயதுப் பெண்ணான ஜெனானி, தனது தந்தையைப் பார்க்கச் சென்றபோது, இவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது. 1973 ஆம் ஆண்டு, சுவாசி நாட்டு இளவரசரைத் திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு இரண்டு மகன்கள் உள்ளனர்.

ஜெனானி, அமெரிக்காவின் பாஸ்டன் நகரில் படித்தார். [illegible] வியாபாரத்துச் செய்த பின், தற்போது தென் ஆபிரிக்காவில் தான் வசிக்கிறார். இதற்கிடையே, இவர் ஆர்ஜென்ரீனாவின் தூதராக நியமிக்கப்பட்டு உள்ளார். இவர் தூதராக நியமிக்கப்பட்டுள்ளதை ஆர்ஜென்ரீன அரசு வரவேற்றுள்ளது.

## தேநீருக்காகக் காத்திருந்த பிரிட்டிஷ் பிரதமர் கமரூன்

பிரிட்டனில் சிற்றுண்டிச் சாலைப் பெண் ஊழியர் ஒருவர், அங்கு தேநீர் அருந்த வந்த பிரதமரைக் காத்திருக்க வைத்த சம்பவம் பரபரப்பினை ஏற்படுத்தியது. இதனால் சுமார் 10 நிமிடம் தேநீருக்காகப் பிரதமர் காத்திருந்தார். இது குறித்து டெய்லி மெயில் பத்திரிகையில் கூறப்பட்டிருப்பதாவது:-

பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன், ஆயுதப் படை தின நிகழ்ச்சியில் கலந்து கொள்ள அலுவலகக் காரில் சென்றார். பிளைமோவுத் பகுதியில் வந்த போது வழியில் சான்விஜ் பாக்ஸ் பிளஸ் தேநீர் கடையில் காரை நிறுத்தச் சொல்லி அங்கு சென்று தேநீர் அருந்த கடைக்குள் சென்றார்.

அங்கிருந்த பெண் ஊழியர் ஷீலா தோமஸ், பிரதமர் எனத் தெரியாமல், வரிசையில் நிற்குமாறு கூறினார். வரிசையில் நிற்க முடியாது விரைவாகத் தேநீர் தருமாறு கூறினார். உடனே கோபமடைந்த ஊழியர், தான் வேறு வேலையில் இருப்பதால் உடனே தரமுடியாது வரிசையில் நிற்குமாறு கூறி வாக்குவாதம் செய்தார்.

பிரதமரின் உதவியாளர்கள் அங்கு வந்தபின்னர் தான் கடையில் தேநீர் அருந்த வந்தவர் பிரதமர் டேவிட் கமரூன் எனத் தெரிந்தது. அதிர்ச்சியடைந்த பெண் ஊழியர் மன்னிப்புக் கேட்டார். எனினும் அவரின் வாக்குவாதத்தினால் அங்கு 10 நிமிடம் தேநீருக்காகப் பிரதமர் கமரூன் காத்திருக்க வேண்டியதாயிற்று. இவ்வாறு அந்தப் பத்திரிகையில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

## பாங்கொக்கில் வெடிப்புச் சம்பவம்

தாய்லாந்தின் பாங்கொக்கில் உள்ள எண்ணெய் கிடங்கு மற்றும் சுத்திகரிக்கும் நிலையத்தில் பெரும் வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது என அந்த நாட்டுப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

வெடிப்புச் சம்பவம் இடம் பெற்ற பகுதி பெரும் புகை மண்டலமாகக் காணப்படுகின்றது எனவும் அந்த நாட்டுத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

வெடிப்புச் சம்பவம் தொடர்பான சேதவிவரங்கள் எதுவும் இதுவரையில் வெளியாகவில்லை எனவும் விபத்து இடம் பெற்ற போது தொழிற்சாலையில் இருந்த பணியாளர்கள் தொடர்பான விவரங்களை சேகரிப்பதாகவும் அந்த நாட்டுப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் வெடிப்புச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் இடம் பெறுகின்றன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழிப் போராட்டம்

## ரஷ்யாவுக்கு எதிராக உக்ரேனியர்கள் போர்க்கொடி

உக்ரேனில் ரஷ்ய மொழிக்கு பிராந்திய மொழி அந்தஸ்து அளிக்கும் புதிய சட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களைக் கலைப்பதற்குப் பொலிஸார் மேற்கொண்ட கண்ணீர்ப் புகைப் பிரயோகத்தினால் பலர் காயமடைந்துள்ளனர்.

உக்ரேனிய ஜனாதிபதி மாளிகைக்கு முன்னால் ஜனாதிபதி விக்டர் யனுகோவிச் உரையாற்றத் திட்டமிட்டிருந்த நிலையில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஜனாதிபதி யனுகோவிச்சின் கட்சியினால் வரையப்பட்ட இந்தச் சட்ட மூலங்களில் பெரும்பாலானவை அதிக விவாதங்களின்றி அங்கீகரிக்கப்பட்டன என்று கூறப்படுகிறது.



உலகப் புகழ்பெற்ற குத்துச்சண்டை வீரர் விட்டாலி கிளிட்ஸ்கோவும் இந்த ஆர்ப்பாட்டத்தின்போது காயமடைந்துள்ளார். சுமார் 1000 பேர் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றினர்.

உக்ரேனின் கிழக்கு மற்றும் தெற்குப் பிராந்தியங்களில் பெரும்பாலான மக்களின் தாய்மொழியாக ரஷ்ய மொழி விளங்குகிறது. இந்த நிலையில் புதிய சட்டங்களின்படி ரஷ்யமொழிக்குப் பிராந்தியமொழி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

ரஷ்ய மொழி பேசப்படும் பிராந்தியங்களில் நீதிமன்றங்கள், வைத்தியசாலைகள், பாடசாலைகள் முதலானவற்றில் ரஷ்ய மொழியைப் பயன்படுத்த முடியும். அதே

**உக்ரேனின் கிழக்கு மற்றும் தெற்குப் பிராந்தியங்களில் பெரும்பாலான மக்களின் தாய்மொழியாக ரஷ்யமொழி விளங்குகிறது.**

வேளை உக்ரேனிய மொழி தொடர்ந்தும் அரச மொழியாக இருக்கும்.

ஜனாதிபதி விக்டர் யனுகோவிச்சின் ஆதரவுத்தளம் ரஷ்ய மொழிபேசப்படும் கிழக்கு உக்ரேனிலேயே உள்ளமை குறிப்பிடத்தக்கது. அவர் ரஷ்யாவுக்கு நெருக்கமாகச் செயற்படுவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்துகின்றன

## மெக்சிக்கோ தேர்தலில் ஊழல்; குற்றஞ்சாட்டுகிறார் எதிர்க்கட்சித் தலைவர்



மெக்சிக்கோ, ஜூலை 6

மெக்சிக்கோ ஜனாதிபதித் தேர்தல் பெறுபேறுகளை ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் இந்த வாக்குகளை முற்றாக மீள எண்ணவேண்டும் எனவும் இந்தத் தேர்தலில் இரண்டாமிடம் பெற்ற வேட்பாளரான அன்ட்ரெஸ் மனுவெல் லோபஸ் ஒப்ராடர் வலியுறுத்தியுள்ளார்.

பரந்தளவான முறைகேடுகள் இடம்பெற்றமைக்கான ஆதாரங்கள் உள்ளன. ஜனநாயகத்தின் நலனுக்காக அனைத்து வாக்குகளும் மீள எண்ணவேண்டும் என இடதுசாரி ஜனநாயக புரட்சிக் கட்சியின் வேட்பாளரான லோபஸ் ஒப்ராடர் கூறியுள்ளார்.

இந்தத் தேர்தலில் முன்னாள் ஆளும் கட்சியான பி.ஆர்.ஐ. கட்சியின் வேட்பாளர் பேனா நியோட்டா முன்னிலையில் உள்ளார் என ஆரம்பகட்ட உத்தியோகபூர்வ பெறுபேறுகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஞாயிறன்று நடைபெற்ற இந்தத் தேர்தலில் சுமார் 50 லட்சம் பேர் வாக்களித்தனர். இதில் பேனா நியோட்டோ 38.15 சதவீத வாக்குகளையும் லோபஸ் ஒப்ராடர் 31.64 சதவீத வாக்குகளையும் பெற்றுள்ளனர்

**இந்தத் தேர்தலில் முன்னாள் ஆளும் கட்சியான பி.ஆர்.ஐ. கட்சியின் வேட்பாளர் பேனா நியோட்டா முன்னிலையில் உள்ளார் என ஆரம்பகட்ட உத்தியோகபூர்வ பெறுபேறுகள் தெரிவிக்கின்றன.**

எனத் தெரிவிக்கப்படுகிறது.

2006 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி பெலிப் கல்டோரோனிடம் 0.56 சதவீத வாக்குகளால் லோபஸ் ஒப்ராடர் தோல்வியடைந்திருந்தார்.

அதையடுத்து தேர்தலில் முறைகேடுகள் இடம்பெற்றன எனக் கூறி, மெக்சிக்கோவில் பெரும் ஆர்ப்பாட்டங்களை ஒப்ராடர் நடத்தினார்.

எனினும் தேர்தல் நீதியாக நடைபெற்றது எனவும் பெலிப் கல்டோரோன் வெற்றிபெற்றார் எனவும் அந்த நாட்டுத் தேர்தல் ஆணையகம் அறிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## அரபாத்தின் கல்லறையைத் தோண்டுவதற்கு முடிவு

பாலஸ்தீனத்தின் மேற்கு கரையில் உள்ள, ரமலாவில் அடக்கம் செய்யப்பட்ட, யாசீர் அரபாத்தின் உடலை மீண்டும் தோண்டியெடுத்து, பரிசோதனை செய்யத் தயாராக இருப்பதாக, பாலஸ்தீன நிர்வாகம் தெரிவித்துள்ளது. பாலஸ்தீன விடுதலைக்காக, 40 ஆண்டு காலம் போராடியவர் யாசீர் அரபாத். இஸ்ரேலியப் படைகள் பாலஸ்தீனத்தை முற்றுகையிட்டிருந்த நிலையில், 75 வயதான அரபாத் நோய்வாய்ப்பட்டதால் அவர் பிரான்ஸ் நாட்டு விமானம் மூலம் பாரிஸூக்கு அழைத்து செல்லப்பட்டார்.

2004ஆம் ஆண்டு நவம்பர் 11ஆம்திகதி இவர் பாரிஸ் புறநகரில் உள்ள மருத்துவமனையில் இறந்தார். இவருடைய இறப்பில் பாலஸ்தீன தலைவர்கள் சந்தேகப்பட்டனர். கோமா நிலையில் அரபாத் இறந்ததால், பிரேத பரிசோதனை ஏதும் செய்யப்படாமல் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது.

இதற்கிடையே, அரபாத் இறக்கும் தறுவாயில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு அறிக்கையை சுவிற்சர்லாந்து ஆய்வகம் சமீபத்தில் வெளியிட்டுள்ளது. அரபாத் இறக்கும் போது அவரது உடலில் கொடிய விஷமான 'பொலொனியம்' இருந்துள்ளது. ரஷ்ய உளவாளியான அலெக்சாண்டர் லிட்வினென்கோ என்பவர், லண்டன் விடுதியில் தேநீர்க் கோப்பையில் தடவப்பட்ட பொலொனியம் விஷத்தால் கொல்லப்பட்டார். இதே முறையில் தான் அரபாத் உடலிலும் பொலோனியம் இருந்துள்ளது, என ஆய்வக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

'அவர் விஷம் வைத்து கொல்லப்பட்டார் என்பதை உறுதியாக நிரூபிக்க வேண்டுமென்றால், அவர் உடலை மீண்டும் தோண்டியெடுத்துத் தான் ஆராய்ச்சி செய்ய வேண்டும், அவரது உடலைப் பிரேத பரிசோதனை செய்ய வேண்டும், எனக் கோரும் உரிமை அரபாத்தின் மனைவி சுஹாவுக்கு மட்டுமே உள்ளது' என, சுவிட்சர்லாந்தின் கதிர்வீச்சு இயற்பியல் துறைத் தலைவர் பிரான்காய்ஸ் புக்கட் தெரிவித்துள்ளார். யாசீர் அராபத்தின் மனைவி சுஹா பேட்டி ஒன்றில் , 'அரபாத் கொல்லப்பட்டுள்ளார் என்ற விஷயம், உலகுக்குத் தெரிய வேண்டும். எனவே, அவரது உடல் தோண்டி யெடுக்கப்பட்டு பிரேத பரிசோதனை செய்யப்பட வேண்டும்' என்றார். ஆனால், யாரையும் அவர் குற்றம்சாட்டவில்லை.

இதுகுறித்து, பாலஸ்தீன ஜனாதிபதியின் தகவல் தொடர்பாளர் நபில் அபுதினே குறிப்பிடுகையில், 'அரபாத் மனைவி சுஹாவின் கோரிக்கையை ஏற்று, ரமலாவில் அடக்கம் செய்யப்பட்டுள்ள, அரபாத்தின் உடலை மீண்டும் வெளியே எடுத்து பரிசோதிக்கத் தயாராக உள்ளோம்' என்றார். ஆனால், எப்போது அவரது உடல் வெளியே எடுக்கப்படும் என்பதை, அவர் தெரிவிக்கவில்லை.

அரபாத்தின் எதிரியாகக் கருதியது, இஸ்ரேலைத் தான். எனவே, அந்த நாடு தான் அவரைக் கொன்றிருக்க வேண்டும் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. ஆனால், இதை இஸ்ரேல் ராணுவம் மறுத்துள்ளது. 'அரபாத், பாலஸ்தீனர்களிடம் தான் இருந்தார். எனவே, அவர் மரணத்தில் எங்களுக்குத் தொடர்பில்லை' என, இஸ்ரேல் தெரிவித்துள்ளது.


## ஐந்தாம் ஆண்டு நினைவுகளில்

பிறப்பு 15 ★ 04 ★ 1933



இறப்பு 03 ★ 07 ★ 2007

அமரர் நேசம்மா அப்புத்துரை

திதி : திருதியை (06.07.2012)

பண்பின் ஒளிவிளக்காய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் இருப்பிடமாய் வாழ்ந்தீர்
உங்கள் அன்புப் பார்வையும் மகிழ்வித்த வார்த்தைகளையும்
அரவணைத்த கரங்களையும் இழந்து ஆண்டுகள் ஐந்து
ஆனதே ஆறவில்லை எங்கள் இதயம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்

அம்பகர் லேன், கொக்குவில் கிழக்கு,
கொக்குவில் (20077)(6-7-8) குடும்பத்தினர்

### வீடு விற்பனைக்கு

சுண்டுக்குளி, விதானையார் வீதியில் 1½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொ.பே: 077 6146434

(20084)(6-7-8)

### தவறிவிட்டது

வீரகத்தி நாகராசா என்பவருடைய தேசிய அடையாள அட்டை 25.06.2012 திங்கட்கிழமை இருபாலைச் சந்திக்கும் கோண்டாவில் டிப்போவிற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:- 0778695326 (20085)(2,6,7)

### நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

60 நாள் நிரம்பிய பூச்சி நீக்கிய ஊசி போட்ட சுத்த இன அல்சேஷன் ஆண், பெண் நாய்க்குட்டிகளும் 3 வயது நிரம்பிய பொமனேரியன் ஆண், கறுப்புநாயும் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- A.G. செல்வம்,
107, டேவிற் வீதி, யாழ்ப்பாணம். (20087)(2,6,7)

### ஒத்துமாறல்

பம்பலப்பிட்டியில் உள்ள தேசிய பாடசாலை யொன்றில் கடமையாற்றும் நடனப் பட்டதாரி ஆசிரியை ஒருவர் யாழ்ப்பாணத்தில் உள்ள தேசிய பாடசாலை ஒன்றுக்கு ஒத்துமாற விரும்புகிறார்.

தொடர்புகளுக்கு:- 0779366128 (20089) (2,6,7)

### காணி விற்பனைக்குண்டு

கச்சாய் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு அருகில் கச்சாய் தோட்டம் மாரியான்காடு என்னும் 17 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட தென்னை [illegible]

தொடர்பு: 077 5227107

(20081)(6-8)

## மரண அறிவித்தல்

### தாமோதரம்பிள்ளை சின்னத்தம்பி



நீர்வேலியை பிறப்பிடமாகவும், வட்டக்கச்சி இல. 253 சிவசுந்தரம் வீதியையும் தற்போது ஏழாம்கட்டை பழைய தபாற்கந்தோர் அருகில் நீர்வேலி வடக்கை வதிவிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை சின்னத்தம்பி 30.06. 2012 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் தாமோதரம்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும், கமலாம்பிகையின் அன்புக்கணவரும், பாலேந்திரன் (கண்ணன், டென்மார்க்), வசந்தி (பவா, ஆஸ்திரேலியா), சிவமுருகானந்தன் (அப்பன், லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.07.2012) மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி வடக்கு சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


07 ஆம் கட்டை,
பழைய தபால் கந்தோர் அருகில்,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி. (20091) (7-8-22)

தகவல்
மனைவி, பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாய்ப்பு வரும் நேரம்

(20)



அது மிகவும் கவர்ச்சி அளிப்பதாக இருந்ததைக் கண்ட அந்த இளைஞன் இரவு முழுவதும் உட்கார்ந்து அந்தப் பெரிய புத்தகத்தைப் படித்தான். அவ்வப்போது, நட்சத்திர மண்டலங்களின் விந்தைகளைப் பற்றிய அனைத்தையும் தன்னால் இயன்றவரையில் கற்றுக் கொள்ள வேண்டுமென முடிவு செய்தான்.

அவன் ஒரு சிறிய டெலஸ்கோப்பை வாங்கினான். அவன் இரவு நேரத்தில் பொங்கிடும் மகிழ்ச்சியுடன் கூரையின் மீது அமர்ந்து கொண்டு, வியப்படைந்த அவனது கண்களுக்குத் தோற்றம் அளித்த ஆகாய அழகுகளை ஆராய்ந்தான். தனது குறைந்த வருமானத்தில் பெரிய டெலஸ்கோப்பின் குழாய் ஒன்றை வாங்கி அதனுடன் ஒரு பூதக் கண்ணாடியைப் பொருத்தினான். பிலடெல்பியாவிலிருந்து ஒரு பிம்ப பிரதிபலிப்புக் கண்ணாடி வாங்கினான். அவன் அந்தக் கண்ணாடியால் புதியதாக ஒன்றைக் கண்டுபிடித்தவுடனே, அன்றைய சிறந்த வானியல் அறிஞர்கள் அவனை அறிந்து கொண்டனர். அந்த நேரத்திலிருந்து பேராசிரியர் இ.இ.பெர்னார்டு என்ற பெயர் உலகம் முழுவதும் உள்ள விஞ்ஞானிகளிடையே வேகமாகப் பரவியது.

பாரீசில் ஒரு பொது அரங்கத்தில் வழிகாட்டியாக இருந்தவர். எம்.லூயி பாஸ்டர். அங்கு ஒரு மாணவனுடன் பழக்கம் ஏற்படுத்திக் கொண்டதும், அவன் அவரைத் தனது மைக்ராஸ்கோப் மூலமாகப் பார்க்க அனுமதித்ததும் ஒரு மகிழ்ச்சியான நிகழ்வு இல்லையா? அந்தச் சமயத்தில் அந்தக் கருவி வெளிப்படுத்திக் காண்பித்த புதிய உலகத்தை நோக்குவதில் அடக்க முடியாத ஆர்வம் காட்டினார். அந்தக் கருவியைப் பயன்படுத்துவதில் தன்னை வல்லவனாக்கிக் கொள்ளும் வரையில் ஓய்வு எடுக்கவில்லை. அவர் அதன் மூலமாகப் பல சிறந்த புதிய அதிசயங்களைக் கண்டுபிடித்தார்.

உலகின் முன்னணி பூச்சி நூல் ஆய்வு நிபுணர்களில் ஒருவர், தனது வாழ்வை மாவட்டப் பள்ளியில் படிக்கும் ஒரு மந்தமான சிறுவனாக ஆரம்பித்தார். அவனது ஆசிரியையால் அவனுக்கு எளிமையான அடிப்படை அறிவைச் சொல்லிப் புரிய வைக்க முடியவில்லை. ஆனால் ஒருநாள், அவனைக் கவனிக்கும்போது, அவன் தனது மேஜையில் உள்ள ஏதோ ஒன்றைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருப்பதையும், அவன் ஈயின் பழக்கங்களைக் கவனித்து அறிந்து கொள்வதையும் கண்டார். அவனைப் பாடம் ஒப்பிக்க அடுத்த முறை அழைத்த போது, ஆசிரியை வகுப்பு மாணவர்களிடம் சொன்னார். 'நீங்கள் ஆயிரக்கணக்கான ஈக்களைப் பார்த்திருப்பீர்கள். ஒவ்வொருவரும் ஈயைப் பற்றிய உங்கள் கருத்தைச் சொல்ல வேண்டும்.'' அந்த மந்தமான சிறுவன் வகுப்பினருக்கு ஈயைப் பற்றி விவரமாகச் சொன்னதுடன், பலவிதமான மூட்டைப் பூச்சிகளைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தான். அந்த நாளிலிருந்து ஆசிரியை அவனது இயல்பான திறமைக்கு ஊக்கமளிக்க ஆரம்பித்தார். கடைசியில், அவன் மேல் படிப்பு பெற ஐரோப்பாவிற்கு அனுப்பப்பட்டான். அவன் லீப்சிங் நகரில் நேஷனல் கன்சர்வேட்டரி ஆஃப் சையன்ஸ் அமைப்பின் மாடரேட்டராகச் சேர்ந்தான். பிறகு, வாஷிங்டனில் உள்ள ஸ்மித்சோனியன் இன்ஸ்டிடியூஷனுடன் தொடர்புடையவனாக இருந்தான். இன்று அவன் ஐரோப்பாவில் தலைநகரங்களின் ஒன்றில் ஆய்வுப் பணியில் ஈடுபட்டுள்ளான்.

அந்த மாவட்டப் பள்ளி ஆசிரியை எவ்வளவு புத்திசாலித்தனமாக, அந்தச் சிறுவனுக்குச் சரியான இடம் எதுவென்பதைச் சொல்லிக் கொடுத்தார்; அவர் எவ்வளவு புத்திசாலித்தனமாக அதை அவன் கண்டுபிடிக்க உதவி செய்தார். பிரான்ஸின் சிறந்த ஓவியர் 'மில்லட்'டின் தந்தை புத்திசாலித்தனத்துடன் தன் மகனிடம் சொன்னார், 'நீ விரும்புவதை ஓவியமாக வரை; உனக்கு மகிழ்ச்சி அளிக்கக் கூடியதைத் தேர்ந்தெடு; உனது கற்பனையைப் பின்பற்று.'' அந்தக் குடியானவச் சிறுவன் மில்லட்,ஓவியம் வரையும் முதல் தூண்டுதலை குடும்பத்தின் பழைய பைபிளில் இருந்து படங்களிலிருந்து பெற்றான். ஓவியனாக அவனது வாழ்க்கை மரப்பீரோக்களுக்கு வண்ணம் தீட்டுவதில் ஆரம்பித்தது, அவனது தொழில் அவன் வரைந்த 'மணிகள் ஒலிக்க இயேசு அவதரிக்கும்' ஓவியம் 6,00,000 பிராங்குகளுக்கு மேல் விற்பனை அடையும் உச்சநிலையை எட்டியது.

நான் அதைப் பற்றிக் கேட்கவில்லை

மிகவும் திறமையுடன் பியானோ வாசித்த 12 வயதுச் சிறுவன் இசை அமைப்பாளர் மோசர்ட்டிடம் கேட்டான். நான் ஏதாவது இசை அமைக்க விரும்புகிறேன். நான் எப்படி ஆரம்பிப்பது?'' 'ஃபூ... நீ காத்திருக்க வேண்டும்.' என்று அவர் பதில் அளித்தார். ''ஆனால், நீங்கள் என்னை விடச் சிறியவனாக இருந்தபோதே இசை அமைக்க ஆரம்பித்து விட்டீர்களே'' என்றான் அந்தச் சிறுவன். ஆம் ஆரம்பித்து விட்டேன். ஆனால், நான் ஒருபோதும் அதைப் பற்றிக் கேட்கவில்லை.

-ஓரிசன் ஸ்வெட் மார்டன்- (தொடரும்)

# மொழித்திறன் குன்றி வருவதால் மாணவரின் அடைவு மட்டம் சரிவு

## தொலைக்காட்சி, தனியார் கல்வி நிலையங்களால் இந்நிலைமை

வடமராட்சி ஜூலை 6

தமிழ்மொழி மாணவர்களிடையே மொழித்திறன் விருத்தி குன்றி வருவதால் தமிழ்மொழியில் மட்டுமல்லாது ஏனைய பாடங்களிலும் தமிழ் மாணவர்களின் அடைவு மட்டம் குறைந்து கொண்டு வருகின்றது என்று தெரிவித்தார் வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் ந.அனந்தராஜ்.

வல்வெட்டித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட ஜி.சி.ஈ. உயர்தர வகுப்புக்களைக்கொண்ட வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி, தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம், வல்வை மகளிர் வித்தியாலயம், ஆகிய உயர்தரப் பாடசாலைகளில் கற்கும் மாணவர்களுக்கான சிறுகதை ஆக்கப் பயிற்சிப் பட்டறை வல்வை கலைகலாசார இலக்கிய மன்றத் தலைவர் எஸ்.சுமன் தலைமையில் இரு தினங்கள் வல்வெட்டித்துறை பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அனந்தராஜ் இவ்வாறு தெரிவித்தார்

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

மாணவர்களிடையே அதுவும் குறிப்பாக தமிழ் மாணவர்களிடையே மொழித்திறன் குன்றிவருவது கவலைக்குரியது. மாணவர்களின் வாசிப்புத்திறன் மட்டம் குறைந்து சென்று, அதிக அளவு நேரம் தனியார் கல்வி நிலையங்களிலும்,கேபிள் தொலைக்காட்சியைப் பார்ப்பதிலும் நேரத்தையும், பணத்தையும் விரயம் செய்வதாலும் தமிழ் மாணவர்களிடையே மொழிவிருத்தி, ஆக்கத்திறன் மட்டம் வீழ்ச்சியடைந்து கொண்டு வருகின்றது.

இதனைக் கல்வியாளர்கள் என்ற வகையில் தொடர்ந்தும் நாம் அனுமதித்துக் கொண்டிருக்க முடியாது. மாணவர்களிடையே வாசிப்புத்திறன் ஊடாக ஆக்கத்திறனை மேம்படுத்தும் நோக்கிலேயே ஆக்கத்திறன் பயிற்சிப் பட்டறைகளை நடத்துவதற்கு வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம் மற்றும் பருத்தித்துறை வடக்கு பிரதேச செயலகத்தின் கலாசாரப் பிரிவு,வல்வெட்டித்துறை கலை, கலாசார, இலக்கிய மன்றத்தின் ஊடாக மாணவர்களிடையே ஆக்கத்திறன் பயிற்சிப்பட்டறைகளை தொடர்ச்சியாக நடத்துவதற்கு முன்வந்துள்ளது. இந்த முயற்சியை முன்னெடுப்பதற்கு வல்வெட்டித்துறை கலை, கலாசார இலக்கிய மன்றத்தின் இளைஞர்கள் முன்வந்தமை நல்ல ஆரோக்கியமான அறிகுறியாகும்- என்றார்.

இப்பயிற்சிப்பட்டறையில் வளவாளர்களாக பிரபல எழுத்தாளர் தெணியான், யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளரும், எழுத்தாளருமான ராஜேஸ்கண்ணா, பருத்தித்துறை வடமராட்சி வடக்கு சுகாதார உத்தியோகத்தர் சே.செல்லசுகுணா,சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பரமேஸ்வரி யோகராஜா,பொதுநூலகர் செல்வி ரேவதி, நாடகக்கலைஞர் வெ.முத்துசாமி, தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய ஆசிரியை செல்வி கி. ஜானகி ஆகியோரும் கலந்துகொண்டு உரியவழிகாட்டல்களை மேற்கொண்டனர். (எ-8)




யாழ். இந்து கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா குமாரசாமி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கல்லூரி மாணவர்களின் வரவேற்பு நடனம். (எ-13)

# ஆங்கில தினப் போட்டி முடிவுகள்

காரைநகர்,ஜூலை 6

காரைநகர் கோட்ட பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட ஆங்கில தினப் போட்டி முடிவுகள் வெளியாகி உள்ளன. இந்தப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

தரம்-5

முதலாம் இடம் - ரிதர்சனா கிருபானர்ந்தமுருகன் (யாழ்.சுந்தரமூர்த்தி நாயனார் வித்தி.), இரண்டாம் இடம்- கஜானி மகேஸ்வரன் (யாழ். சுப்பிரமணிய வித்தி.), மூன்றாம் இடம்- அபிராமி லிங்கேஸ்வரன் (யாழ். சுப்பிரமணிய வித்தி.), டனிஸ்ரா பரமநாதன் (வலந்தலை வடக்கு அமெரிக்க மிசன் த.க.பாடசாலை.)

தரம் -6

முதலாம் இடம்- நாகதீபா செல்வகுமார் (யாழ்ரன் கல்லூரி), இரண்டாம் இடம்- கபிலா சிவனேசன் (கலாநிதி ஆ. தியாகராஜா ம.ம.வி.), மூன்றாம் இடம்- பவித்திரா மகாதீபன் ( வியாவில் சைவ வித்தி.)

தரம் -7

முதலாம் இடம் - நிருபாமா இந்திரகுமார் (கலாநிதி ஆ. தியாகராஜா ம.ம.வி.), இரண்டாம் இடம், ஜனனிகா சிவகுமார் (கலாநிதி ஆ. தியாகராஜா ம.ம.வி.), மூன்றாம் இடம், கீர்த்தனா செல்வரட்ணம் (யாழ்ரன் கல்லூரி)

தரம் -8

முதலாம் இடம் , லக்சிகா இராசதுரை (கலாநிதி ஆ. தியாகராஜா ம.ம.வி.), இரண்டாம் இடம், துசாந்தி மகேந்திரன் (கலாநிதி ஆ. தியாகராஜா ம.ம.வி.), மூன்றாம் இடம், சுதனிகா செல்வகுமார் (யாழ்ரன் கல்லூரி)

தரம் -9

முதலாம் இடம் - விசாலினி சிவகனானம் (கலாநிதி ஆ. தியாகராஜா ம.ம.வி.), இரண்டாம் இடம்- ஜஸ்மினா நவரட்ணராஜா (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி.), மூன்றாம் இடம்- கமலேஸ்வரி செந்தில்நாதன் (யாழ்ரன் கல்லூரி)

தரம் -10

முதலாம் இடம் - கருனிதா யோகராசா (யாழ்ரன் கல்லூரி), இரண்டாம் இடம்- சிவசக்திவேல் கோகுலன் (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி.), மூன்றாம் இடம்- பவதாரணி இந்திரகுமார் (கலாநிதி ஆ. தியாகராஜா ம.ம.வி.)

தரம்-11

முதலாம் இடம் - டினோஜா நவரட்ணராஜா (கலாநிதி ஆ. தியாகராஜா ம.ம.வி.), இரண்டாம் இடம்- சஜிதா பாலசிங்கம் (கலாநிதி ஆ. தியாகராஜா ம.ம.வி.),மூன்றாம் இடம்- திவ்யா அமிர்தலிங்கம் (யாழ்ரன் கல்லூரி)

உரத்து வாசித்தல் போட்டி

தரம்-3

முதலாம் இடம்- கீர்த்திகாதவநாதன் (யாழ். சுந்தரமூர்த்தி நாயனார் வித்தி.) இரண்டாம் இடம் - சிவபாலன் லக்சிகன் (யாழ். சுந்தரமூர்த்தி நாயனார் வித்தி.) மூன்றாம் இடம் - எஸ். ஜனோசனா (மெய்கண்டான் வித்தி.)

தரம் -4

முதலாம் இடம் -தர்சிகா கந்தவேல் (யாழ். சுப்பிரமணிய வித்தி.) இரண்டாம் இடம் -சுதாகரன் பவிராஜ் (யாழ். சுந்தரமூர்த்தி நாயனார் வித்தி.) மூன்றாம் இடம்- துஸ்யந்தி இராஜேந்திரன் (யாழ். சுப்பிரமணிய வித்தி.)

தரம்-5

முதலாம் இடம்- மனோகரன் சதீஸ்கரன் (யாழ்ரன் கல்லூரி) இரண்டாம் இடம் -அபூர்வா சந்திரசேகரம் (யாழ்ரன் கல்லூரி) மூன்றாம் இடம்- சஜிதா சவுந்தரராஜன் (யாழ். சுந்தரமூர்த்தி நாயனார் வித்தி.). (எ-14)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாஜு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன் – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

# வன்னியில் சமன்செய்யப்பட்ட வீடுகளும் வறுமையும்

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போர் வன்னி மக்களை மிக மோசமாகப் பாதித்தது. இறுதிக் கட்டத்தில் அவர்கள் என்றுமே மீளமுடியாத நிலையையே உணர்ந்திருந்தனர். எல்லாவகையிலும் போர் அவர்களைச் சமப்படுத்தி வைத்திருந்தது. சாப்பாட்டில் இருந்து சாவு வரைக்கும் இந்த சமன்செய்யும் பொறிமுறை இலங்கை அரசால் வன்னி மக்கள் மீது பிரயோகிக்கப்பட்டு வந்தது.

போரின் பின்னர் அந்த மக்களுக்கு மீள்வாழ்வை வழங்கும் சில செயற் திட்டங்களிலும் அனைவரையும் பேதமின்றிக் கணிக்கும் கைங்கரியத்தை அரசும், அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்களும் கடைப்பிடித்து வருகின்றன.

தொகுதிவாரியாக பிரித்து புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் நிறுவனங்கள் ஒரே வகையான வீட்டுத்திட்டங்களை வழங்குவதில் இருந்து தமது சமன்செய்யும் பொறிமுறையை ஆரம்பிக்கின்றன. ஓலைக்குடிசைகளும், மண்வீடுகளும், ஆங்காங்கே சில கல்வீடுகளாலும் நிரம்பியிருந்த வன்னி இப்போது வீடுகள் வரிசையில் சமப்படுத்தப்பட்டு வருவதும் ஒருவகையில் பாராட்டப்படக்கூடியது என்றும் கூறலாம். ஆனால் அது அனைத்து விடயங்களிலும் பிரயோகிக்கப்படுகின்றனவா என்று பார்ப்பது அவசியம்.

விவசாயத்தை மட்டுமே வாழ்வாதாரமாகக் கொண்ட வன்னி மக்கள் இப்போது அதனைக் கைவிடும் நிலைக்கே தள்ளப்பட்டுள்ளனர். வறுமை, ஆளணியின்மை, தொழிலாளர் பற்றாக்குறை, வரட்சி போன்ற காரணிகளால் தமது பூர்வீக பொருளாதார முறைமையை இழக்கும் தறுவாயில் இருக்கின்றனர். வடக்கின் நெற்களஞ்சியமாக விளங்கிய வன்னி இப்போது விளைச்சலுக்கு பஞ்சம் நிலவும் பூமியாக மாறிவருகின்றது.

இதனைக் கவனத்தில் கொண்டு உரிய வழிமுறைகளைச் செய்வதற்கான செயற் திட்டங்கள் எதுவும் நடைமுறைப்படுத்தப்படுவதாகத் தெரியவில்லை. ஓலைக் குடிசைகளில் அடுக்கப்பட்டிருந்த நெல் மூடைகளுக்குப் பதிலாக இப்போது இரும்புக்கம்பிகளும் சிமெந்தும் மட்டுமே குவிக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கொள்வனவுகளுக்கான கடன்களும், வாய்ப்புக்களும் பல்வேறு தரப்பினராலும் வழங்கப்பட்டு வருகின்றன. மூழ்கிக்கொண்டிருக்கும் வன்னியின் விவசாயத்தை மீட்பதற்கான நடவடிக்கைகள் எதுவும் இப்போதைக்கு அங்கு இல்லை.

இன்னும் சில வருடங்களில் வன்னியின் பெரும்பாலான மக்கள் சமன்செய்யப்பட்ட வீடுகளைப் பெற்றுக் கொள்வர். ஆனால் அவர்கள் அனைவரும் சமன்செய்யப்பட்ட பொருளாதார ஈட்டங்களைக் கொண்டிருப்பதற்கான வாய்ப்பு இப்போதிலிருந்தே அருகிவருகின்றது. புதிதாகக் கட்டி முடிக்கப்பட்ட அனைத்து வீடுகளிலும் சமன்செய்யப்பட்ட வறுமையும் இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

ஆகவே இனிவரும் காலங்களில் வன்னியை மையப்படுத்தி மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி சார் திட்டங்களில் அந்த மண்ணின் சுதேசிய பொருளாதாரத்தை வளர்க்கும் வழிவகைகளும் அடங்கியிருக்க வேண்டும். அப்போதே சமன்செய்யப்பட்ட சமூகத்தையும் உருவாக்கலாம். வன்னியின் பூர்வீகப்பொருளாதார வளம் நாட்டின் அனைத்துப் பாகங்களுக்கும் பயன்படக் கூடியது. இதனைக்கருதியே கடந்த கால அரசுகள் பல குளங்களை வன்னியெங்கும் புனரமைத்தன. தமிழர்களின் வாழ்வை செழுமையாக்கிவிடும் என்ற பயத்தினால் இந்தச் செயற் திட்டத்தை இலங்கை அரசு மேற்கொள்ள விரும்பாவிட்டாலும், இந்த நாட்டில் வாழுகின்ற அனைத்து மக்களினதும் வறுமை தவிர்ப்புக்காகவாவது வன்னியின் முதுகெலும்புப் பொருளாதாரத்தை சமன்செய்யும் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.

# தமிழ் அரசியல் கைதிகள் பழிவாங்கப்படுகின்றனர்

ஜெரா

இலங்கையில் ஒவ்வொரு வாரத்திலும் தலையெடுக்கும் பிரச்சினைகள் தமிழரின் முன்னால் உள்ள பிரதான அரசியல் பிரச்சினையை பின்னுக்குத் தள்ளிவிடுகின்றது. தமிழர் அரசியல் பிரச்சினை விடயத்தில் சர்வதேச ஆதரவுகள் கிடைக்கப்பெற்று, மக்கள் தாமாக முன்வந்து போராடத் தொடங்கும் சந்தர்ப்பங்களில் புதிதாக மேற்கிளம்பும் பிரச்சினைகள் அனைத்தையும் மறக்கச் செய்துவிடுகின்றன. நில அபகரிப்பு, கடந்த வாரத்தில் தமிழ் மக்கள் மத்தியில் பிரதான, உணர்வுமிகு போராட்ட பொருளாக இருந்தது. அதனை மீட்பதற்காகத் தெருவில் இறங்கிப் போராடவும் மக்கள் தலைப்பட்டிருந்தனர். போராடத் தொடங்கிய தருணத்தில், இப்போது வேறொரு பழைய விடயம் தமிழர்களின் அரசியல் அரங்கிற்குள் உள்நுழைந்துள்ளது.

### தமிழ் அரசியல் கைதிகளின் போராட்டத் தோற்றம்

கடந்த மே மாதத்தில் நாடு முழுவதும் சிறையில் அடைக்கப்பட்டிருக்கின்ற தமிழ் அரசியல் கைதிகள் தமது விடுதலை வேண்டி தமது உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருந்தனர். இதற்கு வலுச் சேர்க்கும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மற்றும் சிறையில் வாடும் பெற்றோரும் பரவலான ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்திருந்தனர். இடையில் அரசு உதிர்ந்த உறுதிமொழிகளை நம்பி மே மாதம் 21 ஆம் திகதி அரசுக்கு ஓர் அவகாசத்தை வழங்கும் நோக்கோடு உண்ணாவிரதத்தை ஒரு மாத காலத்துக்கு இடைநிறுத்தும்படி கைதிகளிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் கேட்டுக்கொள்ளப்பட்டது. தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் சர்வதேச மயமாகிக்கொண்டிருக்கையில் அவர்கள் ஒரு கால அவகாசத்தை இலங்கை அரசுக்கு வழங்கித் தமது போராட்டங்களை இடைநிறுத்திக்கொண்டனர்.

அடுத்து வந்த சிலநாள்களில் இலங்கை அரசு குறித்த தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் விசாரிக்க நான்கு சிறப்பு நீதிமன்றங்களை அமைக்க உள்ளதாகவும் அறிவித்திருந்தது. ஆனால் அந்த அறிவிப்போடு மேற்கொண்டு எந்தவித நடவடிக்கைகளையும் இலங்கை அரசு மேற்கொள்ளவில்லை. வழமை மாதிரி பிரச்சினை சூடாக இருக்கும் போது அதனைச் சமாளிக்க அரசு விடும் அறிக்கைகள் போலவும், அமைக்கும் குழுக்கள் போலவும் இந்த விடயமும் காற்றில் கரையவிடப்பட்டது.

சரியாக ஒருமாதம் கடந்தது. தமிழ்க் கைதிகள் மீதான இலங்கை சிறைக்காவலர்களின் கவனிப்பு வேறுமாதிரியாக அமைந்தது. ஜூன் 29ஆம் திகதி அனுராதபுரம் சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகளின் ஒரு தொகுதியினர், தம் உறவினரைப் பார்ப்பதற்காக வவுனியா சிறைக்கு கொண்டுவரப்பட்டனர். அப்போது இவர்களை சாதாரண கைதி ஒருவர் தாக்கினார். அதனைத் தொடர்ந்து சம்பவ தினத்தன்றும் அதற்குப் பின்னரும் தொடர்ச்சியாக வவுனியா சிறையிலிருந்த தமிழர் அரசியல் கைதிகள் துன்புறுத்தல்களுக்குள்ளாக்கப்பட்டு வந்தனர். இதில் பாதிக்கப்பட்ட [illegible] தமிழ் அரசியல் கைதிகள் அனுராதபுரத்துக்கும் [illegible] பயங்கரவாதத் தடுப்புப்பிரிவுக்கும் அனுப்பப்பட்டனர். அவர்களை மீள வவுனியா சிறைக்குக் கொண்டுவர வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து வவுனியா சிறையில் இருந்த தமிழ் அரசியல் கைதிகள் தொடர்ச்சியான உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இதனை முறியடிக்க சிறைக்காவலர்கள் பல்வேறு துன்புறுத்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். நிலைமை பொறுத்துக்கொள்ள முடியாத அளவுக்குக் கட்டுமீறியது. சிறைக் காவலர்கள் வெறித்தனமாகத் தமிழ் கைதிகளைத் துன்புறுத்தினர். இதற்கு எதிர்ப்புக் காட்டுமுகமாக தமிழ் அரசியல் கைதிகள் மூன்று சிறைக்காவலர்களைச் சிறைபிடித்து வைத்தனர். தமது கோரிக்கை நிறைவேறிய பின்னரே அவர்கள் விடுவிக்கப்படுவர் எனவும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்த நிலையில் சிறப்பு அதிரடிப் படையினரின் உதவியோடு களத்தில் குதித்த இலங்கை இராணுவத்தினர் கைதிகள் மீது தாக்குதலை நடத்தினர். அந்தத் தாக்குதலின் கொடூரம் வவுனியா சிறைக்கு அருகிலுள்ள வ/திருச்சபை தமிழ் கலவன் பாடசாலை வரை உணரப்பட்டது. சிறையில் பாவிக்கப்பட்ட கண்ணீர் புகைக்குண்டுகளினால் ஏற்பட்ட பாதிப்பால் மயக்கமடைந்த நிலையில் ஆறு மாணவிகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இவ்வளவு காட்டுமிராண்டித்தனங்களுக்குப் பின்னர் மூன்று சிறைக்காவலர்களையும் மீட்ட அதிரடிப்படையினர் சம்பவத்தோடு தொடர்புபட்ட 32 தமிழ் அரசியல் கைதிகளையும் மஹர சிறைச்சாலைக்கும், கண்டி போகம்பரை சிறைச்சாலைக்கும் உடனடியாக மாற்றினர். அங்கும் சிறைக்காவலர்களாலும், அதிகாரிகளாலும் வழங்கப்பட்ட அடி உதை தண்டனைகளால் பல தமிழ் அரசியல் கைதிகள் மஹர வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் பலருக்கு எழும்ப முடியாத அளவுக்கு எலும்புகள் அடித்து முறிக்கப்பட்டிருந்தன. இவ்வாறு மிக மோசமான தாக்குதலுக்கு உள்ளான கணேஸ் நிமலரூபன் என்ற தமிழ் அரசியல் கைதி சாகடிக்கப்பட்டுள்ளார்.

இப்போது இந்தப் பிரச்சினை தமிழ் அரசியல் பரப்பில் மிக உச்சமாக சூடுபிடித்திருக்கின்றது. சிறைகளில் தமது பிள்ளைகளை காவுகொடுத்திருக்கும் பெற்றோர் பதற்ற நிலையை அடைந்திருக்கின்றனர். அடுத்த கணம் தமது பிள்ளைகளுக்கு எதுவும் நிகழலாம் என்ற பயப்பீதியில் அவர்கள் அரசியல்வாதிகளின் வீட்டுக் கதவுகளைத் தட்டத் தொடங்கியிருக்கின்றனர்.

### தமிழ் அரசியல் கைதிகள் யார்?

இலங்கையில் தமிழ் மக்களின் இன விடுதலைப் போருக்காகப் பணியாற்றியவர்களும், அரசியல் வேலைத் திட்டங்களில் ஈடுபட்டவர்களுமே இந்த அரசியல் கைதிகள். இனவிடுதலைப் போராட்டம் மௌனிக்கப்பட்ட நிலைக்கு வந்தபின்னரும் இவர்களுக்கு விடுதலை இன்னமும் வழங்கப்படவில்லை. பலர் குற்றச் சாட்டுத் தொடர்பான வழக்குகள் பதிவுசெய்யப்படாமல் கூட அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். [illegible]க்கணக்கில் நீடித்துச் செல்லும் சிறைவாச விடுவிப்புக்கான அகிம்சைப் போராட்டத்தையே இவர்கள் கடந்த மாதத்திலிருந்து மேற்கொண்டிருந்தனர். ஆனால் அதனையும் தந்திரமான முறையில் முறியடித்து இலங்கை அரசு வெற்றி பெற்றுள்ளது. அந்த வெற்றியோடு நின்றுவிடாமல் போராட்டத்தை முன்னின்று நடத்தும் அரசியல் கைதிகளைப் பழிவாங்கும் படலத்தையும் ஆரம்பித்திருக்கிறது.

### உலகமெங்கும் ஈழத் தமிழ் அரசியல் கைதிகள் போராடுகின்றனர்

இலங்கையை விடுத்து தமிழகத்திலும் லண்டன், கனடா உள்ளிட்ட புலம்பெயர் நாடுகளிலும் தமிழ் அரசியல் கைதிகள் தமது விடுதலைக்காகப் போராடி வருகின்றனர். தமிழ்நாட்டில் செங்கல்பட்டு சிறையில் எந்தவித விசாரணையும் இன்றி அடைத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டம் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. அவர்களுக்குத் தீர்வாக சிறைமாற்றங்கள் வழங்கப்படுகின்றதே தவிர, அவர்களின் போராட்டத்துக்கான நியாயங்கள் தமிழக அரசால் இலங்கை அரசைப் போலவே விளங்கிக்கொள்ளப்படாத ஒன்றாக இருந்துவருகின்றது.

இறுதிப் போரில் தப்பித்து சன்சீக் கப்பலில் தப்பியோடிய அதிக அரசியல் கைதிகளின் வாழ்க்கையும் புலம்பெயர் நாடுகளின் விடுதலை இன்றியே கழிகின்றது. சுவிஸில் தஞ்சம் கோரும் அரசியல் கைதிகள் தமது நாட்டுக்கு அச்சுறுத்தல் என்ற நிலைப்பாட்டில் நாடுகடத்தப் படுகின்றனர். அரசியல் கைதிகள் அல்லாவிட்டால் இலங்கையில் பிரச்சினை இல்லை எனக்கூறி நாடுகடத்தப்படுகின்றனர். இவ்வாறு உலகம் முழுவதும் தமிழ் அரசியல் கைதிகள் போராடித் தோற்ற நிலைக்கு வந்துவிட்டனர்.

### அடுத்த கட்டம் நோக்கி நகர வேண்டும்

உணர்வுமிகு அரசியல் நீரோட்டத்தோடு கலந்திருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் இந்தக் கட்டப் போராட்டம் அடுத்த நிலை நோக்கி நகரவேண்டும். அந்தப் பணியை செய்யவேண்டிய பொறுப்பு தமிழ் மக்களின் அரசியல் புலத்தை பிரதிபலிப்பவர்களுக்கே உண்டு. கணேஸ் நிமலரூபனின் சிறைப் படுகொலையோடு தமிழ்க் கைதிகளின் விவகாரம் சர்வதேச மயப்பட்டதொன்றாக மாறப் போகின்றது. இலங்கை அரசு மீறிவரும் மனிதஉரிமைகள் சார் விடயங்களில் இது உச்சமான குற்றமிழைப்பாக சர்வதேச மனித உரிமையாளர்களால் நோக்கப்படும் நிலைமையும் உருவாகி உள்ளது. இதனைப் பயன்படுத்தித் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பிலான போராட்டத்தை மிகத் தீவிரமாக முன்னெடுக்கலாம். அதற்கு அதிக கால நீடிப்பு எடுத்தால் அடுத்த வாரத்திற்கு மேலெழும் புதிய பிரச்சினை தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்தை மறைக்கச் செய்துவிடும். ஒரு வார காலத்துக்கு வீசப்போகும் காற்றில் தூற்றிக்கொள்ளும் சந்தர்ப்பத்தை யாராவது பயன்படுத்துவார்களா? பயன்படுத்தினால் மட்டுமே கணேஸ் நிமலரூபனின் மரணத்துக்குப் பெறுமதி கிடைக்கும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவத்துக்கும் மதிப்பீடுகள் தேவை

■ தென்னவன்

**ஒவ்வொரு வைத்தியசாலையிலும் நோயாளர்கள் முழுமையான சேவைகளைப் பெறுகிறார்களா? தினமும் ஆயிரம் பேர் வெளிநோயாளர்கள் பிரிவில் சிகிச்சை பெறுகிறார்கள் எனப் பெருமிதமடைவதை விட அனைத்து நோயாளர்களும் உரிய பயன்பாட்டினைப் பெறுகிறார்களா? என மதிப்பிடப்படவேண்டும்.**

அண்மைய காலங்களில் புதிது புதிதான நோய்கள் பரவி வருகின்றன. இதனைக் கட்டுப்படுத்த அதற்கான மருந்துகளும், துறைசார்ந்த வைத்திய நிபுணர்களும் பணியாற்றியும் வருகின்றன. ஏற்படவிருக்கும் ஆபத்திலிருந்து பாதுகாப்புப் பெறும் மக்கள் இந்த வைத்தியர்களின் பணியினால் சுகதேகியாக வீட்டுக்குச் செல்கின்றனர்.

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தினமும் ஆயிரக்கணக்கான நோயாளர்கள் வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் பிரிவிலும் நூற்றுக்கணக்கானோர் விடுதிகளிலும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். கடந்த 30 வருடங்களாக மாவட்டத்தில் உள்ள மருத்துவர்கள் பற்றாக்குறை, மருந்து வசதிகள் பற்றாக்குறை, மருத்துவ உபகரணங்களின் பற்றாக்குறை போன்றவற்றினால் மாவட்ட மக்கள் சொல்லொணாத துன்பங்களை அனுபவித்து வந்தனர்.

வைத்தியர்கள் பற்றாக்குறையினால் பல கிராமிய வைத்தியசாலைகள் காலையில் அல்லது மாலையில் மட்டும் இயங்கியுள்ளன. அந்த நிலை கடந்த மூன்று வருடங்களில் பெருமளவு மாற்றங்களுடன் காணப்படுகிறது. தென்னிலங்கைப் பகுதியில் கடமைபுரிந்த பல வைத்திய நிபுணர்கள் யாழ். மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளில் கடமையாற்றுகின்றனர். இதனால் வட மாகாணத்தின் வைத்தியத்துறை ஓரளவுக்காவது முன்னேற்றத்தினைக் கண்டிருக்கின்றது.

முப்பது வருடங்கள் பின்நோக்கிய நிலையில் உள்ள யாழ். மாவட்ட வைத்தியசாலைகள் மூன்று வருடங்களில் சிறந்த சேவையினை வழங்குகின்றபோதிலும் அதன் தரத்தினை சேவையினை உடனடியாக உயர்த்திட முடியாது.

தென்னிலங்கை வைத்தியசாலையில் உள்ள வளங்கள் முற்றுமுழுதாக எமது பிரதேசத்துக்கு இன்னமும் வந்து சேரவில்லை. வைத்தியசாலைகளில் காணப்படும் பௌதிக வளங்களை வைத்துக்கொண்டு அதன் சேவைகளைக் கணிப்பிடமுடியாது.

வைத்தியசாலையின் தேவைகளையும், சேவைகளையும் கணிப்பிட ஒவ்வொரு வைத்தியசாலைகளிலும் ஐந்தாண்டுத் திட்டங்கள் கொண்ட குறிச்சுட்டிகள் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

ஒவ்வொரு வைத்தியசாலையிலும் நோயாளர்கள் முழுமையான சேவைகளைப் பெறுகிறார்களா? என மதிப்பிடப்படவேண்டும். தினமும் ஆயிரம் பேர் வெளிநோயாளர்கள் பிரிவில் சிகிச்சை பெறுகிறார்கள் எனப் பெருமிதமடைவதைவிட அனைத்து நோயாளர்களும் உரிய பயன்பாட்டினைப் பெறுகிறார்களா? தினமும் எத்தனை சதவீதத்தினர் முழுமையான பயன் பெறுகின்றனர்? ஏனையோருக்கு ஏன் முழுமையான பயன்கிடைக்கவில்லை என்ற கணிப்பீடு அவசியம் தேவை.

வைத்தியசாலைக்கு வரும் நோயாளிக்கு நோய்க்குரிய மருந்துகள் நோய் உருவாகுவதற்கான பின்னணி பற்றி ஆய்வு செய்யப்படல் வேண்டும்.

உதாரணமாக மலேரியாக் காய்ச்சல் ஒரு தொற்றுநோய் அல்ல. ஆனால் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுள்ளனர். சில குடும்பங்கள் மாறிமாறிப் பல தடவைகள் விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெற்றுள்ளனர். இதன் உண்மையான காரணம் என்ன இதனை நோயாளியிடம் பெறும் தகவல்களை ஆய்வு செய்து வேண்டிய நடவடிக்கை எடுப்பின் நிச்சயமாகப் பலநோய்களை எமது பிரதேசத்திலிருந்து துரத்திவிடலாம்.

அரச அலுவலகங்களில் ஒரு வேலை தொடர்பான குடிமக்கள் பட்டயம் ஒவ்வொரு அலுவலகத்திலும் காணப்படுகிறது. ஆனால் வைத்தியசாலைகளில் அவை காணப்படுவதில்லை. ஒரு நோயாளர் வெளிநோயாளர் பிரிவுக்கு வந்து ரிக்கெற் எடுத்து வைத்தியரிடம் சென்று இறுதியாக மருந்து எடுத்து வெளியேறும் வரை எடுக்கும் நேரம் தொடர்பாக ஆய்வு செய்யப்படல் வேண்டும். தென்னிலங்கையில் உள்ள வைத்தியசாலையில் காலை 8 மணிக்கு வெளிநோயாளர் பிரிவுக்கு வரும் நோயாளி 9 மணிக்கு சகல கருமங்களையும் முடித்து வெளியேறுகிறார். ஆனால் யாழ்.மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளில் இதே சேவையைப் பெற இரண்டு அல்லது மூன்று மணித்தியாலயங்கள் எடுக்கிறது. இது தொடர்பாக நிச்சயம் ஆய்வு செய்ய வேண்டும். எந்த இடத்தில் தாமதம் ஏற்படுகிறது என்பதைக் கண்டறிந்து அதற்கு பரிகாரம் காண வேண்டும். முதல் கட்டமாக மாவட்டத்தில் உள்ள ஆதார வைத்தியசாலைகளில் நடைமுறைப்படுத்த வேண்டும்.

வெளிநோயாளர் பிரிவு கவுண்டரில் பெருமளவு நோயாளர்கள் காணப்படின் அந்த இடத்திற்கு மேலதிக ஊழியர்களைக் குறிப்பிட்ட நேரத்துக்கு மட்டும் பயன்படுத்தலாம். வெளிநோயாளர் பிரிவில் முன்னைய காலங்களில் ஒரு வைத்திய அதிகாரி கடமையில் இருப்பார் தற்போது போதனா வைத்தியசாலை, ஆதார வைத்தியசாலைகளில் தினமும் ஐந்து வைத்திய அதிகாரிகள் காலை வேளையில் கடமையாற்றுவதாக குறிப்பிடப்படுகின்ற போதிலும் தொடர்ந்து (காலை 8 மணி தொடக்கம் மு.ப 11.30 மணி வரை) ஒரு வைத்திய அதிகாரியே பணிபுரிகிறார். மிகுதி நான்கு பேரும் எங்கே? அடுத்து வெளிநோயாளர் பிரிவு மருந்தகத்தில் நீண்ட வரிசையில் நின்று மருந்துகள் பெறுகின்றனர். இவ்வாறான கால தாமதங்கள் ஏற்படுவதை நிச்சயமாகத் தவிர்த்து நோயாளர்களுக்குச் சிறந்த சேவை வழங்கப்படல் வேண்டும். அடுத்து கிளினிக்குகளுக்கு நோயாளர்கள் அதிகாலை 4 மணிக்குத் தூர இடங்களிலிருந்து வருகின்றனர். இவர்கள் வீடு போய்ச் சேர பி.ப 3 மணி செல்கிறது. கிளினிக் நோயாளர்களைக் கேட்டால் நேரத்துக்குக் கொப்பி கொண்டு சென்று வைக்க வேண்டும். பிந்தினால் மருந்து எடுக்க ஏலாது. குறிப்பிட்ட நேரத்துடன் மருத்துவர்கள் எழுந்து சென்று விடுகிறார்கள் என்று தெரிவிக்கிறார்கள். யாழ்.போதனா வைத்தியசாலை விடுதிகளில் தங்கி சிகிச்சை பெறுவோர் தொகை பெரும் எண்ணிக்கையில் உள்ளது. இவர்களில் பெரும்பாலானோர் கிளினிக்குக்கு வர வேண்டிய நிலையில் உள்ளனர்.

வைத்திய அதிகாரிகளுக்குக் கடமை நேரம் என ஒன்று உள்ளது. அந்த நேரத்தில் நோயாளர்களைப் பரிசோதிக்க வேண்டியது அவர்களது கடமை. வெளிநோயாளர் பிரிவாயினும் கிளினிக்காயினும் கதிரையில் வந்து அமர்ந்த ஒவ்வொரு மணித்தியாலத்திலும் சாப்பிடவென்றும், தேநீர் அருந்த வென்றும் வைத்தியர்கள் வெளியில் செல்கின்றார்கள். அதிகாலை 5 மணிக்கு வந்த நோயாளர்கள் தேநீர் உணவு இன்றி மணிக்கணக்கில் காத்திருக்கின்றனர்.

இது பற்றியும் கணிப்பீடு செய்யப்படல் வேண்டும். வைத்தியசாலைப் பராமரிப்புகளும் அவசியம் கணிப்பிடப்படல் வேண்டும். வைத்தியசாலைகளில் ஒவ்வொரு துறைக்கும் ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு துறையிலும் காணப்படும் குறைகளின் தன்மை அவற்றினை நீக்கத் தேவையானவை போன்றவையும் ஆய்வு செய்யப்படல் வேண்டும்.

வைத்தியசாலை வளாகங்கள் விடுதிகள் அடிக்கடி பல நிறுவனங்களால் சிரமதான அடிப்படையில் துப்புரவு செய்யப்படுகின்றன. ஏன் இந்த நிலைமை வளாகத்தினை விடுதிகளைத் துப்புரவு செய்ய ஊழியர்கள் இல்லையா அல்லது இருந்தும் அக்கறை இல்லையா என்பதைக் கணிப்பிடல் வேண்டும். இவ்வாறான குறைபாடுகளை தேவைகளைக் கண்டறிய சுகாதாரத் திணைக்களத்தினால் ஐந்தாண்டுத் திட்டங்கள் ஒவ்வொரு வைத்தியசாலையிலும் நடைமுறைப்படுத்தி அவை ஐந்து வருடங்களில் பூர்த்தியடைந்தால் யாழ்.மாவட்ட மக்கள் தென்னிலங்கை மக்களுக்கு ஒப்பான வைத்திய சேவையினைப் பெற முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.



# பாதீனிய ஆபத்து

*வைத்திய அத்தியட்சகர்,*
*பொது வைத்தியசாலை, வவுனியா.*

பாதீனியம் எனும் ஆபத்து மிகு பூக்குந்தாவரம் வவுனியா நகரங்களில் பல்வேறு பகுதிகளிலும் பல்கிப்பெருகிக் காணப்படுகின்றது. இதனால் இந்த நகரப் பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களுக்குப் பெரும் சுகாதாரக் கேடு ஏற்படுகின்றது. தற்போது அதிகளவான அழற்சிக்குட்பட்ட நோயாளிகள் வைத்தியசாலை நோக்கி வருவதனை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இந்தத் தாவரமானது, அமெரிக்க உலர் வலயப் பகுதிகளில் ஆரம்ப காலத்தில் காணப்பட்டாலும், பின்பு ஆஸ்திரேலியா, ஆபிரிக்காக் கண்டங்களுக்கும், இந்தியத் துணைக் கண்டத்துக்கும் பரவியது. கடந்த 25 வருடங்களுக்கு முன்னர் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு இந்தத் தாவரத்தின் பரம்பல் ஏற்பட்டது. வீதியோரங்களிலும், வீட்டைச் சுற்றியும் மற்றும் விவசாய நிலங்களிலும் மிக அதிகளவில் பரம்பலடைந்திருப்பதைக் காணலாம். மிக விரைவாக வளர்ந்து பூத்துக்குலுங்கிக் காணப்படும் இந்தத் தாவரத்தால் மனிதனுக்கும், கால் நடைகளுக்கும் பயன்தரும் விவசாயப் பயிர்களுக்கும் கொடிய பாதிப்பு ஏற்படுகின்றது.

இந்தத் தாவரத்தின் மகரந்த மணிகள் மற்றும் தாவரத்தின் ஏனைய பகுதிகள் ஒவ்வாமையை (Allergy) ஏற்படுத்துகின்றன. இதனால் சிறியவர்கள், பெரியவர்கள் உட்பட பலர் அஸ்மா, தோல் அழற்சி போன்றவற்றுக்கு வைத்தியசாலையில் சிகிச்சை பெற வேண்டிய நிலை ஏற்படுகின்றது. குறிப்பாக குழந்தைகளுக்கும், பாடசாலை மாணவர்களுக்கும் அடிக்கடி அழற்சி வருத்தங்களை ஏற்படுத்துகின்றது. இதனால் மாணவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்ல முடியாத நிலையும், அடிக்கடி வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டிய நிலையும் ஏற்படுகின்றது.

எனவே இவற்றை அழிப்பதற்கு அனைத்து மட்டத்தினரும் நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக [illegible] மக்களிடையே போதியளவு விழிப்புணர்வை ஏற்படுத்தி இதனை அழிப்பதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். அரச திணைக்களக் காணிகளில் காணப்படும் தாவரங்களை, அந்தந்த அரச திணைக்கள உயர் அதிகாரிகள் அழிப்பதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தவிர பொதுமக்களும் அவர்களது காணிகளிலும், காணிகளுக்கு முன்பாக இருக்கும் வீதிகளின் ஓரங்களிலும் காணப்படும் இந்தத் தாவரத்தினை அழிக்க வேண்டும்.

பாடசாலை மாணவர்களிடையே அதிபர், ஆசிரியர்கள் விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்கள் மூலம் பாடசாலை வளாகத்தினுள்ளும், மாணவர்கள்கல்வி கற்கும் தனியார் வகுப்பு கட்டடங்கள் அமைந்த பகுதிகளிலும் காணப்படும் இந்தத் தாவரத்தை அழிக்க வேண்டும். பாடசாலை மாணவர்கள் சென்று வரும் வழியில் இந்தத் தாவரம் பூத்துக்குலுங்கி வளர்ந்திருப்பதனால் அதன் மகரந்தமணிகள் அவர்களது சுவாசப்பைகளை அடைந்து, திடீரென அழற்சி வருத்தங்கள் ஏற்படுவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

இந்தத் தாவரமானது மிக விரைவாக வளர்ந்து பூக்கத் தொடங்கும். இளந் தாவரமாக இருக்கின்ற போதே இவற்றைக் கையுறையின் உதவியுடன் பிடுங்கி எரியூட்ட வேண்டும். பரவலாகக் காணப்பட்டால் பரகுவாட் 1 L இனை 600 L தண்ணீரில் கலந்து விசுறுவதன் மூலம் அழிக்க முடியும்.

இந்தத் தாவரத்தினைப் பொது மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து இல்லாதொழிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். தொடர்ச்சியாக சில வருடங்களுக்கு இந்த நடைமுறையினைப் பின்பற்றினால் இந்தத் தாவரத்தின் பெருக்கத்தினை முற்றாக தடைசெய்து அழித்துவிட முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானிகளுக்கு உணவு முக்கியமல்ல

வாழ்கையில் உணவு என்பது,ஒரு பகுதி நேரப் பிரச்சினையாக மட்டுமே இருக்கவேண்டும்.அதாவது உண்ணுகிறவர்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.வாழ்வதற்காக உண்ணுகிறவர்கள் ஒரு வகை;உண்ணுவதற்காகவே வாழுகிறவர்கள் இன்னொரு வகை. நீங்கள் எந்தக் கட்சி? வாழ்வதற்காக உண்ணுகிறீர்களா?அல்லது உண்ணுவதற்காகவே வாழ்கிறீர்களா?

உண்ணுவதற்காகவே வாழ்கிறவர்களை இனம் கண்டு கொள்வது எப்படி என்று கேட்கிறீர்களா?நீங்கள் ஏதேனும் ஓர் ஊருக்குச் செல்கிறீர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். உண்ணுவதற்காகவே வகையைச் சேர்ந்தவர்களிடம் இதைப் பற்றிய யதார்த்தமாகச் சொல்லுங்கள். உடனே,அந்த ஊரில் பிரத்தியேகமான ருசியோடு இருக்கக் கூடிய ஓர் உணவுப்பண்டத்தின் பெயரை சட்டெனச் சொல்லி விடுவார்கள்.

உதாரணத்திற்கு,நீங்கள் திருப்பதி போவதாகக் கூறினால்,உடனே அவர்கள் தனக்கு லட்டு வாங்கி வரும்படி சொல்வார்கள்.அந்த லட்டு உங்களுக்குக் கிடைக்கிறதோ இல்லையோ,தனக்கு எப்படியும் வந்துவிட வேண்டும் என்பதிலேயே அவர்கள் குறியாக இருப்பார்கள். நீங்கள் திருநெல்வேலி செல்வதாகக் கூறினால்,அல்வா வாங்கும் படி அறிவுரை கூறுவார்கள்.நீங்கள்பழனி முருகனைத் தரிசிக்கச் செல்வதாக கூறினால்,அவர்கள் திருநீற்றைப் பற்றியெல்லாம் பேசாமல், பஞ்சாமிர்தத்திலேயே குறியாக இருப்பார்கள்.இப்படி,ஒவ்வோர் ஊரின் தனிச்சிறப்பு மிக்க பலகாரங்களின் பெயர்கள் அவர்களுடைய விரல்நுனியில் உண்மையாக இருக்கும். அந்த உணவுகளும் விரல் நுனியில் இருக்கும்... தின்னிப் பண்டாரங்கள்.

ஒரு வேளை,எந்த ஓர் உணவுக்குப் பிரசித்தி பெறாத ஏதேனும் ஓர் ஊருக்குப் போவதாகக் கூறினாலும் கூட,அந்த ஊரில் உள்ள ஒரு ஹோட்டலின் பெயரைச் சொல்லி அங்கே தனி ருசியோடு செய்யக் கூடிய ஓர் உணவு வகையை குறிப்பிட்டு அதைச் சாப்பிடாமல் வந்து விடாதீர்கள் என்று நாக்கைச் சப்புக்கொட்டியபடியே நமக்கு யோசனை சொல்வார்கள். இப்படிப்பட்டவகையினர் தான் உண்ணுவதற்காகவே வாழ்கிறவர்கள். உண்ணுவதற்காகவே வாழ்வது நம்மைக் கீழான நிலையிலேயே வைத்துவிடுகிறது.

வாழ்வதற்காகத்தான் நாம் உண்ண வேண்டும்.

''தேடிச் சோறு நிதம் தின்று'' என்றார் பாரதியார்.

உண்ணுவதற்கும், தின்னுவதற்கும் என்ன வித்தியாசம்? உண்ணுவது மனிதன் செய்கிற செயல்;தின்னுவது விலங்கு செய்கிற செயல்.

மாபெரும் ஞானி ஒருவர், இமயமலையில் நீண்ட காலம் தவம் இருந்துவிட்டு, தன் சொந்த கிராமத்தில் இருந்த மடத்துக்குத் திரும்பினார். அவருடைய வருகையால் சீடர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர் அந்த ஞானியின் ஆற்றலைக் கேள்விப்பட்ட அந்தக் கிராம வாசிகள், அவரைத் தரிசிப்பதற்காக வந்தனர்.

அந்த ஞானி நடுநாயகமாக ஒரு மேடையில் அமர்ந்திருக்க,அந்த ஊர் மக்கள் அவரைச் சுற்றிலும் நின்று கொண்டு,பல்வேறு கேள்விகளை அவரிடம் கேட்டுக் கொண்டே வந்தனர். அந்த ஞானியும் புன்னகையுடன் அவர்களுடைய கேள்விகளுக்குப் பொறுமையாக விளக்கம் அளித்துக் கொண்டே வந்தார்.

கடைசியாக,அந்த உரையாடல்,உணவுப்பக்கம் திரும்பியது. அந்தக் கூட்டத்தில் இருந்த ஒருவர் கேட்டார், ''சுவாமி,ஆன்மிகத்தில் ஈடுபட வேண்டுமானால்,எந்த மாதிரி உணவுகளைச் சாப்பிடவேண்டும்?சைவ உணவு நல்லதா,அசைவ உணவையும் சேர்த்துக் கொள்ளலாமா? ''

ஞானி பதிலளித்தார், ''ஆன்மிகத்துக்கும் உணவுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அது முழுக்க முழுக்க உன் மனதைப் பொறுத்த விஷயம். சரி,உனக்கு சைவ,உணவு பிடிக்குமா,அல்லது அசைவ உணவு பிடிக்குமா?''எனக்கு சைவ உணவில் தான் விருப்பம் அதிகம் சுவாமி '' என்றார் அவர். ''அப்படியா ,அப்படியானால்,நீ சைவ உணவைச் சாப்பிட்டபடியே ஆன்மிகத்தில் ஈடுபடலாம் ''என்றார் ஞானி.உடனே அங்கிருந்த சைவப் பிரியர்கள் கை தட்டி ஆரவாரம் செய்து, தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள்.

இன்னொருவர் எழுந்து அவசர அவசரமாகக் கூறினார், ''சுவாமி எனக்கு அசைவம் இல்லாவிட்டால்,உணவே இறங்காது,நான் ஆன்மிகத்தில் ஈடுபட முடியாதா? உடனே அந்த ஞானி,சிரித்துக் கொண்டே, ''உனக்கு அசைவ உணவு தான் பிடிக்கும் என்றால், தாரளமாகச் சாப்பிடலாம்,ஆன்மிகத்தில் அதற்கு எந்தத் தடையும் இல்லை '' என்று கூறினார் .

உடனே அங்கிருந்த அசைவப் பிரியர்கள்,தங்கள் கைகளைத் தட்டிக் கரகோஷம் செய்தனர். அந்தக் கூட்டத்தில் தொப்பையும் தொந்தியுமாக இருந்த ஒரு மகா அசைவப் பிரியர்,ஞானி சொன்னதைக் கேட்டவுடன்,விழுந்து விழுந்து விநோதமான குரலில் உரக்கச் சிரிக்க தொடங்கினார் . அதைப் பார்த்ததும்,ஞானிக்கும் சிரிப்பை அடக்க முடியவில்லை. அவரும் வாய் விட்டுச் சிரித்தார். அதைப் பார்த்த கூட்டத்தினர் அனைவரும் சேர்ந்து சிரிக்கத் தொடங்கிவிட்டனர். மொத்தத்தில்,அந்தச் சிரிப்பொலியால் மடாலயமே அதிர்ந்து போய் விட்டது.



இந்த வெடிச் சிரிப்பால் ,அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் அன்று ஜீரணப் பிரச்சனையே இல்லை.

கடைசியாக ஞானி முடித்தார். ''சைவமோ அசைவமோ பிடிக்கும் என்ற உணர்வு உள்ள வரை ஞானம் மட்டும் வராது.ஆனால் உலக வாழ்க்கைக்கு ஞானம் அவசியம் அல்ல. மகிழ்ச்சி தான் முக்கியம்.''

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# உள்ளம் என்னும் கோயிலிலே உறைகின்ற அச்சுவேலி வடக்கு புனித அந்தோனியார்

**ஞானி**

(கடந்தவாரத் தொடர்ச்சி)



தன்னை நாடி வந்து நம்பிக்கை வைத்து வழிபடுகின்ற, நினைக்கின்றவர்களின் உள்ளக் கோயிலில் உறைந்து அருள் பாலிக்கும் அச்சுவேலி வடக்கு புனித அந்தோனியாரை சமரச சன்மார்க்க கோட்பாடோடு இந்துக்கள் பெருமளவில் வழிபட்டுத் தங்களது இடர்களை போக்கிக் கொள்கின்றனர். ஆலயத்தில் கூடும் அடியவர்களில் பெருமளவானோர் இந்துக்கள்.

சமயங்கள் கடந்த நிலையில் சகலரும் புனிதர் அந்தோனியாரைத் தமது உள்ளக் கோயிலில் நினைத்து வழிபடுகின்றனர். தாம் தொடரும் பயணமோ கருமமோ, தமக்கு ஏற்பட்ட இடர்களோ, இன்னல்களோ இல்லாமல் ஒழியும் தமது வாழ்க்கையில் ஒளி பிறக்கும் என்ற நம்பிக்கையுடன் காணிக்கை செலுத்தி வழிபடுகின்றதோடு தமது பொருள்களைக் கள்வர்கள் கவர்ந்த வேளையில் மற்றும் கையிழந்த வேளையில் அந்தோனியாரிடம் பொறுப்புக் கொடுத்துக் காணிக்கை செலுத்துகின்றனர். அந்தவகையில் ''இழைகட்டுதல்' என்ற கருமத்தையும் மேற்கொள்கின்றனர். 'இழை கட்டுதல்' என்பதை கேட்ட மாத்திரத்திலேயே பொருளைக் கையாடியவர்கள் அதனைக் கைவிட வேண்டும். சம்பந்தப்பட்டவர்களிடம் ஒப்படைத்துவிட வேண்டும் அல்லது பொருளை இழந்தவர்களின் கண் பார்வையில் வீசிவிட வேண்டும் என்ற மனச்சோர்வுக்கு உள்ளாவதோடு அவ்வாறு இல்லாவிடில் அந்தோனியார் வழங்கும் பெரும் துன்பத்தை எதிர்கொள்ள வேண்டும் என்ற நம்பிக்கைக்கு உள்ளாகி விடுகின்றனர்.

அச்சுவேலிப் பங்கில் காலத்தின் தேவையைக் கருத்தில் கொண்டு அச்சுநகர் புனித சூசையப்பர் தேவாலயத்துக்கு அடுத்த நிலையில் அச்சுவேலி வடக்கு புனித அந்தோனியார் தேவாலயமும் நவக்கிரி புனித நீற்றம்மா தேவாலயமும் கட்டப்பட்டன.

1945 ஆம் ஆண்டு கட்டப்பட்ட அச்சுவேலி வடக்கு புனித அந்தோனியார் ஆலயத்தைச் சார்ந்த நிலையில் ஆரம்பத்தில் 35 குடும்பங்கள் மட்டில் வாழ்ந்தனர். பின்னர் இருநூறுக்கு மேற்பட்ட குடும்பங்கள் இணைந்திருந்த போதிலும் கடந்தகால போர்ச் சூழ்நிலை மற்றும் இடப்பெயர்வுகளை அடுத்து, அச்சுவேலியில் இருந்து பெருமளவில் புலப்பெயர்வு ஏற்பட்ட நிலையில் தற்பொழுது நூறு குடும்பங்கள் வரையிலேயே தேவாலயம் சார் நிலையில் கத்தோலிக்க குடும்பங்களாக வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தேவாலயத்தின் அனைத்துத் தேவைகளிலும் தமது பங்களிப்பைச் செலுத்தி அமைதியாக வாழ்கின்றனர்.

1965 ஆம் ஆண்டு அந்தோனியார் தேவாலயம் புனரமைக்கப்பட்டு தற்போது காணப்படும் கட்டுமான அமைப்பில் திருத்தி அமைக்கப்பட்டது. அதை அடுத்து ஆண்டு தோறும் நடைபெறும் திருவிழாவை முன்னிட்டு ஆலயத்தை வர்ணம் பூசி புதுப்பொலிவடையச் செய்வதோடு காலத்தின் தேவைக்கு ஏற்ப கட்டுமானப் பணிகளும் திருத்த வேலைகளும் நடைபெற்று வருகின்றன.

குறித்த காலப்பகுதியில் ஆலயக் கட்டுமானப் பணிக்கான காணியைத் தேடிய வேளையில் பிரதான வீதியோரமாக உள்ள தமது 3 1/2 பரப்பு தோட்ட நிலத்தை அச்சுவேலியைச் சேர்ந்த அகஸ்தீன் என்பவரின் மகன் ஞானஆதிக்கம் எலியாஸ் அன்பளிப்பாக வழங்கி உதவினார். அந்த இடத்தில் சிறிய தேவாலயம் ஒன்று அமைக்கப்பட்டது. அதனை உரிய முறையில் அமைப்பதற்கான ஏற்பாடுகளை வணபிதா ஜி.ஜி.பால சுந்தரம் அடிகளார் நேரடியாக கவனித்ததோடு புதிய தேவாலயத்தில் திருப்பலி வழிபாடுகளையும் மேற்கொண்டார். அனைத்து கத்தோலிக்க குடும்பங்களும், இந்துக்களும் நிதி வழங்கியதோடு மட்டுமல்லாது உடல் உழைப்பையும் வழங்கி தேவாலயத்தை நிர்மாணிப்பதற்கு உதவினர். ஆரம்பத்தில் அந்தோனியார் தேவாலயத்துக்கான கொடி மரம், ஒலி எழுப்புவதற்கான 'மணி' என்பனவற்றை சின்னப்பு எலியாஸ் குடும்பத்தினர் வழங்கி உதவினர்.

1965 ஆம் ஆண்டு அந்தோனியார் தேவாலயம் புனரமைக்கப்பட்டு தற்போது காணப்படும் கட்டுமான அமைப்பில் திருத்தி அமைக்கப்பட்டது. அதை அடுத்து ஆண்டு தோறும் நடைபெறும் திருவிழாவை முன்னிட்டு ஆலயத்தை வர்ணம் பூசி புதுப்பொலிவடையச் செய்வதோடு காலத்தின் தேவைக்கு ஏற்ப கட்டுமானப் பணிகளும் திருத்த வேலைகளும் நடைபெற்று வருகின்றன.

2012 ஆம் ஆண்டு ஆலயத்துக்கு மிக அவசியமான 'குருமனையை' நிறுவி முடிக்க வேண்டும் என்ற இலக்கோடு ஆலயத்துக்கு கிழக்குப் புறமாக உள்ள காணி நான்கு பரப்பைக் கொள்வனவு செய்து குருமனைக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்றன.

காணிக் கொள்வனவு மற்றும் குருமனை அமைப்பதற்கான நிதி உதவியை சமய வேறுபாடுகளைக் கடந்த நிலையில் இந்துக் குடும்பங்களும், அனைத்துக் கத்தோலிக்க குடும்பங்களும் வழங்கி உதவின. குருமனை அமைப்பதற்கான ஏற்பாடுகளைப் போன்று பிரான்சிஸ் (அழகர்) தலைமையிலான குழுவினர் மேற்கொண்டனர் குருமனை அமைப்பதற்கான வழிகாட்டலை அப்போது அச்சுவேலி பங்குத் தந்தையாக கடமை புரிந்த அருட்தந்தை ஜெபநேசரட்ணம் அடிகளார் வழங்கியதோடு அதற்கான நிதி வளத்தைத் தேடுவதிலும் பங்கு மக்களோடு முன்னின்று உழைத்தார்.

26 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட குருமனையை இந்த வருட முற்பகுதியில் யாழ். மறை மாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை திறந்து வைத்து ஆசீர்வதித்தார்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்குப் பாடசாலைகளுக்கு சத்துணவு தடைப்படுமா?

### ஒதுக்கிய பணம் என்னவானது?

மட்டக்களப்பு,ஜூலை6

நாடெங்கும் பாடசாலைகள் தோறும் நடைமுறைப்படுத் தப்பட்டுவரும் மாணவர்களுக்கான சத்துணவு வழங்கும் திட்டமானது கிழக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளுக்கு வழங்குவதில் கேள்விக்குறியாகவுள்ளது.

கடந்த மார்ச் மாதம் தொடக்கம் ஜூன் மாதம் வரைக் குமான காலப்பகுதிக்குரிய சத்துணவு வழங்கும் திட்டத்துக் கான பணம் இதுவரை மட்டக்களப்பிலுள்ள பல பாடசாலை களுக்கு வழங்கப்படவில்லை என்று அதிபர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை கடந்த ஜூன் மாதம் முதலாம் திகதி கல்வி அமைச்சில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்ட அதிபர்களிடம் குறித்த பணத்துக்கான நிதி ஒதுக்கீட்டை கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்துக்கு வழங்கிவிட்டதாக அதிகாரிகளினால் கூறப்பட்டுள்ளது.

ஆனால் இதுவரைக்கும் மாகாண கல்வித் திணைக்களம் இது தொடர்பான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளவில்லை என்றும் தங்களுக்கு எதுவிதமான கொடுக்கல் நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லையென அதிபர்கள் கவலை தெரிவிக்கின் றனர்.

இந்தவிடயம் தொடர்பாகப் பாடசாலை அதிபர்கள், வர்த்த கர்களுக்குப் பணம் கொடுக்க முடியாமல் பல சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.குறித்த விடயத்துக்குக் கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் தகுந்த நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது. (ச)

பரீட்சை பெறுபேறுகளை உடன் வெளியிட்டு

# பட்டதாரி மாணவர்களின் நெருக்கடி நிலைக்குத் தீர்வு

## கிழக்குப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் உறுதி

மட்டக்களப்பு,ஜூலை6

கிழக்குப் பல்கலைக்கழ கத்தில் 2010ஆம் , 2011 ஆம் ஆண்டு பட்டம்பெற்ற உள் வாரி மாணவர்களின் மீள் பரீட்சைப் பெறுபேறுகளை உடனடியாக வெளியிட்டு பட்டதாரி மாணவர்களின் பிரச்சினைகளை ஒருவாரத் துக்குள் நிவர்த்திசெய்வதாக, கிழக்குப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கிட்ணன் கோவிந்தராஜா பாதிக்கப் பட்ட பட்டதாரி மாணவர் களிடம் உறுதியளித்துள்ளார்.

இது சம்பந்தமாகப் பாதிக் கப்பட்ட கிழக்குப் பல்கலைக் கழக மாணவர்கள் நேற்றுமுன் தினம் புதன்கிழமை துணை வேந்தரைச் சந்தித்துத் தங்க ளது பிரச்சினைகள் குறித் துக் கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்படுவதாது:-

அண்மையில் மட்டக்க ளப்பு மாவட்டத்தில் பட்டதாரி களுக்கு வழங்கப்பட்ட பட்ட தாரிப் பயிலுநர் நியமனங் களில் 2010ஆம், 2011 ஆம் ஆண்டுகளில் பட்டம்பெற்ற மாணவர்களை உள்வாங்கு வதற்கான நேர்முகத்தேர்வு நேற்றுமுன்தினம் மட்டக்க ளப்பு மாவட்ட அரச அதிபர் அலுவலகத்தில்நடைபெற்றது.

இந்த நேர்முகப்பரீட்சை யில் கலந்துகொண்ட பல பட் டதாரி மாணவர்கள் தங்களுக் கான தற்காலிக தரநிலைச் சான்றிதழை மட்டுமே கொண்டு வந்துள்ளனர். இத னால்அவர்களைப் பட்டதாரிப் பயிலுநர்களாகப் இணைத் துக் கொள்ள முடியாது என்று அதிகாரிகள் தெரிவித்தனர். ஒருவார காலத்துக்குள் நிரந் தர தரநிலைச் சான்றிதழை சமர்ப்பிப்பவர்களுக்கு மாத் திரமே பட்டதாரிப் பயிலுநர் நியமனம் வழங்கப்படும் என்று அதிகாரிகள் உத்தர விட்டுள்ளனர்.

இந்த நிலையில் பல் கலைக்கழக விரிவுரையாளர் களின் பணிப் பகிஷ்கரிப்பு நடைபெற்றுவரும் நிலை யிலும் மனிதாபிமான அடிப் படையில் மாணவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைக் கும் நோக்குடன் பல்கலைக் கழக நிர்வாகத்தினருடன் கலந்துரையாடிய துணை வேந்தர் பாதிக்கப்பட்ட மாண வர்களின் நலன்கருதி குறித்த பிரச்சினைகளை விரைவில் தீர்த்து வைப்பதாக உறுதிய ளித்துள்ளார். (ச)

## விளையாட்டு மைதானம் புனரமைப்பு

திருகோணமலை,ஜூலை6

கிண்ணியாப் பிரதேச சபைக்குட்பட்ட முனைச் சேனை பொது விளை யாட்டு மைதானம் பொது மக்களின் நிதியுதவியுடன் சிரமதானம் செய்யப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ளது.

நியூ ஸ்டார் விளையாட் டுக் கழகத்தின் ஆலோசக ரும், சமாதான நீதிவானு மான அப்துல் லத்தீப் நவாஸின் ஆலோசனையின் கீழ் இந்தச் சிரமதானப் பணிகள் இடம்பெற்றன.

இந்தச் சிரமதானப் பணி யில் விளையாட்டுக்கழக வீரர்கள், இளைஞர் கழக உறுப்பினர்கள், பாடசாலை மாணவர்கள், கிராமமக்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ச)



மஹிந்த சிந்தனைத் திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கு இலவச பால் வழங்கும் நிகழ்வை பெரியகல்லாறு புனித அருளானந்தர் பாடசாலையில் பட்டிருப்பு வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். மயில்வாகனம் ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். (31)

## டெங்குநோய் குறித்த அறிவு மாணவர்களுக்கு அவசியம்

**பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கூறுகிறார்**

இறக்காமம்,ஜூலை6

டெங்குநோய் பற்றிய அறிவு பாடசாலை மாண வர்களுக்கு மிகவும் அவசிய மாகும். மாணவர்களுக்கு இதுபற்றி அறிவுறுத்துவத னால் வீட்டிலுள்ளவர்களுக் கும் டெங்கு அபாயம் பற்றிய தகவல் போய்ச்சேரும் என்று இறக்காமம் பொதுச் சுகாதா ரப் பரிசோதகர் ஏ.எல்.ஜெ ளஸ் தெரிவித்தார்.

இறக்காமம் அஷ்ரப் மத் திய கல்லூரி மாணவர்களுக்கு டெங்குநோய் பரவுதல் தொடர்பாக விளக்கமளிக் கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். சிறுதுளி நீர் கூட தேங்கி நின்றாலும் டெங்கு நுளம்பு உற்பத்தி யாகி நோய் பரவும் அபாயம் காணப்படுகிறது. எப்போதும் சுற்றுச் சூழலைச் சுத்தமாக வைத்திருப்பதுடன், நீர் தேங்கி நிற்கும் இடங்களை முற்றாக ஒழிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

நாடளாவிய ரீதியில் இன்று அதிகமாக டெங்கு நோய் பற்றிப் பேசப்படுகின் றது. அரசு இந்தக் கொடிய நோய் பற்றி அடிக்கடி அறிவு றுத்தி வருகின்றது என்று அவர் குறிப்பிட்டார். (ச)

மட்டு.மாவட்டத்தில்

## சுழல் காற்றால் 774 பேர் பாதிப்பு

மட்டக்களப்பு,ஜூலை6

மட்டக்களப்பு மாவட்டத் தில் கடந்த திங்கள்கிழமை மாலை வீசிய சுழல் காற்றால் 173 குடும்பங்களைச் சேர்ந்த 774 பேர் பாதிக்கப்பட்டுள்ள னர் என்று இடர் முகாமைத் துவ மத்திய நிலையத்தின் மட்டக்களப்புமாவட்ட உதவிப் பணிப்பாளர் எஸ்.இன்பரா ஜன் தெரிவித்தார்.

மாவட்டத்தின் வாகரை, கோறளைப்பற்று மத்தி, ஏறாவூர் பற்று, வாழைச் சேனை, ஓட்டமாவடி, கிரான் மற்றும் ஏறாவூர் நகர் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவு களிலேயே இந்தப் பாதிப்பு கள் ஏற்பட்டுள்ளன. இதனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் 14 வீடுகள் முழுமையாகவும் 168 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

சேதமடைந்த இடங் களை நேரில் சென்று பார் வையிட்ட இவர், மட்டக் களப்பு மாவட்ட செயலாளர் பி.எஸ்.எம்.சாள்ஸின் ஆலோ சனைக்கமைய பிரதேச செய லாளர்களிடமிருந்து விவரங் கள் பெறப்பட்டு இடர் முகா மைத்துவ மத்திய நிலையத் துக்கு அனுப்பப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## பஸ்கள் மோதி 7 பேர் காயம்

கம்பளை,ஜூலை 6

வெலிகல்லை பகுதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரண்டு பஸ்கள் மோதி விபத்துக்குள்ளானதில் 7 பேர் காயமடைந்த நிலையில் கம்பளை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். கம்பளையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த தனியார் பஸ் வீதியோரமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த மற்றுமொரு பஸ்ஸுடன் மோதி விபத்திற்குள்ளானது.

இந்த விபத்தின்போது பஸ்ஸில் பயணம் செய்த பயணிகளே காயமடைந்துள்ளனர். விபத்துத் தொடர்பில் கம்பளைப் பொலி ஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## நுவரெலியாவில் டெங்குநோய் விழிப்புணர்வுச் செயற்பாடுகள்

நுவரெலியா,ஜூலை 6

நுவரெலிய பிரதேச சபை யானது டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகக் கட்ட டங்களுக்கு ஸ்ரிக்கர் ஒட் டும் செயற்பாட்டை முன் னெடுத்துள்ளது.

கட்டடங்களில் ஒட்டப் பட்டுள்ள ஸ்ரிக்கர்களில் நான்கு சதுரங்கள் காணப்ப டுவதுடன் தமது வீடு மற்றும் கட்டடச் சூழலை சுத்தமாக வைத்திருப்பதற்கு ஏற்ப அந்தச் சதுரங்களில் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் அடையாளமிடுவர் என தெரி விக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்பாடானது தமது வீடு மற்றும் சுற்றுச் சூழ லின் தரத்தைக் குடியிருப் பாளர்கள் தெரிந்து அதற்கு ஏற்ப தமது செயற்பாடுகளை மாற்றியமைப்பதற்கு உத வும் என்று நுவரெலியா பிர தேசசபை தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கை டெங்கு நுளம்பு பரவும் சூழலை கட்டுப்படுத்தும் என தாம் எதிர்பார்ப்பதாகச் சபையின் தலைவர் தெரிவித்தார். (ச)

## எண்ணத்தில் தூய்மை இல்லாவிட்டால் எந்தவொரு வியூகமும் வெற்றிபெறாது

**அரசியலில் தாம் பொய் சொல்வதில்லை என்கிறார் அதாவுல்லா**

ஒலுவில்,ஜூலை6

எண்ணத்தில் தூய்மை யில்லாவிட்டால் எந்தவொரு வியூகமும் வெற்றிபெறாது. நாங்கள் அரசியலில் பொய் சொல்லவில்லை. அதனால் எங்கள் எண்ணங்களை அல்லாஹ் வெற்றியடையச் செய்கின்றான் என்று உள்ளூ ராட்சி மாகாணசபை அமைச் சர் ஏ.எல்.எம் அதாவுல்லா ஒலுவிலில் இடம்பெற்ற வீதி அபிவிருத்தி பெருவிழா வில் கலந்துகொண்டு உரை யாற்றும் போது தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாங்கள் உண்மையைப் பேசுகிறோம். கிடைத்த அதி காரங்களையும், அமைச்சுப் பதவிகளையும் கொண்டு மக்களுக்கு அபிவிருத்தி களைச் செய்கின்றோம்.நாங் கள் மக்களை ஏமாற்றவில்லை. மக்களை ஏமாற்றி வாக்குக ளைப் பெறுவதற்காகத் தேர்தல் காலங்களில் மட்டும் வந்து போகின்ற தேவை எங்களுக் கில்லை. மக்கள் நலனை மன தில் வைத்துக் கொண்டு எங் கள் அபிவிருத்திப் பயணம் தொடர்ந்து கொண்டே இருக்கும் - என்றார். (ச)

சாமிமலை பெயர்லொன் பாடசாலை:

## நிர்வாகத்துக்கு எதிராக கவனயீர்ப்புப் போராட்டம்

ஹற்றன்,ஜூலை 6

ஹற்றன் கல்வி வலயத்துக்கு உட்பட்ட சாமிமலை பெயர்லோன் தமிழ் வித்தியால யத்தில் காணப்படுகின்ற நிர்வாகச் சீர்கேடு களைத் தீர்க்கக்கோரி நேற்றுமுன்தினம் இந்தப் பாடசாலையின் மாணவர்களும் பெற்றோர்களும் கவனயீர்ப்புப் போராட்ட மொன்றில் ஈடுபட்டனர்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை பாட சாலைக்குச் சென்ற மாணவர்கள் வகுப்பு களைப் பகிஷ்கரித்துள்ளனர். இவர்களுக்கு ஆதரவு தெரிவித்து பெயர்லோன், மின் சில்லேன், பாகனி, சின்ன சூரியகந்தை ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்களும் பணிநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இந்தவிடயம் தொடர்பாக ஹற்றன் வலயக் கல்வி அலுவலகம், மஸ்கெலியா பொலிஸ், தொழிற்சங்க அலுவலகங்கள் என்பனவற்றுக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த நிறுவனங்களைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் குறிப்பிட்ட பாடசாலைக்கு வருகைதந்து பாடசாலை நிர்வாகத்தின ரிடமும் பெற்றோர்களிடமும் பேச்சுக்களில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து வகுப்புப் பகிஷ் கரிப்பில் ஈடுபட்ட மாணவர்கள் அதனைக் கைவிட்டு கல்விச் செயற்பாட்டில் ஈடு பட்டனர் (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** அடுத்தடுத்த பணிகளால் எதைச் செய்வது எதைச் செய்யாமல் இருப்பது என்ற குழப்பம் இருக்கும். எதிர்பார்த்த வரவுகள் வரும். உங்களின் வாழ்க்கை உயர்வதற்கு காரணமாக இருந்த ஒருவரை சந்திக்கக் கூடும்.

**இடபம்:** உங்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்றவாறு சில நிகழ்ச்சிகள் நடக்கும். வியாபாரத்தில் வரவுகள் இலாபகரமாகவும் இருக்கும். தொழிலில், புதிய ஒப்பந்தங்களுக்கான பேச்சு ஏற்படும். கலைஞர்களுக்கு வெகுமதி கிடைக்கும்.

**மிதுனம்:** சில வேலைகளைச் செய்ய ஆரம்பித்து அதை முடிப்பதற்கு முன்பாகவே, அடுத்த பணிக்குத் தாவுவீர்கள். இதுவும் முடியாமல், அதுவும் முடியாமல் இருக்கும். வரவுகள் வந்தபோதும், செலவுகள் அதிகமாக இருக்கும்.

**கடகம்:** சில வெற்றிகள் உங்களை உற்சாகத்தில் ஆழ்த்தும். குழந்தைகளின் எதிர்கால நலனைக் கருதி, சில ஏற்பாடுகளை மேற் கொள் வீர்கள். உடன்பிறப்புக்காக சிலரிடம் பரிந்து பேச வேண்டியிருக்கும். சிலர் உங்களின் உதவி நாடி வரலாம்.

**சிங்கம்:** எடுத்த காரியங்கள் எண்ணம்போல் நிறைவேறும். குடும்பத்துக்காக சில கஷ்டங்களை அனுபவிக்க முன்வருவீர்கள். நண்பர்களிடம் வார்த்தை தவறுதலால் மனக் கஷ்டம் ஏற்படும். வழக்கு விவகாரங்களில், சாதகமான பலன்களைக் காணலாம்.

**கன்னி:** கடந்தகால செயல் ஒன்று, அதிகமாக யோசிக்க வைக்கும். ஒரு வேலைக்காகச் சென்று, அதிகப்படியான செலவுகளைச் சந்திக்க நேரிடும். உடல் நிலையில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். பணியாளர்கள், மேலதிகாரிகள் விடயத்தில் பொறுமையைப் கடைப்பிடிப்பது பெருமை தரும்.

**நாளை**

ஆனி 23 சனிக்கிழமை 07.07.2012
திதி: சதுர்த்தி மு.இ 08.28 வரை
நட்சத்திரம்: அவிட்டம்பி.ப. 03.03 வரை
சுபநேரம்: 02.58- 04.28 வரை
ராகு காலம்: 08.58- 10.28 வரை

**துலாம்:** ஒன்றுமில்லாத விடயங்களுக்கு அதிகமான மன வருத்தத்தை ஏற்படுத்திக் கொள்வீர்கள். கொஞ்சம் மாற்றிக்கொள்ளுங்கள். குடும்பத்தில் கடந்த இரண்டு நாள்களாக நீடித்த சிக்கல்கள் தீர்ந்து நிம்மதி காண்பீர்கள். விவாக முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு.

**விருச்சிகம்:** உங்களின் செயற்பாடுகளால், மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். நெருங்கிய நபரின் செயற்பாடு அதிகம் யோசிக்க வைக்கும். வீட்டு வசதியை அதிகரிக்க முற்படுவீர்கள். தெய்வ வேண்டுதல்களை நிறைவேற்றுவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு:** பிறரின் குற்றம் கண்டு மனம் கொதிப்பீர்கள். எதையும் சாதாரணமாக எடுத்துக் கொள்ள பழக்கப்படுத்திக்கொள்ளுங்கள். செலவுகளைக் கட்டுப்படுத்தி சேமிப்பை அதிகரிப்பீர்கள். வாகனங்களில் செல்லும்போதும், பயணங்களின்போது கவனம் தேவை.

**மகரம்:** ஒரு பணியைச் செய்வதற்காக அவசர அவசரமாகப் புறப்பட்டுச் செல்வீர்கள். புதிய ஒப்பந்தங்களைத் பிற்போட்டு வைப்பது நன்மை தரும். நிலம், பூமி தொடர்பான விவகாரங்களில் சுமூகமான நிலையை எட்ட வாய்ப்புகள் உண்டு.

**கும்பம்:** அவசரப்பட்ட வார்த்தைகளால், தானும் மனக்கஷ்டப்பட்டு, பிறரையும் சங்கடத்தில் ஆழ்த்துவீர்கள். தவிர்த்துக்கொள்ளுங்கள். உடன்பிறப்பின் விவகாரங்களில் முன்னெச்சரிக்கையோடு செயற்படுதல் அவசியம். வெளிநாட்டுத் தொடர்புகளால், எதிர்பார்த்த அனுகூலம் கிடைப்பது கடினம்.

**மீனம்:** பொறுமையான செயற்பாடுகள் கொண்ட நாளாக அமையும். புதிய பணிகளுக்கான வாய்ப்புகள் கிடைக்கப்பெறும். அரசியல் தொடர்புடைய வேலைகளால் பணச்செலவு ஏற்படும்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2 | | | | | | 4 |
| | 5 | 3 | 6 | 4 | | 2 | | |
| | 6 | | 5 | 7 | | | 3 | |
| 5 | | | | | | | 9 | 3 |
| | | 4 | 1 | 9 | 7 | 6 | | |
| 6 | 9 | | | | | | | 2 |
| | 7 | | | 3 | 1 | | 8 | |
| | | 5 | | 6 | 9 | 1 | 4 | |
| 1 | | | | | | 3 | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 4 | 1 | 6 | 9 | 5 | 2 | 7 | 3 |
| 7 | 9 | 3 | 1 | 8 | 2 | 4 | 6 | 5 |
| 2 | 6 | 5 | 4 | 3 | 7 | 1 | 9 | 8 |
| 1 | 5 | 7 | 9 | 2 | 3 | 8 | 4 | 6 |
| 4 | 2 | 8 | 5 | 7 | 6 | 9 | 3 | 1 |
| 6 | 3 | 9 | 8 | 1 | 4 | 5 | 2 | 7 |
| 5 | 8 | 6 | 7 | 4 | 9 | 3 | 1 | 2 |
| 9 | 7 | 2 | 3 | 5 | 1 | 6 | 8 | 4 |
| 3 | 1 | 4 | 2 | 6 | 8 | 7 | 5 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


**அராலி சரஸ்வதி மகா வித்தியாலய நூற்றாண்டு விழாவில்........**

**08.07.2012 அன்று கல்லூரி மாணவ மாணவியர் நடிப்பது.**

**கலாபூஷணம் அராலியூர்**
**ந. சுந்தரம்பிள்ளையின்**
**பரிசு பெற்ற வானொலி நாடகம்**
**கல்வியா ? கனடா கல்யாணமா ?**

(20048)(6-7-8)


## பொருளியில் பாட கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை6

2012 க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான பொருளியல் பாடக் கருத்தரங்கு நாளை சனிக்கிழமையும் மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் காலை 9 மணிமுதல் பிற்பகல் 2மணிவரை நடைபெறும்.

இந்த நிகழ்வில் பொருளியல் ஆசிரியர் வே.கருணாகரன் கருத்துரை வழங்கவுள்ளார்.

பரீட்சை எதிர்பார்ப்புகள், கட்டமைப்பு மற்றும் பல்தேர்வு வினாக்கள், சமகால பொருளாதார போக்குகள், நிகழ்வுகள், அபிவிருத்தித் திட்டங்கள் போன்ற பல விடயங்கள் கருத்தரங்கில் கலந்துரையாடப்படவுள்ளன.

பரீட்சைக்குத் தோற்றவுள்ள சகல மாணவர்களும் இதில் கலந்து கொண்டு பயனடையலாம்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
05 ★ 06 ★ 1933



ஆண்டவன் அடியில்
10 ★ 07 ★ 2009

அமரர் **ஆறுமுகம் சங்கரப்பிள்ளை**
(ஓய்வு பெற்ற மின்சார சபை உத்தியோகத்தர்)
**திதி: 2012. 07.06**

ஆண்டுகள் மூன்று சென்றாலும் - அப்பா
ஆறாது எமது துயரம்
நாள்கள் பல நகர்ந்தாலும் - தினமும்
நீங்காது உங்கள் நினைவுகள்

ஆயிரம் உறவுகள் எமைச் சூழ்ந்திருந்தாலும் - அப்பா
உங்கள் அன்புக்கு ஈடாகுமா?

கோடான கோடி செல்வம்
கொட்டிக் கொடுத்தாலும் - அப்பா
உங்கள் ஆறுதல் வார்த்தைகளுக்கு சமமாகுமா?

பண்பாய் பாசமாய் பார்போற்ற
பலவழிகள் காட்டி நின்ற - அப்பாவே
வழி தெரியாது விழி இன்றித் தவிப்பவர் போல
வாடி நாம் நிற்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனை பிரார்த்தனை செய்துகொண்டு
உங்கள் ஆசியை வேண்டி நிற்கும்.

பிள்ளையார் கோயிலடி,
அச்சுவேலி தெற்கு.

(20066) (45.6.9)

**குடும்பத்தினர்**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
14 ★ 08 ★ 1972



மறைவு
06 ★ 06 ★ 2012

அமரர் **சின்னத்தம்பி பாலசுப்பிரமணியம்**


**அன்னாரின் மரணச்செய்தி கேட்டு நேரிலும், தொலைபேசி மூலமும் தொடர்பு கொண்டு ஆறுதல் கூறியோருக்கும், மரணச்சடங்குகளில் கலந்து கொண்டவர்க்கும் வேறு பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (06.07.2012) வெள்ளிக்கிழமை கீரிமலை தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்தியகிரியைகள் (08.07.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் குடும்ப சகிதம் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.**

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
புன்னாலைக்கட்டுவன்

(20072)(6-7-8)

**தாய், சகோதரர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாலபே தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கை நேற்றுமுன்தினம் புதன்கிழமை களுபோவில போதனா வைத்தியசாலைக்கு முன்னால் இடம்பெற்றது.

## சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பு

கொழும்பு,ஜூலை6

நாட்டில் தற்போது நிலவும் சமாதான சூழ்நிலையில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையும் அதிகரித்துள்ளது.

இதற்கமைய புத்தளம் மாவட்டத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகையும் அதிகரித்துள்ளது.

வழமையாக ஒக்ரோபர் மாதத் தொடக்கமே சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகமாக காணப்படும். ஆனால் இந்த வருடம் தற்போதே சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது.

இதனால் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் சுற்றுலாப் பயணிகளின் வருகை மேலும் அதிகரிக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## வர்த்தக வலய ஊழியருக்கு இதுவரை நஷ்டஈடு இல்லை

### தொழிற்சங்கங்கள் குற்றச்சாட்டு

கொழும்பு,ஜூலை 6

தனியார் ஓய்வூதியத் திட்டத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்துகொண்டிருந்த தொழிலாளர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலில் மரணமடைந்த சுதந்திர வர்த்தக வலய ஊழியரான ரொஷான் சானகவின் மரணம் தொடர்பான விசாரணை பூர்த்தியடையவில்லை. அரசு வாக்களித்தபடி அவரின் குடும்பத்தினருக்கு நஷ்டஈடு வழங்கப்படவில்லை என்று தொழிற்சங்கங்கள் தெரிவித்தன.

பொலிஸாரின் தாக்குதலினால் காயமடைந்த பல ஊழியர்களுக்கு இதுவரை நஷ்டஈடு கிடைக்கவில்லை. இவர்களால் தமது ஜீவனோபாயத்தைக் கொண்டு செல்ல முடியாதுள்ளது. இவர்களைத் தாக்கியதாகக் குற்றம் சுமத்தப்பட்ட பொலிஸார் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று தொழிற்சங்கங்கள் தெரிவித்தன.

ரொஷானின் மரணம் தொடர்பாக விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட ஆணைக்குழு அதன் அறிக்கையை சமர்ப்பித்துள்ள போதிலும் அதற்கு அப்பால் எதுவும் நடைபெறவில்லை என்று சுதந்திர வர்த்தக வலயங்கள் மற்றும் பொதுச் சேவைகள் ஊழியர்கள் சங்கத்தின் செயலாளரான அன்ரன் மார்கோஸ் தெரிவித்தார்.

ரொஷானின் குடும்பத்திற்கு 5 மில்லியன் ரூபா வழங்கப்பட வேண்டும் என்று தமது சங்கம் கோரியதாக அவர் கூறினார். (ச)

## 'இஸட்' புள்ளி விவகாரத்தில் நீதியான செயற்பாடு தேவை

### நாடாளுமன்றில் ரணில் வலியுறுத்து

கொழும்பு,ஜூலை 6

இஸட் புள்ளி கணிப்பீட்டு முறையால் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுக்கும் வகையிலான செயற்றிட்டத்தை அரசு முன்னெடுக்க வேண்டும். தவறுகளை ஏற்று பதவி விலகக்கூடிய துணிச்சல் மிக்க அமைச்சர்கள் இந்த அரசில் இல்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இஸட் புள்ளி விவகாரம் தொடர்பில் நேற்று முன்தினம் நாடாளுமன்றில் விசேட கூற்றொன்றை விடுத்து உரையாற்றிய அவர் இது தொடர்பில் மேலும் கூறியதாவது:-

பரீட்சைகள் முறைமை பற்றியும், சுதந்திரக் கல்வி தொடர்பிலும் நம்பிக்கையின்மை ஏற்பட்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டி கடந்த ஜனவரி மாதம் 17 ஆம் திகதி சபையில் கருத்து வெளியிட்டிருந்தேன்.

பழைய, புதிய பாடத்திட்டத்துக்கமைய வெவ்வேறாக இடம்பெற்ற பரீட்சைகள் தொடர்பில் பொதுவான முறையில் இரண்டுக்கும் இஸட் புள்ளி கணிப்பிடப்படுவதால் மாணவர்களுக்கு ஏற்படப் போகும் அநீதிகள் குறித்தும் நான் சுட்டிக்காட்டியிருந்தேன்.

தற்போது கையாளப்பட்ட இஸட் புள்ளிக் கணிப்பீட்டு சூத்திர முறைமையால் மாணவர்களுக்கு அநீதி ஏற்பட்டுள்ளது என்பதை உயர் நீதிமன்றம் ஏற்றுக் கொண்டுள்ளது.

2000 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரையில் பின்பற்றிய முறைமையைத் தொடர்ந்தும் முன்னெடுக்குமாறு இஸட் புள்ளி விவகாரம் தொடர்பான நீதிமன்றத் தீர்ப்பின் 6 , 7, 14 ஆகிய பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரசாயன விஞ்ஞானம் கேள்விப்பத்திரத்தில் வித்தியாசமொன்று இருந்தது என நீதிமன்றத் தீர்ப்பின் 27 ஆம் பக்கத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அப்படியானால் இது தொடர்பிலான பொறுப்பை பரீட்சைகள் ஆணையாளர் ஏற்கவேண்டும். ஆனால், அவர் அதற்கான பொறுப்பை ஏற்றுள்ளாரா என்ற கேள்வி தற்போது எழுகின்றது? இது தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் தேவையான அறிவுறுத்தல்களை விடுக்கவில்லை என்று தீர்ப்பின் 32 ஆம் பக்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு முறைமையின் கீழும் இஸட் புள்ளிகளை கணிப்பிட்டு மாணவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கும் வகையிலான நீதிமன்றின் தீர்ப்பு மதிக்கத்தக்கது. அமைச்சர்கள் மற்றும் பொறுப்புக்கூற வேண்டியவர்களால் இழைக்கப்பட்ட தவறை திருத்திக் கொள்வதற்கு இதன்மூலம் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இருப்பினும், அமைச்சர்கள், பொறுப்புக் கூறவேண்டியவர்கள் ஆகியோர் தங்களுக்கிடையே ஒருவருக்கொருவர் குற்றச்சாட்டுக்களை சுமத்திக்கொண்டு நிரபராதியாகுவதற்கு முயற்சிக்கின்றனர்.

இரண்டு முறைமைக்கும் தனித்தனியே இஸட் புள்ளி கணிப்பிடப்படவேண்டுமென நிபுணர்கள், சட்ட நிபுணர்கள் ஆகியோரும் நாமும் சுட்டிக்காட்டியபோது அமைச்சர்கள் மேற்கூறப்பட்டவர்களுக்கும் எமக்கும் எதிராக குற்றச்சாட்டுகளையே முன்வைத்து சேறு பூசினர். இந்த அமைச்சர்கள் தாம் இழைத்த அநீதிகளைத் தெரிந்துகொள்வதற்கு கடந்த ஜனவரி மாதம் 17 ஆம் திகதியில் உள்ள ஹன்சாட் அறிக்கையை வாசித்தால் தெளிவாகப் புரிந்துகொள்ளமுடியும்.

இஸட் புள்ளி கணிப்பீட்டு முறைமையால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நியாயத்தைப் பெற்றுக்கொடுக்கும் வகையிலான செயற்றிட்டமொன்றை அரசு முன்னெடுக்க வேண்டும்-என்றார். (ச-சி)

தற்போது கையாளப்பட்ட இஸட் புள்ளிக் கணிப்பீட்டு சூத்திர முறைமையால் மாணவர்களுக்கு அநீதி ஏற்பட்டுள்ளது என்பதை உயர்நீதி மன்றம் ஏற்றுக் கொண்டுள்ளது.



## கட்சிச் சின்னமாக புலியா? அதற்கு இல்லை அனுமதி





கொழும்பு,ஜூலை 6

தேர்தலில் புலி மற்றும் நாய் ஆகியவற்றைக் கட்சிச் சின்னங்களாகப் பயன்படுத்த முடியாது. இதற்கு முன்னர் சில கட்சிகள் தமது சின்னங்களாகப் புலி மற்றும் நாய் ஆகியவற்றைப் பயன்படுத்தியிருந்ததாகத் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

எதிர்வரும் காலங்களில் குறித்த இரண்டு சின்னங்களையும் தடை செய்யத் தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கலசம், ஜோடி வாள், தாமரை மலர், சிங்கம், சம்மட்டி போன்றவற்றையும் கட்சிச் சின்னங்களாகப் பயன்படுத்த அனுமதிக்க முடியாது என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தமுறை மாகாணசபைத் தேர்தல் நடைபெறும் காலப் பகுதியில் உயர்தரப் பரீட்சை நடைபெறவுள்ளமையினால் பிரசார நடவடிக்கைகள் தொடர்பில் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

பரீட்சை நிலையங்களுக்கு அண்மையில் ஒலிவாங்கிகளைப் பயன்படுத்தி பிரசாரம் செய்யக் கூடாது என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச)

## நீதிமன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதற்கு குழு

### ஜனாதிபதி நியமனம்; எஸ்.பி.தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை 6

இஸட் புள்ளி விவகாரம் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை துரித கதியில் நடைமுறைப்படுத்துவதற்காக பல்கலைக் கழகங்கள் மானியங்கள் ஆணைக் குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்கு மூவரடங்கிய பேராசிரியர் குழாமொன்றை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளார் என்று உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க நேற்று முன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

இஸட் புள்ளி விவகாரம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் விசேட கூற்றொன்றை விடுத்து உரையாற்றியதற்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உயர்கல்வி அமைச்சின் கீழ் உள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவே இஸட் புள்ளிக்குப் பொறுப்பானது. எனவே, இஸட்புள்ளிக்கும் கல்வி அமைச்சு மற்றும் பரீட்சைகள் திணைக்களம் ஆகியவற்றுக்கும் எவ்வித தொடர்புமில்லை.

துணைவேந்தர்கள், புள்ளி விவரவியல் நிபுணர்கள் மற்றும் பேராசிரியர்களைக் கொண்ட நிபுணத்துவக்குழுவினாலேயே இஸட் புள்ளி சூத்திரம் கணிக்கப்பட்டது. இரு பாடத்திட்டங்களின் அடிப்படையில் உயர்தரப் பரீட்சைகள் நடைபெற்றன.

எனவே, இவ்விரு பாடத்திட்டத்துக்கும் வெவ்வேறாக இஸட்புள்ளிகள் மதிப்பிடப்பட்டால் வித்தியாசங்கள் ஏற்படுமென நிபுணர்கள் குழு கூறிய ஆலோசனைக்கு அமையவே பொதுவான முறைமையின் கீழ் இஸட் புள்ளி மதிப்பிடப்பட்டது.

இஸட்புள்ளி விவகாரம் தொடர்பில் உயர்நீதி மன்றில் வழக்குத் தொடுத்தவர்கள் பரீட்சைப் பெறுபேறுகளை இரத்துச் செய்யுமாறு கோரிய போதும் அதனை நிராகரித்த நீதிமன்றம் இருபாடத் திட்டங்களுக்கும் வெவ்வேறாக இஸட்புள்ளிகளை கணித்து வெளியிடுமாறு பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு உத்தரவிட்டுள்ளது.- என்றார். (ச-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆராதனையில் ஈடுபட நேரத்தை ஒதுக்குங்கள்

இன்று சமயத்துக்கு ஒவ்வாத விடயங்கள் சமூகத்தில் மலிந்துவிட்டன. மாணவர்களுக்கு பாடசாலையில் சமயம் ஒரு பாடமாகப் போதிக்கப்பட்டாலும் அது அவர்களது வாழ்க்கைக்கு எந்தளவுக்கு உதவுகின்றது என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

சமய நிகழ்வுகளில் மாணவர்கள் பங்கு கொண்டாலும் பெரும்பாலான மாணவர்கள் அதனை ஒரு விழாவாகவே கருதுகின்றனர். அந்த நிகழ்வுகளின் அலங்காரச் செயற்பாடுகளில் மட்டும் அக்கறை காட்டுகின்றனரே தவிர அங்கே இடம்பெறும் ஆராதனைகளில் அக்கறையுடன் பங்குபற்றாத நிலைமைகளையே நாம் காணமுடிகின்றது.

இதேபோன்று சமூகத்தில் அதிகளவான மக்கள் ஒன்று கூடுகின்ற சில சமய விழாக்களை சிலர் பொழுது போக்கிற்காக மட்டுமே பயன்படுத்துகின்ற தன்மை சமூகத்திலும் அதிகரித்து விடுகின்றது.

சமயத்தினூடாகவே எமது வாழ்க்கையை நாம் சீரானதாகவும் சிறப்பானதாகவும் அமைத்து செம்மையான வாழ்க்கையை இவ்வுலகில் வாழமுடியும் என்ற உண்மையை நாம் முதலில் உணர்ந்து கொள்ளவேண்டும். அத்துடன் தினமும் சமயச் செயற்பாட்டிற்காக குறிப்பிட்டளவு நேரத்தைச் செலவு செய்ய நாமும் பழகி எமது பிள்ளைகளுக்கும் அவற்றைப் பயிற்றுவிக்கவேண்டும்.

நன்றி:- ஞானச்சுடர்

## ஞானக்கதிர்

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூலை 6

சித்தங்கேணி ஸ்ரீநாக கன்னியம்பாள் ஆலய மகாகும்பாபிஷேகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.45 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதன் ஆரம்ப கிரியைகள் கடந்த 21 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. இன்று வெள்ளிக்கிழமை எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும். (வ-14)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 6

அகில இலங்கை யாழ்.நல்லூர் நாவலர் வீதியில் அமைந்துள்ள சீரடிசாயி மந்திரின் நூதன மகாகும்பாபிஷேகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதன் ஆரம்ப கிரியைகள் நேற்று வியாழக்கிழமை காலை 7மணிக்கு ஆரம்பமாகின.

இன்று வெள்ளிக்கிழமையும் மறுநாள் சனிக்கிழமையும் எண்ணெய்க் காப்பு, பால்காப்பு சாத்துதல் நிகழ்வும் இடம்பெறும். (வ-14)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 6

உடுவில் கிழக்கு கற்பகப்பிள்ளையார் கோயிலின் பஞ்சகுண்ட புனராவர்த்தன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை9.30 மணி தொடக்கம் 10.40 மணிவரை நடைபெறவுள்ளது. (வ)

* * *

வடமராட்சி, ஜூலை6

புலோலி, குரும்பசிட்டி ஸ்ரீ காளிகா சமேத ஞானவைரவ கோயில் வருடாந்த பொங்கல் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை இரவு ஆரம்பித்து நாளை சனிக்கிழமை பகல் விசேட பூசை, வழிபாட்டுடன் நிறைவடையும். (வ-8)



(T/1238) (2-22-7)
யாழ்.நகர் 2G, ஸ்ரான்லி வீதி, 021-2225677
சாவகச்சேரி கட்டுக்காணி வீதி 021-2270267
நெல்லியடி கொடிகாமம் வீதி 021-2262399

## தென்மராட்சியில் டெங்கு ஒழிப்புச் செயற்பாடு

தென்மராட்சி, ஜூலை 6

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் தேசிய நுளம்பு ஒழிப்பு செயற்றிட்ட காலத்தில் தென்மராட்சியில் பல் வேறு செயற்பாடுகளை நடத்தி வருகின்றனர்.

பிரதேசத்தில் உள்ள அனைத்துப் பாட சாலைகளிலும் மாணவர்களிடையே விழிப் புணர்வு கருத்தரங்குகளும் சிரமதானங்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

அத்துடன் சாவகச்சேரி, கொடிகாமம் பொலிஸ் நிலையங்களின் சூழல் பாதுகாப்பு பொலிஸார் அந்தந்தப் பிரிவு படையினர், உள்ளூராட்சி சபையினர் ஆகியோருடன் இணைந்து வீடுகள் வர்த்தக நிலையங்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் அலுவலகங்கள், வங்கிகள் போன்றவற்றில் டெங்கு ஒழிப்பு தொடர்பான பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த இரண்டாம் திகதி வர்த்தக நிலையங்கள் மீது நடத்தப்பட்ட திடீர் பரிசோதனையின்போது நுளம்பு உற்பத்திக்கு ஏதுவான பொருள்களை வைத்திருந்த இரண்டு வர்த்தகர்கள் மீது நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். (ம-9)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**செல்லம்மா கனகரத்தினம்**

மலர்வு 07★05★1935
உதிர்வு 06★06★2012

என் அருமை அம்மாவே!
எத்தனை நாள்கள் சென்றாலும்
உங்கள் பசுமையான நினைவுகள்
என்றும் எம்மை விட்டு அகலாது

கடந்த (06.06.2012) புதன்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்ப விளக்கின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு இன்று (06.07.2012) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும்.

இதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் மரணச் செய்திகேட்டு ஆறுதல் கூறியோருக்கும், உடனிருந்து தேற்றியோருக்கும், இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பெரிய மதவடி,
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.
(20103) (43.22.7)
**குடும்பத்தினர்**

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியரான
திருமதி நிசந்தினி விமலேந்திரன்
அவர்களின் அன்பு மாமியார்
**அமரர் செல்லம்மா கோபாலன்**
அவர்கள் இறையடி சேர்ந்ததையிட்டு
அமரருக்கு எமது அஞ்சலிகளைச்
செலுத்துகின்றோம்.


யா/ஆனைப்பந்தி
மெ.மி.வித்தியாலயம்.
**பாடசாலைச் சமூகம்.**
(20097) (2-22-7)

## அதிஷ்ட இலாபச் சீட்டிழுப்பு திகதி மாற்றம்

யாழ்.மா.சி.க.கூ.சமாச ஊழியர் சி.க.கூ
சங்கத்தால் 07.07.2012 அன்று நடத்தப்பட
இருந்த அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு
தவிர்க்கமுடியாத காரணத்தால் எதிர்வரும்
04.08.2012 அன்று நடத்தப்படும் என்பதை
அறியத்தருகின்றோம்.

(சி/1239) (2-22-7)
**- செயலாளர்.**

## 21 ஆம் ஆண்டில் நினைவு கூருகிறோம்



அமரர்
**வேலாயுதபிள்ளை செல்வரட்ணம்**
(பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்)

திதி: 06.07.2012

மலர்வு 25★02★1935
உதிர்வு 30★06★1991

அப்பா நீங்கள் எங்களை விட்டுச் சென்று
ஆண்டுகள் இருபத்தொன்று போனாலும்
இன்னும் நாங்கள் உங்கள்
இனிய நினைவுகளுடன் வாழ்கின்றோம்.

புகையிரத நிலைய மக்கள்,
[illegible] துவாரு,
[illegible]
**மனைவி, பிள்ளைகள்,
மருமகன், மருமகள்மார்,
பேரப்பிள்ளைகள்.**
([illegible]45.6.22)

## தொழிற் பயிற்சி

தென்மராட்சி, ஜூலை 6

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்டப் பிரிவினரால் பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்தவர்களுக்கான தொழிற் பயிற்சி வகுப்புகளை இம்மாத நடுப்பகுதியில் கைதடி- நுணாவில் அறவழி பயிற்சி நிலையத்தில் ஆரம்பிக்கவுள்ளனர்.

கணினி மென்பொருள், கணினி வன்பொருள், தையல், அழகுக்கலை, அலுமினியம் பொருத்துதல் போன்ற பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

இப்பயிற்சி வகுப்புக்களில் பங்கேற்கவுள்ள யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 18 இற்கும் 35 வயதுக்கும் உட்பட்ட இளைஞர் யுவதிகள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் அறவழி செயலகத்தில் பதிவு செய்யுமாறு தென் மராட்சி பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் [illegible] தெரிவித்துள்ளார். (ம-9)

## மரண அறிவித்தல்

### தங்கராசா அன்னம்மா (சங்கானை)



நிற்சாமம், சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராசா அன்னம்மா 02.07.2012 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசை-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னர் -நாகி தம்பதியரின் அன்பு மருமகளும், தங்கராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான முருகேசு, மாணிக்கம், நாகமுத்து, சோதிராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வரத்தினம், சர்வானந்தராசா, அருட்கனராசா, வன்னராசா, பஞ்சராசா, மனோறஞ்சிதம், விஜயராசா, நேசராசா, சற்குணராசா, மனோறசனி ஆகியோரின் பாசமிகு தாயாரும், அன்பரசி, விஜயநிர்மலா,கெங்காதேவி, அகிலா, தவச்செல்வி, தர்மகுலசிங்கம், கவிதா, தமிழ்ச்செல்வி, றஜனி, செந்தில்குமார் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று ( 06.07.2012) வெள்ளிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நிற்சாமம்,
சங்கானை.
(20096)(5-7-22)
**தகவல்:
குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதற்கு அடம்பிடிக்கிறார்?

இந்தப் போட்டியில் அவள் எப்படியும் கலந்து கொள்ள வேண்டும்'' இது அவளின் பெற்றோர்களின் விருப்பம் மட்டுமல்ல அவளின் விருப்பமும்தான். "ஆங்கிலப் பாடத்தில் வலு சுட்டி என்றபடியால் ஆங்கிலப் போட்டி என்றால் உடனே முன்னுக்குச் சென்று விடுவாள். பறக்க வேண்டிய வயதில் கால்கள் கட்டப்பட்டது போல, ஒவ்வொரு வினாடியும் அந்தரத்தில் நிற்பது போல் அவள் வாழ்வு உருளுகிறது. ஆனாலும் கல்வியில் முன்னுக்கு வந்து பெற்றோரின் கஷ்டங்களை இல்லாமல் செய்ய வேண்டும் என்று அவள் மனது ஒவ்வொரு நாள் கழியும் மணிக்கூட்டுக் கம்பி போலச் சுற்றிக் கொண்டு துடித்துக் கொண்டு இருக்கிறது......

அவள் உலகம்தான் பெற்றோரின் வாழ்வு, இறுக்கப்பட்டிருக்கும் இதயத்தின் சுமைகளில் அவள் புன்னகையில் மறைந்து கொள்ளும் பெற்றோரின் வலிகள், அவளுக்குத் தெரியாத படி தங்களுக்குள்ளே பூட்டி எரிய விட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சமூகம் அவளின் கல்வி அறிவை விருத்தி செய்ய உதவுமா? என்ற நினைப்பும் இல்லாத வயதில், எப்படியாவது படிக்க வேண்டும் என்ற சிந்தனையில் மூழ்கியிருக்கிறாள். அது சம்பந்தமாகவே தனது தேடலையும் மேற்கொண்டு வருகிறாள் ..........

ஆனால் என்ன போட்டியில் கலந்து கொள்ள வேண்டும் என்ற அவளின் ஊக்கத்துக்கு அவள் குடும்பம் வசதி வாய்ந்த குடும்பமாக இல்லாததால் அவளின் திறமையை வெளிக்கொணர்வதில் தடங்கல் ஏற்பட்டு விடுமோ என்று பெற்றோர் தவித்தனர். அவளின் எதிர்காலம் தான் பெற்றோரின் கனவாக இருந்தது. போரால் இடம்பெயர்ந்து அனைத்தையும் இழந்து மீளக்குடியமர்ந்த அந்தக் குடும்பம் அன்றாட வாழ்க்கையை நகர்த்திச் செல்வதற்கு பெரும்பாடு படுகிறது. இதற்கிடையிலும் அவள் படித்தால்தான் நல்ல நிலைக்கு வருவாள், அப்படி வந்தால் தான் தமது குடும்பம் வசதி வாய்ப்புள்ள குடும்பமாக மாறும் என்று பெற்றோர் நினைக்கின்றனர்.............

எத்தனை துயர்கள் வந்தாலும், அத்தனையையும் சுமந்து கொண்டு பெற்றோர் அவளின் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்கள். ஆனால் என்ன பெற்றோர் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தால் மட்டும் போதுமா? கல்வி அதிகாரிகளும் அதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் அல்லவா .

பதவி கிடைத்து விட்டது என்று கண்மூடி இருக்கக் கூடாது. திறமையான பிள்ளைகளின் கல்விக்குத் தடையாக எது இருக்கிறதோ அதனை இல்லாமல் செய்வதில் கல்வி அதிகாரிக்கும் பொறுப்பு உண்டு அல்லவா.

மடு கல்வி வலயம் ஆங்கில தினப் போட்டி ஒன்றைக் கடந்த ஜூன் மாதம் 19 ஆம் திகதி நடத்தியுள்ளது. இந்தப் போட்டியை அந்தக் கல்வி வலயத்தின் கீழ் உள்ள பாடசாலை ஒன்றில் நடத்தியுள்ளது. இந்தப் போட்டிக்கு 30 கிலோ மீற்றர் தூரத்தில் இருந்தும் மாணவர்கள் பல கஷ்டத்தின் மத்தியில் பங்களிப்புச் செய்தார்கள். தனக்கேற்ற இடத்தில் இந்தப் போட்டியை நடத்திய கல்வி அதிகாரி போட்டியில் பங்குபற்றவரும் மாணவர்களைப் பற்றி ஒரு சிறு துளியளவும் கவனத்தில் எடுக்கவில்லை என்றால் பாருங்களேன்........

அந்த வலயத்தில் உள்ள எல்லாப் பாடசாலை மாணவர்களும் சிரமம் இல்லாது போட்டியில் கலந்து கொள்வதற்கு ஏற்பாட்டைச் செய்திருக்கலாம். அதாவது மத்தியில் உள்ள ஒரு பாடசாலையில் போட்டியை நடத்தியிருக்கலாம். அப்படி நடத்தி இருந்தால் பெரும் கஷ்டத்தின் மத்தியில் 30 கிலோ மீற்றர் தூரத்துக்குப் பாடசாலையில் இருந்து வந்த மாணவர்கள் நன்மை அடைந்திருப்பார்கள். இதனை அந்தக் கல்வி அதிகாரிக்குச் சொல்லிக் கொடுக்கவா வேண்டும். ஒரு திறமையான மாணவன் அவனது குடும்பம் பொருளாதார மட்டத்தில் பின் தங்கிக் காணப்படும் போது அந்த மாணவன் எத்தனை பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பான் என்பது தெரியாதவர்கள் அதிகாரியாக இருந்து என்ன பயன்?

அவள் இந்தப் போட்டியில் கலந்து கொள்ள வேண்டும் என்று பல ஆசிரியர்கள் உந்து சக்தி கொடுத்திருக்கிறார்கள். ஏனெனில் அந்தப் பாடசாலையில் அவள் ஆங்கிலப் பாடத்தில் கெட்டிக்காரி என்றபடியால் போட்டியில் கண்டிப்பாகக் கலந்து கொள்ள வேண்டும் என்று ஆசிரியர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவள் தனது பெற்றோரிடம் போட்டிக்குச் செல்வதற்குத் தேவையான போக்குவரத்து, உணவு செலவுக்கு பணம் கேட்டிருக்கிறாள் . அவளின் பெற்றோரோ பிள்ளை போட்டியில் கலந்து கொள்ளவேண்டும் என்ற நினைப்பில் பணம் தரலாம் என்று சொல்லி இருக்கினம்.

போட்டிக்குச் செல்வதற்கான நாளும் வந்தது. பெற்றோரோ கடனைப்பெற்று பிள்ளையின் கையில் பணத்தைக் கொடுத்து வழியனுப்பி வைத்தனர். 100 ரூபாய்க்கே கஷ்டப்படும் அவளின் குடும்பம் எப்படித்தான் இந்தப் பணத்தை புரட்டி எடுத்தனரோ கடவுளுக்குத்தான் தெரியும். இந்தப் போட்டியில் தனது பிள்ளையும் கலந்து கொள்வதற்காகப் பெற்றோர் பட்ட கஷ்டம் வார்த்தைகளால் சொல்ல முடியாது.

அவள் போட்டி நடக்கும் 30 கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கும் பாடசாலைக்குச் செல்வதற்காக ஒரு பஸ்ஸில் ஏறுகிறாள். வீதியோ குன்றும் குழியுமாகக் காட்சி அளிக்கிறது. அந்த வீதியூடாக அந்த பஸ் பயணிக்கிறது. கடலில் படகு ஆடி ஆடிச் செல்வது போல் பஸ்ஸும் செல்கிறது. புழுதிகள் பஸ்ஸை மூட அந்தக் குளியலில் அந்த பஸ்ஸில் பயணம் செய்யும் அனைத்து மாணவர்களும் குளிக்கின்றனர். இவளும் அந்தப் புழுதிக் குளியலில் குளித்து பாடசாலை வெள்ளை சீருடை மண்ணிறமாக மாறிக் காட்சி அளிக்கிறது.

போட்டி நடைபெறும் பாடசாலைக்கு ஒருவாறு வந்து இறங்கிய மாணவர்களில் இவளும் ஒருத்தியாய் நிற்கிறாள். வந்து இறங்கிய மாணவர்களின் கோலத்தைப் பார்த்தவர்கள் என்ன நினைத்தார்கள் ? அந்த வலயக் கல்வி அதிகாரியே ஒன்றுமே செய்ய முடியாமல் இருக்கும் போது , வேறு எவரால் என்ன செய்ய முடியும். போட்டியில் கலந்து கொண்ட அவள் போட்டி முடிவடைந்த சந்தோசத்தில் மீண்டும் தனது 30 கிலோ மீற்றர் தூரத்தைத் தாண்டியே வீட்டுக்கு வந்து சேர்ந்தாள்.

### கோப்பாய் சண்முகம்
### கதையோடு செய்தி

முன்னர் இடம்பெற்ற பல போட்டிகளும் இதே பாடசாலையில் நடைபெற்றதால் பல சிரமங்களை எதிர்கொண்ட மாணவர்கள் பல முறை போட்டி நடைபெறும் இடத்தை மாற்றச் சொல்லிக் கேட்டும் அந்த அதிகாரி காதில் வாங்கியதாக இல்லை. தான் நினைத்த இடத்திலேயே போட்டிகளை நடத்துவேன் என்று ஒற்றைக்காலில் நின்றாராம். அந்தத் திறமையான மாணவர்களின் கஷ்டங்களை மனதில் கொண்டாவது இந்த மாணவர்களின் எதிர்காலம் சிறந்து விளங்க நடவடிக்கை எடுப்பாரா. இந்த அதிகாரி காலத்திலாவது அந்தக் கல்வி வலயத்துக்குக் கீழ் உள்ள பின்தங்கிய பாடசாலை மாணவர்கள் பயன் பெறுவார்களா?


## கலந்துரையாடல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரி இறுதிவருடப் பரீட்சை முடிவுகளை எதிர்நோக்கியிருக்கும் மாணவர்கள், பட்டதாரிப் பயிலுனர் நியமனம் தொடர்பாகக் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்வதற்காக 07.07.2012 (சனிக்கிழமை) காலை 9.00 மணிக்கு புதிய உயர் கல்லூரி மண்டபத்தில் ஒன்றுகூடுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பட்டதாரி மாணவர் ஒன்றியம்,
புதிய உயர்கல்லூரி, யாழ்ப்பாணம்.
(F/1334)(2-22-7)

## பணியாளர் தேவை

யாழ். நகரில் இயங்கும் மொத்த வியாபார நிறுவனத்திற்கு கீழ்காணும் பதவிக்கு பணியாளர்கள் தேவை. விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 15.06.2012 இற்கு முன்பாக தங்கள் சுயவிவரக்கோவையை கீழ் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

1) விநியோக பையன்கள் (Delivery Boys)

**DSI மொத்த விற்பனை நிலையம்**
**154, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்**
(சி/1232)(6-7-8)

## கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம் தொழில் நுட்பவியல் கல்லூரியினால் தகவல் தொடர்பாடல், தொழில் நுட்பம் மற்றும் தொடர்பாட லில் ஆங்கிலம் ஆகிய கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்தக் கற்கை நெறிக்கு விண்ணப்பிப்பவர் க.பொ.த. சாதாரண தரத்தில் கணிதம் மற்றும் ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் சித்தியடை திருத்தல் வேண்டும். தகுதியுடைய விண்ணப்பதாரிகள் இன்று வெள்ளிக் கிழமை யாழ். பிறவுண் வீதியில் அமைந்துள்ள தொழில் நுட்பவியல் கல்லூரியில் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம். (வ-14)

## 25 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர் **பிலிப்பு சூசைப்பிள்ளை**
(பிரபல பனை மர வியாபாரி)
மண்ணுலகில் விண்ணுலகில்
19★03★1925 06★07★1987
ஆண்டுகள் இருபத்தைந்து ஆனதய்யா
ஆறவில்லை எங்கள் உள்ளம்
உம் திருவுருவம் எம் நினைவில்
உங்கள் கனவுகளை சுமந்து
வாழ்கின்றோம்.
என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.
பருத்தித்துறை வீதி,
நெல்லியடி.
(சி/1233)(45.6.7)

## வீடு வாடகைக்கு

மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டையில் சிறிய குடும்பத்துக்கு ஏற்ற தனிக் குசினி, பாத் ரூம் போன்ற சகல வசதியுடன் கூடிய சிறிய வீடு வாடகைக்குண்டு. மாணவர்களும் தொடர்பு கொள்ளலாம். (20095)(2-7-22)
தொடர்புகளுக்கு: 021 221 3021, 021 492 3338

## 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
25 ★ 09 ★ 1939



மறைவு
01 ★ 07 ★ 1999

அமரர் **கந்தையா குமாரசாமி**
(முன்னாள் பணியாளர், நல்லூர், ப.நோ.கூ. சங்கம்)
திதி: அபர பக்க திருதியை
பதின்மூன்று ஆண்டுகள்
பறந்தோடிச் சென்றாலும்
பசுமையான உங்கள் நினைவுகள்
என்றும் எம்மை விட்டகலாது
இல. 99,
பூதவராயர் வீதி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.
என்றும் உங்கள் நினைவுகளுடன்
**குடும்பத்தினர்.**
(20...)(45.6.7)

## பெயர் மாற்றம்

அண்ணமார் கோயிலடி, ஏழாலை கிழக்கு, ஏழாலையைச் சேர்ந்த கணபதிமுருகையா ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து கணபதி பாலசிங்கம் என மாற்றம் செய்வதுடன் இன்றிலிருந்து சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என்பதைச் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.
(20101)(2-7-22) - **க.பாலசிங்கம்.**

## 1st Com, G.A.Q

**யாழ்ப்பாணம் பேராதனை (வெளிவாரி)**

★A/L இல் கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய பிரிவுகளில் மூன்று பாடம் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆவர்.

★ புதிய பிரிவுகளுக்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

★இவற்றுக்குரிய பதிவுகள் நடைபெறுகின்றன.

குறிப்பு:- வெளிமாவட்ட மாணவர்களுக்கான தங்குமிட வசதி இலவசம்.

விவரங்களுக்கு
**எஸ்.அருள் நங்கை (நிர்வாகி)**
**புதிய உயர்கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(F/1230)(2-6-9)

## தவறிவிட்டது

தேவராஜா யங்கஸ்ரன் என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் NP HG - 7907 இலக்கமுடைய மோ.சைக்கிள் காப்புறுதிப் பத்திரம், வரிப்பத்திரம் என்பன 23.06.2012 கீரிமலை பொன்னாலை வீதிக்கும் அளவெட்டி [illegible] இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் [illegible] இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (200..)(2-7-22)
தொடர்புகளுக்கு: 0774106389, 0779919533


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பறந்தபடி சட்டிங் கூகுள் சாதனை

கூகுள் நிறுவனத்தின் Project Glass என்னும் திட்டத்தைப் பற்றி அவ்வப்போது சில தகவல்கள் வந்தாலும் அவை பிரபலமடையவில்லை.

ஏனெனில் இந்தத்திட்டம் குறித்து நம்பு வதற்கும் பலர் மறுத்தனர்.

ஆனால் இன்று கூகுள் தனது Project Glass ஐக்கொண்டு வான்வெளியில் பறந்தபடி [sky diving] வீடியோ அரட்டையில் [google + Han gout] இல் ஈடுபட அதை நேரடியாக டெமோ காட்டியும் அசத்தியுள்ளது.


இந்தச்செயல் அனைவரையும் ஆச்சரியத்தில் மூழ்கடித்துள்ளது.

# கூகுளின் 'லிகோ'

LEGO எனப்படும் குற்றிகளைப் பயன் படுத்தி உருவங்களை இணையத்தளத்தில் உருவாக்கும் புதிய முறையை கூகுள் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த நவீன தொழில்நுட்பமானது கூகுள் குரோம் உலாவிகளில் மட்டுமே செயற்படக் கூடியதாகக் காணப்படுவதுடன், நவீன இணையத் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு முப்பரிமாணச் சூழலில் விரும்பிய பொருள்களை உருவாக்கிக்கொள்ளவும் முடியும்.

இவ்வாறு உருவாக்கப்பட்ட வடிவத்தினை பின்னர் எமது வசதிக்கேற்ப தனித்தனிப் படங்களாக மாற்றி மின்னஞ்சலுக்கு அனுப்புவதன் மூலம் குறித்த உருவத்தை நாம் தரவிறக்கம் செய்து கொள்ளவும் முடியும்.






# முதலாவது அப்பிள் அதிக தொகைக்கு ஏலம்

அப்பிள் நிறுவனத்தின் தலைவரான ஸ்டீவ் ஜொப்ஸ் முதன் முதலாக உருவாக்கிய அப்பிள் 1 கணினி 3,74,500 அமெரிக்க டொலருக்கு ஏலம் போயுள்ளது.

இருந்தாலும் ஆயிரம் பொன் இறந்தாலும் ஆயிரம் பொன் என்ற பழமொழி யாருக்குப் பொருந்துகிறதோ இல்லையோ ஸ்டீவ் ஜொப்ஸ்க்கு பொருந்தும்.

அப்பிள் நிறுவனத்துக்காக அவர் முதன் முதலாக உருவாக்கிய கணினி அண்மையில் நியூயோர்க் நகரில் ஏலம் விடப்பட்டது. அது 3,74,500 டொலருக்கு ஏலம் போனது.

அப்பிள் 1 என்ற அந்தக் கணினி 1976ஆம் ஆண்டு 666.66 டொலர் செலவில் தயாரிக்கப்பட்டது. அப்பிள் நிறுவனத்தை ஆரம்பித்த ஸ்டீவ் ஜொப்ஸ் தான் இதை உருவாக்கினார்.

1977ஆம் ஆண்டு அப்பிள் 2 கணினிகள் அறிமுகம் செய்யப்பட்ட உடன் அப்பிள் 1 விற்பனையை நிறுத்தி விட்டனர். ஆனால் 35 வருடங்களைத் தாண்டியும் அந்த கணனி பழுதில்லாமல் வேலை செய்கிறது.

# 'கூகுள் பிளஸ் 1' புதிய பட்டன் அறிமுகம்

இணையத்தில் கிடைக்கும் தகவல்களை இலகுவாக உங்கள் கூகுள் பிளஸ் கணக்கில் பகிர உதவுவது +1 பட்டன்.

தற்போது இந்த கூகுளின் +1 பட்டனில் RECOMMENDED புதிய வசதியை அறிமுகப்படுத்தி உள்ளனர்.

இனி நீங்கள் ஏதாவது ஒரு தளத்தில் உள்ள +1 பட்டனில் மீது உங்கள் மவுஸ் கர்சரை நகர்த்தினால் அந்தத் தளத்தின் ஏனைய பிரபலமான இடுகைகளையும் நீங்கள் காணலாம். இந்த வசதியை கூகுள் பிளசில் உறுப்பினர் இல்லாதவர்களுக்கும் பார்க்க முடியும்.

இந்த புதிய வசதியை தற்பொழுது Preview Group பயனர்களுக்கு மட்டுமே வழங்கி உள்ளனர். உங்களுக்கு இந்த வசதி தெரிய வேண்டுமெனில் இந்தக் குழுவில் சேர்ந்து கொள்ளவும். இன்னும் சில வாரங்களில் இந்த வசதி அனைத்துப் பயனாளர்களுக்கும் வர இருக்கிறது.

இந்த வசதிக்காக நீங்கள் எதுவும் செய்ய வேண்டியதில்லை. கூகுள் +1 பட்டனை உங்கள் தளத்தில் இணைத்திருந்தாலே போதும் இந்த வசதி தானாகச் செயற்படத் தொடங்கி விடும்.

# பார்க்கும் தளம் பாதுகாப்பானதா?




இன்றைய காலத்தில் பல்கிப் பெருகிவரும் இணையப் பாவனைகளின் அடிப்படையில் இணையத்தளங்களின் எண்ணிக்கையும் அசுர வேகத்தில் அதிகரித்து வருகின்றது.

இதனால் பல நன்மைகள் கிடைக்கின்றபோதிலும் மறைமுகமான தீமைகளும் காணப்படவே செய்கின்றன.

குறிப்பாகப் பணக்கொடுக்கல் வாங்கல்களை இணையத் தளம் மூலமாக மேற்கொள்ளும்போது சில போலியான இணையத் தளங்கள் பணப்பறிப்பை மேற்கொள்ளுகின்றன. அதே போன்று கணினி வைரஸ்களைப் பரப்பும் செயற்பாடுக ளையும் மேற்கொள்ளுகின்றன.

எனவே குறித்த இணையத்தளம் ஒன்று பாதுகாப்பானதா என்பதை அறிந்து பின்னர் தொடர்ந்து அவ்விணையத்தைப் பயன்படுத்துவது சாலச்சிறந்ததாகும்.

இவ்வாறு இணையத்தளம் ஒன்றின் பாதுகாப்புத் தன்மையை அறிந்துகொள்வதற்காக urlvoid.com எனும் இணையத்தளம் உதவுகின்றது.

இந்த இணையத்தளத்துக்குச் சென்று பரிசோதனை செய்ய வேண்டிய இணையத்தளத்தின் முகவரியை(url) உள்ளீடு செய்து Scan Now என்ற பொத்தானை அழுத்தியதும் சிறிது நேரத்தில் அந்த இணையம் தொடர்பான தரவுகள், பாதுகாப்புத்தன்மை போன்ற தகவல்கள் அனைத்தும் கிடைக்கும்.





வீடியோக்களின் ஜாம்பவனாகத் திகழ்கிறது யூடியூப். இதில் உங்களுக்குப் பிடித்த வீடியோக்களில் இருந்து ஓடியோவை மட்டும் தனியாக பிரித்தெடுக்கலாம்.

இதற்கு எந்த மென்பொருளையும் நிறுவ வேண்டிய அவசியம் இல்லை. http://www.listentoyoutube.com/ என்ற தளத்துக்குச் சென்று உங்களுக்குத் தேவையான யூடியூப்பின் முகவரியை கொடுத்தால்போதும்.

இதன் பின் பதிவிறக்கம் என்று தோன்றும், இதை கிளிக் செய்து உங்கள் கணினியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். அதன்பின்னர் உங்களது யூடியூப் எம்.பி3 வடிவில் சேமிக்கப்பட்டு விடும்.

# 'பேஸ்புக்' டிப்ஸ்




முன்னணி சமூக இணையத்தளமான பேஸ்புக்கில் உங்களால் கொடுக்கப்பட்டுள்ள தனிப்பட்ட இரகசியத் தகவல்கள் உட்பட்ட அனைத்து தகவல்களையும் இழக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் காணப்படுவதால் அவற்றைப் பேக்கப் செய்து [தரவிறக்கம்] வைத்திருப்பது அவசியம் ஆகும்.

இவ்வாறு தனிப்பட்ட தகவல்களைத் தரவிறக்கும் வசதி பேஸ்புக் தளத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. பின்வரும் படிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

முதலில் Account Settings menu ஐ திறந்து அங்கு காணப்படும் Download a copy of your Facebook data என்பதனைத் தெரிவு செய்யவும். அதனைத் தொடர்ந்து Start My Archive என்பதைத் தெரிவு செய்யவும்.

குறித்த செயன்முறை ஆரம்பிக்கப்பட்டதும் ஒரு பாதுகாப்புச் செய்தி பெறப்படும். பின்னர் உங்கள் மின்னஞ்சல் முகவரியைப் பயன்படுத்தி தகவல்களைத் தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.

# கூகுள் குரோமின் புதிய பதிப்பு

உலகம் முழுவதும் சுமார் 360 மில்லியன் மக்களை தன்னகத்தே கொண்டுள்ள கூகுள் குரோம், தற்போது சில பிழைகளை நீக்கி புதிய பதிப்பை வெளியிட்டுள்ளது. இதன் புதிய பதிப்பு உங்களது குரோம் உலாவியில் பதிவேற்றம் ஆகவில்லை என்றால், சுலபமாகத் தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

குரோம் உலாவியைத் திறந்து வலது ஓரத்தில் உள்ள ஸ்பேனர் போன்ற ஐகானை கிளிக் செய்யவும்.உங்களுக்கு ஒரு மெனு ஓபன் ஆகும் அதில் உள்ள About Google Chrome என்பதை கிளிக் செய்யவும்.

About Google Chrome என்பதை கிளிக் செய்தவுடன் ஒரு சிறிய விண்டோ திறந்து குரோமின் புதிய பதிப்பு தானாகவே நிறுவத் தொடங்கும். ஒரு சில நிமிடங்களில் உங்கள் குரோம் உலவி அப்டேட் ஆகி ஒரு விண்டோ வரும் அதில் உள்ள Relaunch என்ற பட்டனை அழுத்தினால் போதும் உங்களின் குரோம் உலவி reload புதிய பதிப்பு பதிவேற்றம் ஆகிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்பு முகாம்களை மூடக்கோரி 'நாம் தமிழர்' போராட்டம்

சென்னை, ஜூலை 6

சிறப்பு முகாம்களை மூடக்கோரி எதிர்வரும் 10 ஆம் திகதி செங்கல் பட்டு சிறப்பு முகாமை முற்று கையிடும் போராட்டம் நடத் தப்படவுள்ளதாக நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ள தாவது:-

இலங்கை அரசால் உருவாக் கப்பட்ட வன்னி முகாம்களுக்கு இணையான இந்த சிறப்பு முகாம் களை உடனடியாக இழுத்து மூட வேண்டும், அதில் தடுத்து வைக் கப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று கோரி எதிர்வரும் 10ஆம் திகதி செங் கல்பட்டு சிறப்பு முகாமை முற்றுகை யிட்டு போராட்டத்தில் ஈடுபடுவது என்று நாம் தமிழர் கட்சி முடிவெடுத் துள்ளது. இந்தப்போராட்டத்தில் நாம் தமிழர் கட்சியினரும், தமிழின உணர்வாளர்களும் பெருமளவுக்கு கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்-என்று அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.



சிறப்பு முகாம்களை உடனடியாக இழுத்து மூட வேண்டும், அதில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று கோரி எதிர்வரும் 10ஆம் திகதி செங்கல்பட்டு சிறப்பு முகாமை முற்றுகையிட்டு போராட்டம்.

## தமிழகத்தில் இலங்கையர் இருவர் கைது

தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகள் சில ரிடம் பணம் பெற்றனர் என்ற சந்தேகத்தில் இரண்டு இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தமிழகத் தகவல்கள் தெரி விக்கின்றன.

கைது செய்யப்பட்ட இலங்கையர்களிடம் இருந்து செய்மதி தொலைபேசி களும் கைப்பற்றப்பட் டுள்ளன.

திருகோணமலையைச் சேர்ந்த ரமேஸ் எனப்படும் 38 வயதுடைய ராமச்சந் திரன் மற்றும் 40 வய துடைய மோஹன் காந்தி ஆகியோரே கைது செய்யப் பட்டவர்கள் ஆவர்.

தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகளைப் படகு மூலம் ஆஸ்திரேலிய கிறிஸ்மஸ்தீவுக்கு அழைத் துச் செல்ல இவர்கள் இரு வரும் முயற்சி செய்தனர் என்று சந்தேகம் தெரிவிக் கப்பட்டுள்ளது. (வ)



இலங்கை வங்கி தனது வாடிக்கையாளர் சேவை நிலையத்தை யாழ். மாவட்டத்தில் 11 இடங்களில் நேற்று முன்தினம் திறந்து வைத்தது.

சிறுப்பிட்டியில் அச்சுவேலி வாடிக்கையாளர் கிளையை இலங்கை வங்கியின் தலைவர் காமினி விக்கிரமசிங்க திறந்து வைத்த பின்னர் வாடிக்கையாளர் ஒருவரிடம் இருந்து முதல் வைப்பைப் பெற்றுக் கொள்கிறார். (த-13)

## இலங்கையைப் பூர்விகமாகக் கொண்ட அமெரிக்க தமிழ் இளைஞர் சாதனை

இலங்கையைப் பூர்விக மாகக் கொண்ட அமெரிக்க தமிழ் இளைஞர் ஒருவர் புதிய கண்டு பிடிப்பு ஒன்றின் மூலம் சாதனை படைத்துள்ளார்.

அண்மையில் நடை பெற்ற றியோ 20 மாநாட்டில் இந்தத் தமிழ் இளைஞரின் கண்டுபிடிப்பு காட்சிப் படுத்தப்பட்டிருந்தது.

இலங்கையைப் பூர்விக மாகக் கொண்ட அமெரிக்கத் தமிழரான சயாந்த் சின்ன ராசா என்ற 18 வயது இளை ஞரே இவ்வாறு சாதனை படைத்துள்ளார். சயாந்த் நீரை இலகுவில் சுத்திகரிக் கக் கூடிய கருவியொன்றைக் கண்டுபிடித்து சாதனை படைத்துள்ளார்.


ஒரு நிமிடத்தில் ஒரு சைக்கிள் டயருக்குக் காற்று நிரப்பும் அழுத்தத்தில் 15 கலன் நீரை சுத்திகரிக்கக் கூடிய கருவியொன்றை சயாந்த் தயாரித்துள்ளார்.

இந்தக் கருவி அபிவிருத்தி அடைந்த நாடுகளில் மிகவும் எளிதில் பயன்படுத்த முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கண்டுபிடிப்புக்கு அவரது கல்லூரி நண்பர் லூசியா ஹெர்மன் ஒத்துழைப்பு வழங்கியுள்ளார். (வ)



ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலய தேர்த் திருவிழாவில் சகோதரர் இருவர் தமது நேர்த்தியை நிறைவேற்றுவதற்காக தூக்குக் காவடியில் ஆல யத்தை நோக்கிச் செல்கின்றனர். (வ-100)





புற்றளை சித்திவிநாயகர் ஆலய வருடாந்த தீர்த்தத் திருவிழாவில் விநாயகப் பெருமான் தீர்த்தமாட எழுந்தருளி வருகிறார். தீர்த்தக் கேணியில் தீர்த்த மாடுகிறார். (வ-8)

## உரும்பிராய் செரண்டிப் நடத்திய பேச்சுப்போட்டி

உரும்பிராய் செரண்டிப் இல்லத்தால் வருடாந்தம் நடத்தப்படும் பெற்றோரை இழந்த மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி கடந்த மாதம் 30 ஆம் திகதி உரும்பிராய் இந் துக்கல்லூரியில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் கீழ்ப் பிரிவில் முதலாம் இடத்தை எ. வாகினி (ஏழாலை சன் மார்க்க வித்தியாலயம்) இரண் டாம் இடத்தை எஸ். டிலானி (ஏழலை சன்மார்க்க வித்தி யாலயம்), மூன்றாம் இடத்தை ஆர். அபிசனா (உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம் ஆகியோரும்-

மத்திய பிரிவில் முதலாம் இடத்தை அப்துல் சலிம் சகித்தா (புத்தூர் சோமஸ்கந்தா இந்துக்கல்லூரி), இரண் டாம் இடத்தை ஆர். பகிராஜா (பன்னாலை ஸ்ரீ கனகசபை தமிழ்க் கலவன் பாடசாலை), மூன்றாம் இடத்தை கே. வேணுகா (உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியால யம்), ஆகியோரும்- மேல் பிரிவில் முதலாம் இடத்தை ஜி. லாதினா (வேம்படி மகளிர் உயர்தரப் பாட சாலை), இரண்டாம் இடத்தை ஜே. கோபிகா (புத்தூர் சோமஸ்கந்தா இந்துக் கல்லூரி), மூன்றாம் இடத்தை ஆர். அகிலன் (வயாவிளான் மத்திய கல்லூரி) ஆகி யோரும் பெற்றுக்கொண் டனர்.

அரியகுட்டி கந்தசாமி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகச் செரண்டிப் சிறுவர் இல்ல ஸ்தாபகர் திருமதி செல்வரட்ணம் ரிஸ்ஸா கலந்துகொண்டு மாணவர்களுக்கான பரிசில் களை வழங்கினார்.(ம-14)

## வரணி சைவப்பிரகாச வித்தியாசாலை வீதிக்கு மின் வழங்கக் கோரிக்கை

வரணி,ஜூலை 6

வரணி சைவப்பிரகாச வித்தியாசாலை வீதியில் இதுவரை மின் வழங்காத பகுதிக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கும்படி வட பிராந்திய மின்சாரசபை பொதுமுகாமையாளரை கடி தம் மூலம் மாசேரி கிராம அபி விருத்திச் சங்கம் கோரியுள் ளது. அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

மேற்படி கிராமத்தின் அருகில் உள்ள வரணி வடக்கு கிராம அலுவலர் பிரிவுக்கு கடந்த வருடம் வடக்கின் வசந்தம் திட்டத் தின் கீழ் மின்சாரம் வழங்கப் பட்ட வேளை இந்தக் கிரா மத்தில் மேற்குறிப்பிட்ட வீதிக்கும் மின் வழங்க நட வடிக்கை எடுக்கப்படும் என்று கூறப்பட்ட போதிலும் இதுவரை மின்சாரம் வழங் கப்படவில்லை. இந்த வீதியில் மின் பெறக்கூடிய வகையில் பல வீடுகள் உள்ளன என்று அதில் உள்ளது. (வ-122)



நீர்வேலி தெற்கு மனோன்மணி அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற வருடாந்த ஆனிப்பொங்கல் திருவிழாவில் விசேட பொங்கல் படையல் இடம் பெறுகின்றன. (வ-17)

## கண் சத்திர சிகிச்சை முகாம்

யாழ்ப்பாணம், ஜூலை 6

திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் விழிவெண் படலத்தினால் பாதிக்கப்பட்ட கண் சத்திர சிகிச்சை முகாம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

லண்டன் மாநகரில் இருந்து வருகை தரும் கண் சத்திரசிகிச்சை நிபுணர்களால் இந்தக் கண் சத்திரசிகிச்சை முகாம் நடை பெறவுள்ளது.

ஒரேநாளில் 200 பேருக்கு சத்திர சிகிச்சையை நடத்தத் திட்டமிட்டுள்ளதால் இதற்கான பயனாளிகளைத் தெரிவு செய்யும் நடவடிக்கையை யாழ். போதனா வைத்திய சாலையின் டாக்டர் எஸ். குகதாசன் மேற் கொண்டுள்ளார்.


காரைநகர், பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேசங்களில் இருந்து தற்போது பயனாளி கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதால் ஏனைய பயனாளிகளை தெரிவு செய்யும் நிகழ்வு நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை யாழ். இந்துக் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த விழி வெண்படலத்தினால் கண்கள் பாதிப் படைந்துள்ள வறிய குடும்பங்களைச் சேர்ந்த பயனாளிகள் கலந்து பயன் பெற லாம் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள் ளனர். (வ-14)



மடுமாதா உற்சவத்தையொட்டி நவாலி சென். பீற்றர் தேவாலயத்தில் அண்மையில் இடம்பெற்ற திருப்பலி பூசையைத் தொடர்ந்து மாதாவின் திருச்சொரூபரதத்தை பெண்கள் வடம் பிடித்து வீதி வழியாக ஆலயத்திலிருந்து இழுத்து செல்கின்றனர். (வ-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சூடு பிடிக்கிறது எச்.பி.எல். கரப்பந்தாட்டம் ஜப்னா பிரண்ட்ஸ், சுப்பர் கிங்ஸ் வென்றன

பண்டத்தரிப்பு, ஜூலை 6

யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் ஏனைய விளையாட்டுக் கழகங்களுடன் இணைந்து 'உதயனி'ன் ஊடக அனுசரணையுடன் ஏற்பாடு செய்துள்ள யாழ். மாவட்டத்தின் முதலாவது எச்.பி. எல். கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் நேற்று முன்தினம் இரண்டாவது நாளாகவும் நடைபெற்றன. நேற்று முன்தினம் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் மாலை 6 மணிக்கு ஆரம்பமான முதலாவது போட்டியில் ஜப்னா பிரண்ட்ஸ் அணியும், றோயல் லீடர்ஸ் அணியும் மோதிக் கொண்டன. இரண்டாவது போட்டியில் ஜப்னா கிங்ஸ் அணியும், சுப்பர் கிங்ஸ் அணியும் விளையாடின.

**போராடி வென்றது ஜப்னா பிரண்ட்ஸ்**

ஜப்னா பிரண்ட்ஸ் அணிக்கும், றோயல் லீடர்ஸ் அணிக்கும் இடையிலான போட்டியின் முதலாவது சுற்றில் இரு அணிகளும் மாறி மாறி புள்ளிகளைப் பெற்றிருந்தாலும் இறுதி நேரத்தில் ஜப்னா பிரண்ட்ஸ் அணியினர் சிறப்பாக விளையாடி 25:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் முதல் சுற்றை தமதாக்கிக்கொண்டனர். இரண்டாவது சுற்றில் றோயல் லீடர்ஸ் அணி போராட்டத்தை வெளிப்படுத்தவில்லை. இதனால் மிக இலகுவாக 25:7 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் ஜப்னா பிரண்ட்ஸ் அணி இரண்டாவது சுற்றிலும் வெற்றி பெற்றுக்கொண்டது.

எனினும் பின்னர் 3 ஆவது சுற்றில் சுதாகரித்துக்கொண்ட றோயல் லீடர்ஸ் அணியினர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இதனால் மூன்றாம் சுற்றில் 25 : 27 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் றோயல் லீடர்ஸ் அணி வெற்றியைப் பெற்றுக் கொண்டது. தொடர்ந்து 4 ஆவது சுற்று மிகவும் விறுவிறுப்பானதாக அமைந்தது. இதில் இரு அணிகளும் மாறி மாறி புள்ளிகளைக் குவித்த வண்ணமிருந்தனர். இறுதி நேரத்தில் றோயல் லீடர்ஸ் தொடர்ச்சியாக இரு புள்ளிகளை எடுக்க 27:25 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் 4 ஆவது சுற்றிலும் றோயல் லீடர்ஸ் அணி வெற்றி பெற்றது.

தொடர்ந்து தீர்க்கமான 5 ஆவது சுற்று ஆரம்பமானது. இதில் ஜப்னா பிரண்ட்ஸ் அணி முதல் சுற்றுக்களில் விளையாடியதைப் போன்ற சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த 15:9 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் 5ஆம் சுற்று ஜப்னா பிரண்ட்ஸ் வசமானது. இதனால் கடும் போராட்டத்திற்கு மத்தியில் 3:2 சுற்றுக்கள் என்ற அடிப்படையில் ஜப்னா பிரண்ட்ஸ் போட்டியில் வெற்றி பெற்றுக்கொண்டது.

**ஜப்னா கிங்ஸை வீழ்த்தியது சுப்பர் கிங்ஸ்**

எச்.பி.எல். இன் 4 ஆவது போட்டி ஜப்னா கிங்ஸ் இற்கும் சுப்பர் கிங்ஸ் அணிக்குமிடையில் நடைபெற்றது. இதில் முதல் இரு சுற்றுக்களும் எந்த அணி வெற்றி பெறும் என கணிக்க முடியாத அளவிற்கு மிக விறுவிறுப்பாக அமைந்திருந்தன. முதல் இரு சுற்றுக்களிலும் 28:26, 25:23 என்ற புள்ளிகள் அடிப்படையில் சுப்பர் கிங்ஸ் அணி வெற்றி பெற்றிருந்தது. எனினும் 3 ஆவது சுற்றில் வெற்றி பெற வேண்டிய கட்டாயத்தில் களமிறங்கிய ஜப்னா கிங்ஸ் அணியினர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தனர். இதில் 25:18 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் ஜப்னா கிங்ஸ் அணி வெற்றி பெற்றுக்கொண்டது. இதனால் தொடர்ந்து 4ஆவது சுற்றும் நடத்த வேண்டிய தேவை ஏற்பட்டது. 4ஆவது சுற்றும் விறுவிறுப்பானதாக அமைந்திருந்தது. இதில் சுப்பர் கிங்ஸ் அணியினர் 25:23 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வென்று 3:1 சுற்று என்ற அடிப்படையில் போட்டியில் வெற்றியீட்டினார்கள்.

(ங-130)

## 'எச்.பி.எல்' கரப்பந்தாட்டம்

**இன்று மோதும் அணிகள்**

- ஜப்னா கிங்ஸ் எதிர் றோயல் லீடர்ஸ்
- ஜப்னா லயன்ஸ் எதிர் ஜப்னா பிரண்ட்ஸ்

# தெரிவு வலைப்பந்தாட்டம் ஞாயிறன்று வேம்படியில்

யாழ்ப்பாணம், ஜூலை 6

இலங்கை வலைப்பந்தாட்ட சம்மேளனத்தின் வழி நடத்தலில் மக்கள் வங்கியின் அனுசரணையுடன், 14 வயது மற்றும் 20 வயது பிரிவுப் பாடசாலை அணிகளுக்கிடையே நடத்தப்படவுள்ள வலைப்பந்தாட்டத் தெரிவுச் சுற்றுப் போட்டி நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

குறித்த சுற்றுப் போட்டியில் முதல் இரு இடங்களையும் பெறும் அணிகள் நாவலப்பிட்டியில் எதிர்வரும் 14ஆம், 15ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள அகில இலங்கை ரீதியான வலைப்பந்தாட்டத்தில் பங்குபற்றவுள்ளன. இதற்கான ஏற்பாடுகளை யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கம் மேற்கொண்டுள்ளது. அத்துடன் குறித்த சுற்றுப் போட்டியில் திறமையான வீராங்கனைகளும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

எனவே இந்தச் சுற்றுப் போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் பாடசாலை அணிகள் யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ.எப்.ஜே.ரூபசிங்கம் அல்லது செல்வி ராதை அருளம்பலம் (யாழ்.பல்கலைக்கழகம்) அல்லது மாவட்டச் செயலக வலைப்பந்தாட்டப் பயிற்றுநர் மனோன்மணி ஆகியோருடன் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ங-23)

# அரியாலை ஸ்ரான்லி அணியை வீழ்த்தியது தெல்லிப்பழை யூனியன்

வலி.வடக்கு, ஜூலை 6

யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் அமரர் வீ.டி.ஜெயரட்ணசிங்கம் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக 9 ஆவது ஆண்டாக நடத்தும் 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மட்டுப்படுத்திய கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஆட்டம் ஒன்றில் தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக்கழகம் அபார வெற்றியைப் பெற்றுள்ளது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற போட்டி ஆட்டத்தில் அரியாலை ஸ்ரான்லி விளையாட்டுக் கழகமும் தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன் விளையாட்டுக்கழகம் 50 பந்துப் பரிமாற்றம் நிறைவில் 8இலக்குகளை இழந்து 363 ஓட்டங்களைப் பெற்றது.

ஜான்சன் 92 ஓட்டங்களையும் ஆஜீசன் 84 ஓட்டங்களையும், தயாளன் 49 ஓட்டங்களையும் வைகுந்தன் 38 ஓட்டங்களையும், சுஜன் 35 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 35 ஓட்டங்களும் பெறப்பட்டன.

பந்து வீச்சில் ஸ்ரான்லி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த செல்வராசா 3இலக்குகளையும், துஷ்யந்தன், சுரேஷ் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் பிரசாந் ஒரு இலக்கையும் கைப்பற்றினார்கள்.

364 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஸ்ரான்லி விளையாட்டுக்கழகம் 29.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 160 ஓட்டங்களைமட்டுமே பெற்றது.

கஜதீபன் 44 ஓட்டங்களையும் குணாளன் 39 ஓட்டங்களையும் லெனின் 24 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 19 ஓட்டங்களும் பெறப்பட்டன.

பந்து வீச்சில் யூனியன் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சுஜன் 4 இலக்குகளையும், வைகுந்தன் 3 இலக்குகளையும், பிரசாந்தன், கலின் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கினையும் கைப்பற்றினார்கள். (ங-86)



வட மாகாண தடகளப் போட்டியில் 17 வயது ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் நிகழ்வில் வெற்றி இலக்கைத் தாண்டும் வீரர். [ங-23]

# புறப்பட்டது யாழ்.அணி

யாழ்ப்பாணம், ஜூலை 6

கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில் நடத்தப்படும் அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நாளை முதல் திங்கட்கிழமை வரை மூன்று தினங்கள் கிழக்குப் பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தச் சுற்றுப் போட்டியில் பங்குகொள்வதற்காக யாழ்.பல்கலைக்கழக உதைபந்தாட்ட அணியினர் இன்று வெள்ளிக்கிழமை மட்டக்களப்புக்கு பயணமாகினர்.

கடந்த வருட இந்தச் சுற்றுப்போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணியே சம்பியனாகிச் சாதனை படைத்தமை குறிப்பிடத்தக்கது.

(ங-23)

2012 ஆம் ஆண்டிற்கான வடமாகாண பாடசாலை விளையாட்டுப் போட்டியில் 15 வயது ஆண்களுக்கான ஈட்டி எறிதல் நிகழ்வில் மன்னார் இலகடிப் பிட்டி றோ.க.த.க. பாடசாலை மாணவன் செ.பிரியதர்சன் 3ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டார். [ங-23]



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 1 ஆம் இடம்



# இரு துருவங்கள் மோதும் அரையிறுதி



விம்பிள்டன் ரென்னிஸ் ஒற்றையர் பிரிவு அரையிறுதிக்கு சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், நடப்பு சம்பியன் செர்பியாவின் நோவக் ஜோகோவிச் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் முன்னேறினர்.

லண்டனில், விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் தொடர் நடக்கின்றது. இதில் நேற்று முன்தினம் நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், ரஷ்யாவின் மிக்கைல் யூஸ்னியை சந்தித்தார். இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய பெடரர் 6-1, 6-2, 6-2 என்ற நேர் செற் கணக்கில் மிகச் சுலபமாக வெற்றி பெற்று, அரையிறுதிக்கு முன்னேறினார்.

**ஜோகோவிச் முன்னேற்றம்**

மற்றொரு காலிறுதியில் உலகின் முதல் தர வீரரான நோவக் ஜோகோவிச், ஜேர்மனியின் புளோரியன் மேயரை எதிர்கொண்டார். இதில் அசத்தலாக ஆடிய ஜோகோவிச் 6-4, 6-1, 6-4 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றார்.

அரையிறுதியில் பெடரர், ஜோகோவிச் மோதுகின்றனர்.

**பிரையான் ஜோடி வெற்றி**

ஆண்கள் இரட்டையர் பிரிவு மூன்றாவது சுற்றில் அமெரிக்காவின் மைக்கேல், பாப் பிரையான் ஜோடி பிரான்சின் அர்னாடு சிலிமண்ட், மைக்கேல் லோட்ரா ஜோடியை சந்தித்தது. இதில் பிரையான் ஜோடி 7-6, 6-4, 3-6, 4-6, 6-2 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறியது. (5)



இலங்கை கிரிக்கெட் அணியின் தலை சிறந்த துடுப்பாட்ட வீரரான குமார் சங்ககார, பாகிஸ்தான் அணிக்கு எதிராக இடம்பெற்று வருகின்ற டெஸ்ட் தொடரில் அசத்தியதைத் தொடர்ந்து, ஐ.சி.சி டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் மீண்டும் முதலிடத்தை பிடித்துள்ளார். ஐ.சி.சியினால் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ள தரவரிசைப் பட்டியலில், மேற்கிந்தியத்தீவுகளின் சந்தர்போலை வீழ்த்தி முதலிடத்தை பிடித்தார்.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது பாகிஸ்தான் அணி. இதுவரையில் இரண்டு டெஸ்ட் ஆட்டங்கள் நிறைவடைந்திருக்கின்றன. காலியில் இடம்பெற்ற முதலாவது டெஸ்டில் இலங்கை அணி வெற்றியைப் பெற்றதுடன் குமார் சங்ககார முதலாவது இன்னிங்ஸில் ஆட்டமிழக்காமல் 199 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் ஓர் ஓட்டத்தினையும் பெற்றார். இந்த ஆட்டத்தில் இலங்கை அணி வெற்றி பெற்றதுடன் ஆட்டநாயகன் விருதும் சங்காவுக்கு கிடைத்தது. அத்துடன் டெஸ்ட் தரவரிசையில் 5 ஆம் இடத்தில் இருந்த சங்கா 2 ஆம் இடத்தைப் பிடித்தார்.

இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் சங்கா முதல் இன்னிங்ஸில் 192 ஓட்டங்களையும், இரண்டாவது இன்னிங்ஸில் ஆட்டமிழக்காது 24 ஓட்டங்களையும் பெற்றார். தொடர்ச்சியாக இரட்டைச் சதத்தை இரண்டு டெஸ்டிலும் நெருங்கினார் சங்கா.

இந்த நிலையில் நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட ஐ.சி.சி தரவரிசையில் துடுப்பாட்ட வீரர்களுக்கான பட்டியலில் மீண்டும் முதலிடத்தைப் பிடித்தார். 892 புள்ளிகளுடன் சங்ககார முதலிடத்தையும் இரண்டாவது இடத்தை 856 புள்ளிகளுடன் மேற்கிந்தியத்தீவுகளின் சந்தர்போல் கைப்பற்றியுள்ளார். தொடர்ந்து ஏ.பீ.டீ.வில்லியர்ஸ் (தெ.ஆ), கலிஸ் (தெ.ஆ), யுனிஸ்கான் (பாக்.), மைக்கல் கிளார்க் (ஆஸி.), அம்லா (தெ.ஆ), ரோஸ் ரெய்லர் (நியூஸி.), குக் (இங்.), சிமித் (தெ.ஆ) (5)

# முதல் முறையாக பிரேசில் தரவரிசையில் பின்தங்கியது


'பீபா' உலக தரவரிசைப் பட்டியல் நேற்று வெளியிடப்பட்டுள்ளது. இந்தப் பட்டியலில் பிரேசில் அணி 11 ஆவது இடத்தையே பிடித்துள்ளது. கடந்த 1992 முதல் வெளியிடப்பட்டு வரும் 'பீபா' தரவரிசைப் பட்டியலில் முதல் 10 இடத்துக்குள் பிரேசில் இடம் பெறாதது இதுவே முதல்முறை. கடந்த பட்டியலில் பிரேசில் அணி 5 ஆவது இடத்தில் இருந்தது. நடப்பு பட்டியலில் 6 இடங்கள் பின்தங்கி அந்த நாட்டு ரசிகர்களுக்கு அதிர்ச்சியை அளித்துள்ளது.

இந்த மாத பட்டியலில் வழக்கம் போல் ஸ்பெயின் அணி 1691 புள்ளிகளுடன் முதலிடத்தை பிடித்துள்ளது. கடந்த பட்டியலில் 12 ஆவது இடத்தில் இருந்த இத்தாலி இந்த பட்டியலில் 6 இடங்கள் முன்னேறி 6 ஆவது இடத்தை பிடித்துள்ளது. ஜேர்மனி அணி மூன்றாவது இடத்தையும் இங்கிலாந்து அணி 4 ஆவது இடத்தையும் பெற்றுள்ளன. கடந்த பட்டியலில் 2 ஆவது இடத்தில் இருந்த உருகுவே இப்போது 3 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது.

கடந்த பட்டியலில் 10 ஆவது இடத்தில் இருந்த போர்த்துக்கல் இந்த முறை 5 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது. ஐரோப்பிய கிண்ண தொடரில் முதல் சுற்றிலேயே வெளியேறிய நெதர்லாந்து அணி 4 ஆவது இடத்தில் இருந்து 8 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டது. ஆர்ஜென்டீனா 7 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. (5)



# அதிரடி வீரர்கள் அப்ரிடி, கெய்ல் எஸ்.எல்.பி.எல். நட்சத்திர வீரர்கள்



அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள இலங்கையின் 'ரி-20' தொடரான ஸ்ரீலங்கா பிறீமியர் லீக் தொடருக்கான 'ஐகன்' வீரர்கள் என்று அழைக்கப்படும் அந்த அணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நட்சத்திர வீரர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர். இதில் இரண்டு அணிகளுக்கான 'ஐகன்' வீரர்களாக வெளிநாட்டவர்களான சயிட் அப்ரிடி, கிறிஸ் கெயில் ஆகியோர் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

7 அணிகள் பங்குபற்றவுள்ள இந்த எஸ்.எல்.பி.எல். தொடரில் கிழக்கு மாகாணத்தை அடிப்படையாகக் கொண்ட நகெனஹிர அணியின் 'ஐகன்' வீரராக சயிட் அப்ரிடியும், ஊவா மாகாணத்தை அடிப்படையாகக் கொண்ட ஊவா யுனிக்கோன்ஸ் அணியின் 'ஐகன்' வீரராக அதிரடி வீரர் கிறிஸ் கெயிலும் நியமிக்கப்பட்டுள்ளனர். ஏனைய அணிகளின் 'ஐகன்'' வீரர்களாக இலங்கையின் முக்கிய வீரர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தை அடிப்படையாகக் கொண்ட பஸ்னாஹிர பியர்ஸ் அணியின் 'ஐகன்' வீரராக திலகரட்ண டில்ஷானும், மத்திய மாகாணத்தை அடிப்படையாகக் கொண்ட கந்துரட்ட கைற்ஸ் அணியின் 'ஐகன்'' வீரராக குமார் சங்ககாரவும், தென் மாகாணத்தை அடிப்படையாகக் கொண்ட றுகுண றைனோஸ் அணியின் 'ஐகன்'' வீரராக லசித் மலிங்கவும், வடக்கு மாகாணத்தை அடிப்படையாகக் கொண்ட உத்துர ஓரிக்ஸஸ் அணியின் 'ஐகன்'' வீரராக முத்தையா முரளிதரனும், வடமேல் மாகாணத்தை அடிப்படையாகக் கொண்ட வயம்ப வோல்வ்ஸ் அணியின் 'ஐகன்' வீரராக மஹேல ஜெயவர்தனவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தியாவின் ஐ.பி.எல். தொடரின் அமைப்பில் நடாத்தத் திட்டமிடப்பட்டுள்ள இந்தத் தொடரில் ஒவ்வொரு அணியிலும் 6 வெளிநாட்டு வீரர்கள் அனுமதிக்கப்படவுள்ளதோடு, விளையாடும் பதினொருவர் அணியில் 4 வெளிநாட்டு வீரர்கள் அனுமதிக்கப்படுவர். அத்தோடு விளையாடும் பதினொருவர் அணியில் 21 வயதிற்குட்பட்ட உள்ளூர் வீரரொருவரும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். (5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருக! வருக! வருக!



எமது திணைக்களத்தில்
செயலாளராக
கடமையாற்றி
ஜப்பான் புலமைப்பரிசிலில்
பொது முகாமைத்துவ
முதுகலைமாணிப்
பட்டத்தைப் பெற்றுக்
கொண்டு திரும்பும்
**திரு. பொ.வாகீசன்**
(இ.நி.சே. - III)
அவர்களை வாழ்த்தி
வரவேற்கிறோம்.

**கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு**
**வடமாகாணம்**

சி/1220 (5-7-22)


# செயற்கைக் கால் வீரர் ஒலிம்பிக்கில்



ஒலிம்பிக்கில் பங்கேற்கும் இரு செயற்கைக் கால் பொருத்தப்பட்ட முதல் வீரர் என்ற பெருமை பெறுகிறார் ஆஸ்கர் பிஸ்டோரியஸ். இவரது பெயர் 4×400 தொடர் ஓட்டத்துக்கான தென் ஆபிரிக்க அணியில் இடம் பெற்றுள்ளது. லண்டனில் 30வது ஒலிம்பிக் (ஜூலை 27 - ஆக., 12) போட்டி நடக்க உள்ளது. இதற்கான 400 மீ., ஓட்டத்தில் தகுதி பெறும் வாய்ப்பை பிஸ்டோரியஸ் 0.22 வினாடிகளில் பரிதாபமாக இழந்தார்.

இந்நிலையில் 4× 400 மீ., தொடர் ஓட்டத்தில் பங்கேற்க, தென் ஆபிரிக்கா சார்பில் பிஸ்டோரியஸ், 25,தேர்வு செய்யப்பட்டுள்ளார். 11 மாத குழந்தையாக இருக்கும் போது பிறவியிலேயே ஏற்பட்ட பாதிப்பு காரணமாக, இவரது இரண்டு கால்களும்(முழங்காலுக்கு கீழே) அகற்றப்பட்டன. பின் ''கார்பன் பைபரினால்' ஆன செயற்கைக் கால் பொருத்தப்பட்டது. விடாமுயற்சி காரணமாக தடகளத்தில் முத்திரை பதித்தார். மற்ற சாதாரண வீரர்களுக்கு நிகராக ஓடி வியப்பு ஏற்படுத்தினார். ''பிளேடு ரன்னர்' என செல்லமாக அழைக்கப்பட்ட இவர், 2008ல் நடந்த பீஜிங் ஒலிம்பிக் போட்டிக்கான 400 மீ., ஓட்டத்தின் தகுதிச் சுற்றில் தோல்வி அடைந்தார். கடந்த ஆண்டு தென் கொரியாவில் நடந்த உலக தடகள சாம்பியன்ஷிப் தொடரின் 4×400 மீ., தொடர் ஓட்டத்தில் இரண்டாவது இடம் பிடித்து வெள்ளிப் பதக்கம் வென்றார். இதன்மூலம் இவருக்கு லண்டன் ஒலிம்பிக்கில் விளையாடும் வாய்ப்பு கிடைத்தது. தற்போது மற்ற வீரர்களுடன்சேர்ந்து ஒலிம்பிக்கில் பங்கேற்க உள்ளார். தவிர, மாற்றுத் திறனாளிகளுக்கான பாராலிம்பிக் விளையாட்டு போட்டிக்கும் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இதில் இவர் 100, 200, 400 மற்றும் 4×400 மீ., ஓட்டங்களில்பங்கேற்க உள்ளார்.

இதுகுறித்து பிஸ்டோரியஸ் கூறு கையில், ''இந்தவாய்ப்பை அளித்த கடவுளுக்கு நன்றி'' என்றார்.


## SUBRA (14)
சித்தன்கேணி

**உயிரியல்**

பொன். திவாகரன்
2014 A/L - அங்கிகளின் பல்வகைமை
Sat - Sun - 6 - 7 pm
2013 A/L - ஆதாரமும் அசைவும்
Sat - Sun 7.00 - 8.30 pm & Paper Class
ஆரம்பம் - 07.07.2012 அனுமதிக்கு முந்துங்கள்
(சி/1242)(8-14)

## மாபெரும் கருத்தரங்கு

**தமிழ்**

(க.பொ.த. உயர்தரம்)
ந.சத்தியவேந்தன்
B.A.(Hons),M.Phil
இடம் : பொருளியற் கல்லூரி
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
காலம்: 17.07.2012 - செவ்வாய்
18.07.2012 - புதன்
19.07.2012 - வியாழன்
காலை 9 மணி
* வெளி மாணவர்களும் பங்கு பற்றலாம்.
* 10.07.2012 இற்கு முன் உங்கள் பதிவை மேற்கொள்ளவும்
(சி/1236)(5-7-22)

## Walk - in - Interview
### Visiting Lecturers - Auto CAD

Applications are invited from suitably qualified candidates to fill the above vacancies in our Campus.

Those who are interested please meet us on 9th July from 4.00 pm to 6.00 pm with all the relevant documents.

**IIS CITY CAMPUS**
200,Sivan Pannai Road, Jaffna.
T.P :021 222 8060 / 021 4900 900
E-mail : info@iis.edu.lk ,Web :iis.edu.lk
(சி/1241)

## விற்பனைக்கு

கொம்மியூனிக்கேசன் மற்றும் நெட்கபே உடைய கணினிகள், பக்ஸ், போட்டோ பிரதி இயந்திரம், லெமனெற் இயந்திரம் மற்றும் தொலைத் தொடர்பு நிறுவனத்தை நடத்தக் கூடிய அனைத்து உபகரணங்கள் உடன் விற்பனைக் குண்டு.

இல.471, நாவலர்வீதி,
யாழ்ப்பாணம். (20092)(3-7)
தொடர்புகளுக்கு :
077 8025702

## போட்டிப்பரீட்சை விசேட கருத்தரங்குகள்

★ SLAS Ltd சனி, ஞாயிறு 9 மணி தொடக்கம் 2.30 வரை
★ Accountant service மாதிரி வினாத்தாள் வகுப்பு ஒவ்வொரு சனியும் 1 மணி - 6 மணிவரை
★ Audit service கணிதம் சனி, ஞாயிறு 10 மணி
★ முகாமைத்துவ உதவியாளர் திறந்த மட்டுப்படுத்தப்பட்டது. ஒவ்வொரு ஞாயிறும் 1 மணி - 5 மணிவரை

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி கொமர்சல் வங்கி அருகில்)
தொடர்பு - 0754164564
(சி/1237)(7.22.3)

## பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம்

விவசாய விஞ்ஞானம்
விவசாய தொழில்நுட்பம்

A/L - 2013 - 12.00 PM
A/L - 2014 - 08.00 A.M

M. விஷ்ணு (B.Sc Agric)

Note: இணுவில் பொருளியற் கல்லூரி, பாரதி சித்தன்கேணி. இரு நிறுவனங்களிலும் வகுப்புகள் நடைபெறுகின்றன.
(சி/1235)(7-8-22)

## மாபெரும் இலவச கண் சத்திரசிகிச்சை முகாம்



விழிவெண் படலத்தினால் பாதிக்கப்பட்ட வறிய மக்களுக்கான கண் சத்திரசிகிச்சை லண்டன் மாநகரில் இருந்து வருகை தரும் கண் சத்திரசிகிச்சை நிபுணர்களினால் முற்றிலும் இலவசமாக யாழ்ப்பாணத்தில் நடைபெற உள்ளது.
இதற்கான பயனாளிகளைத் தெரிவு செய்யும் முகாம் Dr.S.குகதாசன் அவர்களினால் மேற்கொள்ளப்படவுள்ளது.
இதில் கலந்து கொண்டு பயனடையுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இடம் : யாழ். இந்துக் கல்லூரி
காலம் : 08.07.2012 (ஞாயிறு)
நேரம் : காலை 8 மணி

திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகம்

விளம்பர அனுசரணை

SUPER SHOES
154, Navalar Road, Jaffna
T.P : 021 222 6809

ASOKA JEWELLERS
Tel : 021 222 6290
No.111, Kasthuriar Road, Jaffna

SHIVAN MOTORS STORES
No.103, Kandy Road, Chavakachcheri
Tel - +94 212270188

(20081)(8-22-7)

## வருடாந்த ஆடித் தள்ளுபடி



அதிரடி விலைக் கழிவுடன்

சமையலறை மின்சார உபகரணங்கள்,
Bathroom கொமட் ரைல் வகைகள்,
Fan வகைகள்

# AHIEZER SUPPLIERS

காலம்: 02.07.2012 - 15.07.2012 வரை



289, Brown Road,
Kalatti Junction, Jaffna

(யாழ்.பல்கலைக்கழகத்துக்கும் தொழில் நுட்பக் கல்லூரிக்கும் அண்மையில்) T.P-+94(0) 21 5100700, Fax- +94 (0) 21 2220227


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.